பொன்னி

பொருளடக்கம் NA-4

மலர் 5	ஏப்ரல் 29, 1951	இதழ் 4

திருவள்ளுவர் ஆண்டு 1982 சித்திரைத் திங்கள் 16ம் நாள்

விலை அணா 8

தமிழ்நாட்டு வால்ட் விட்மன்

பாரதிதாசனார் ஈடும் எடுப்புமில்லாத புரட்சிக் கவிஞர். தமிழ் நாட்டு 'வால்ட்விட்மன்' என்ற பெயர் அவருக்கே பொருந்தும். அவருடைய அறுபதாமாண்டு நிறைவு விழாவையொட்டி 'பொன்னி' காரியாலயத்திலிருந்து ஒரு மலர் வெளியிடப்போவதையறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பொன்னி வாழ்க! புரட்சிக் கவிஞர் வாழ்க!

— கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை —

புத்தேரி 25—4—1951

தமிழ் மறுமலர்ச்சியின் முதல் தூதுவன் பாரதி. அவன் தொடங்கிய பணியைக் குறைவற முழு அளவில் இன்று நிறைவேற்றி வருபவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

தமிழுக்கு இனிமை என்ற பொருள் பழங்காலந்தொட்டே உண்டு; இன்று தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் புதுப் பொருள் பாரதிதாசன்!

தமிழைப் புறக்கணித்தல் என்னும் கோடை வெப்பம் தமிழ்ச் சமுதாயத்தை இடைவிடாது வருத்திய நிலையில், "ஞாலமெல்லாம் தமிழ் தமிழர்களே, புவி நாம் எனவே குதித்தாடுவமே" என்ற இன்னிசை கேட்டனர் தமிழர். அங்கே குளிர் மலர்ச் சோலையாக விளங்கினார் கவியரசர் பாரதிதாசன்!

பாரதிதாசன்—கவிக்குயிலாக, தமிழர் தேவைகளை, ஒழுக்கங்களை, பண்புகளை, குறைகளை இனிய தமிழில் பாக்களாக்கினார். படித்த தமிழர் தங்கள் தேவைகளை உணர்ந்தனர்; ஒழுக்கங்கள், பண்புகள் யாவை எனக் கண்டனர்; குறைகளை அறிந்து திருத்திக் கொள்ள முற்பட்டனர்.

'குடும்ப விளக்கு' தமிழர் வாழ்க்கையின் விளக்கமாகப் புலப்பட்டது; 'அழகின் சிரிப்பு' இயற்கை அன்னையின் பேரழகைப் பல வண்ணங்களில் எடுத்தியம்பியது. 'இசையமுது' தமிழ் நாட்டில் தமிழிசை என்பது தேன் தேன் எனத் தெளிவாக்கிற்று; 'பாண்டியன் பரிசு' தமிழ்க் கவிதையின் சிகரத்தில் தமிழருக்குக் கிடைக்கும் பரிசைச் சுட்டிக் காட்டிற்று; 'சேரதாண்டவம்' ஆடல் தமிழின் சொல்லொணாச் சிறப்பை அழகு தமிழால் கோலமிட்டுக் காட்டியது.

தமிழர் படித்தனர்; நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்று மகிழ்ந்தனர்; 'ஒக்கவே வாழ்க மக்காள்' என்ற கடலின் பேரொலியும், 'தடைக் கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டென'த் தமிழ்த் தாய் சிரிப்பொலியும் தமிழ்ச் செவிகளில் இன்பத்தைப் பாய்ச்சின; 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?' என்ற இசை வெள்ளம் இன்ப வெள்ளமாகப் பெருக்கெடுத்தது.

தமிழ் மக்கள் கவிதை என்றால் பாரதிதாசன் என்றனர்; பாரதிதாசன் என்றால் தமிழ் என்றனர்; தமிழ் என்றால் இனிமை என்றனர்—'இனிமைத் தமிழ் மொழி எமது' என்று பெருமைப் பட்டது தமிழ்க்குலம்!

இத்தகைய தமிழுணர்வுக்குக் காரணமாக விளங்கிய கவியரசருக்கு இன்று அறுபது நிறைகிறது; தமிழ்நாடெங்கும் மணிவிழா நிகழ்கிறது என்றால் தமிழர்க்குக் கட்டி வெல்லத்தை விட இனிக்கும் செய்தியல்லவா இது! எனவேதான் தமிழ்ப் பெருமக்கள் களிப்புக் கடலில் திளைக்கின்றனர்! "கவியரசர் வாழ்க! வாழ்க" எனப் பெருமுழக்கம் எழுப்புகின்றனர்.

தமிழ்ப் பெருமக்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல் துறையாளர், புலவர்கள் அனைவரும் ஒருமுகமாகத் தமிழ்க்கவிஞர்களுள்ளே ஈடும் எடுப்புமற்ற பெருங்கவிஞர் பாரதிதாசனே என்று உறுதியிட்டுப் பைந்தமிழை வாழ்த்துகின்றனர்; ஆடல் கலைஞர்களும், நாடகப் புலவர்களும், இசைவாணர்களும், இயற் புலவர்களும், நகைச்சுவை மன்னர்களும், கவியரசர் மணிவிழாவை 'முத்தமிழும் காணீரோ' என அழைக்கும் கலைவிழாவாக நிகழ்த்துகின்றனர், திருச்சியில். இளைஞர்கள், கவியரசரின் வழி கவிதையாக்கும் ஆற்றல் கைவரப்பெற்ற பாரதிதாசன் பரம்பரையினர், கவியரசரைத் தம் கவிதைகளால் சிறப்பிக்கின்றனர். பெரும் புலவர்களும், அறிஞர்களும் 'சங்க காலத்திற்குப் பின்னர் நாம் காணும் இயற்கவிஞன் பாரதிதாசனே' எனத் தம் ஆராய்ச்சி முடிபுகளைத் தமிழ்நாட்டுக்கு உரத்த குரலில் கூறுகின்றனர்!! தமிழ்நாட்டில் தமிழ் வாழவேண்

டும்; தமிழர் வாழவேண்டும்; தமிழ்ப் பண்பு வாழவேண்டும் என நினைக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் 'இன்று போல் என்றும் வாழ்க' 'இனிக்கும் கவிதைகள் தந்து வாழ்க' என்று வாழ்த்துரை கூறி வணங்குகின்றான்!

இவ்வாறு பல்லாயிரக்கணக்கான தமிழ் வாழ்த்துரைகளோடு "பொன்னி" தன் வாழ்த்துரையையும் இணைக்கிறது; 'மணிவிழா மலர்' எனச் சிறு அளவில் வெளிவரும் இம்முயற்சியையும் கவியரசர் திருமுன்னர்ப் படைக்கிறது; கவியரசரைப் பற்றிப் பாராட்டுக் குவியல் எனத் தகும், எண்ணற்ற அறிஞர்களின் கருத்துரைகளைப் 'பொன்னி' திரட்டித் தனியே அளித்திருக்கிறது—அவை புரட்சிக் கவிஞருக்குப் புகழ் மாலையாக, இன்று தமிழகம் வழங்கும் மணிவிழாப் பரிசாக மிளிர வேண்டுமெனப் 'பொன்னி' விரும்புகிறது.

வாழ்த்தொலிகளிடையே, தமிழ் மக்கள் கடமைகளையும் 'பொன்னி' நினைவூட்ட விரும்புகிறது. கவிபரசரின் நூல்கள் இன்னும் முறையாக, அழகியவையாக வெளிவரவில்லை. அவை தமிழ்நாட்டின் சொத்து—போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் நன்மக்களைச் சேர்ந்தது—எனவே தமிழர் கவியரசர் நூற்கள் சிறக்க வெளிவரும் வகைக்கு ஒரு திட்டம் காண வேண்டும். அவர்தம் நூற்கள் பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் இடம்பெறத்தக்க உயர்வு வாய்ந்தவை. போலிகளைப் பெரிதெனப் போற்றும் புன்மை இன்னும் அகலாக் காரணத்தலேயே, பாரதிதாசனாரை இன்னும் கலைக் கழகங்கள் 'அடையாளம்' கண்டுகொள்ளவில்லை. தமிழ்ப் பெருமக்கள் இப்புறக்கணிப்பைக் களைந்தெறியக் கிளர்ந்தெழ வேண்டும். தமிழிசை இயக்கத்துக்கு நல்ல அரண் பாரதிதாசன் பாடல்கள்! ஆனால் வானொலி நிலையமோ, மற்ற இசைபரங்குகளோ, அல்லது இசைவாணர்களோ தக்கவாறு பாரதிதாசனை மனத்துட்கொள்ளவில்லை என்று கூறுவது மிகையாகாது. எங்கோ எப்பொழுதோ சிலர் பாடுகிறார்கள். அவ்வளவுதான். இந்நிலை மாறவேண்டும். மாறினால் தமிழிசை இலக்கியம் புதுச் சொத்தைப்

பெறும். ஆடல் தமிழிலும் மாறாத காதல் கொண்ட கவியரசரின் கவிதைகளிற் டல நடனப் பகுதிக்கு ஏற்றவையாக விளங்குவதில் வியப்பில்லை — நாட்டிய அரங்கங்கள் பாரதிதாசனை விழியுண்ணக் காட்டும் கலையரங்கங்களாக மாறவேண்டும். வங்காளத்தில் தாகூருக்கு விஸ்வபாரதி கண்டார்கள். தமிழர் பாரதிதாசனார்க்கு அத்தகைய தொரு கலை நிலையத்தைக் காணவேண்டாமா? அவர் தம் எண்ணங்கள் நாட்டை ஆளவேண்டும். இந்தக் கருத்து மேலோங்கினால் பாரதிதாசனாரின் கலைப் பண்பு தமிழகத்தை முழு அளவில் கவர முடியும். பெருமக்கள் இவற்றை யெல்லாம் சிந்தனை செய்யவேண்டும்.

பாரதிதாசனார்க்கும் தமிழுக்கும் தொடர்பு அவர் தம் கவிதைச் செல்வத்தாலேயே! அவரைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் அவர் தம் கவிதையைப்பற்றி நினைக்கும் பழக்கத்தைத் தமிழர் யாவரும் மேற்கொள்ளவேண்டும். ஏனெனில் பல்லாண்டு கழித்து வரப்போகும் எதிர்காலத்தில் பாரதிதாசன் என்று நாம் இப்போது காணுகிற 'மனித உடம்பு' இராது; அவருடைய கவிதைகளே பாரதிதாசனை நமக்கு அறிமுகப்படுத்தும்!


கவியரசருடன் கருத்து வேற்றுமை கொண்டோர் பலருண்டு; எனினும் அவர் தம் கவிதைகளில் மனமொன்றித் தம்மை மறவாத தமிழரே இல்லையெனலாம். எத்தனையோ கோணங்களில் தமிழ் நாட்டைக் காணும் ஐம்பதுக்கு மேற்பட்ட அறிஞர்களின் கருத்துரைகளை ஊன்றிப் படிப்பார்க்கு இந்த உண்மை புலனாகும்!

தமிழகம் மணிவிழாக் காணும் கவிஞரைப் "பல்லாண்டுவாழ்க!" என வாழ்த்துகிறது; "அழியா இலக்கியங்கள் தமிழுக்கு நல்குவாய் பெருந்தமிழா" என்று அன்பழைப்பு விடுக்கிறது!

பாரதிதாசன் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்று தமிழ்ப் பெரு மக்கள் உவகை பூக்கிறார்கள்! அந்த உவகை "பாடிக் கொண்டே பருகுவை நறுந்தேன்; பருகிக்கொண்டே பாடுவை தேனீயே" என்று தமிழர்க்கு வாய்த்த கவித் தேனீயை உலகுக்கு அறிமுகப்படுத்துகிறது!

பாரதிதாசன் வாழ்க!

மகிழ்ச்சித் திருக்கூத்து



பாரதிதாசன்

தென்றல் அடிக்கையில்
பச்சிளங் கீற்றுச்
சிலிர்த்து நிலைகுலைந்
தாடுதல் போல்
இன்றைக்கு நீகொண்ட
பூரிப்பின் காரணம்
என்னடி மின்னல்
இடைச் சிறுக்கி?
நின்றஉன் கால்கள்
நிலைக்கவில்லை கடல்
நீராய் நெளிந்தது
பொன்னுடலும்!
அன்றைக்குச் சென்றவன்
என்மகன் வீட்டை
அடைந்த மகிழ்ச்சித்
திருக் கூத்தோ!

மாற்றி யணிவதும்
சேலையினை, மலர்
வாங்கி யணிவதும்
கூந்தலிலே, ஒரு
காற்றென ஓடிச்
சிரிக்கும் முகத்துக்குக்
கண்ணாடி காட்டிப்
பின் மீளுவதும்
நேற்றில்லையே! இன்று
பூரிப்ப தென்னடி
நீள் புருவத்து
நிலாப் பிறைச்சி?
வேற்றூர்க்குச் சென்றவன்
என்மகன் வீட்டுக்கு
மீண்ட மகிழ்ச்சித்
திருக் கூத்தோ!

கறிகள் சமைத்தபின்
தெருவினில் விற்றிடும்
காய்களை ஓடி
அழைப்பதுவும்,
சிறுவிரல் மோதிரம்
பார்ப்பதும், பார்த்து
மகிழ்வதும், செவ்விதழ்
சேர்ப்பதுவும்,
அறையினை நோக்கலும்
நேற்றில்லையே, நீ
அப்படிப் பூரிப்ப
தேதுக்கடி?
பிறநகர் சென்றவன்
என்மகன் ஊர்வரப்
பெற்ற மகிழ்ச்சித்
திருக் கூத்தோ!

கச்சையை நோக்கலும்,
கண்கள் மலர்வதும்
கைவளையைச் சரி
செய்வது வும்
மொச்சையை உரிக்கையில்
முன்கட்டில் ஓடி,மு
ழங்கும் சிலம்படி
மீளுவதும்,
பச்சைப் பசுங்கிளி
தானெனக் கொஞ்சலும்
பார்த்திலனே இன்று
பூரிப்பதேன்?
அச்சீமை சென்றவன்
என்மகன் வீட்டை
அடைந்த மகிழ்ச்சித்
திருக் கூத்தோ!



- தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரனார் -

திருச்சியில் ஒரு மணிவிழா நடைபெற்று வருகிறது. அது தமிழ்விழா; தமிழ்நாட்டு விழா; தமிழ்ப்பாட்டு விழா. அவ்விழாவை, இயல் வாழ்த்துகிறது; இசை வாழ்த்துகிறது; நாடகம் வாழ்த்துகிறது.

மணிவிழாவுடையார் யார்? புதுவைத் தோன்றல் சுப்புரத்தினம்—பாரதிதாசன். அவர் வாழ்க!

கடவுள் பாட்டு; கருணை பாட்டு; நிலை பாட்டு; வெண்வீதி பாட்டு; ஞாயிறு பாட்டு; திங்கள் பாட்டு; நானிலம் பாட்டு; எல்லாம் பாட்டு—பாட்டே.

எல்லாவற்றையும் பாட்டாக நோக்கும் நெஞ்சில் பாட்டு முகிழ்க்கும். அதனை எழுத்தோவியமாக அமைக்கும் பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை. தோழர் பாரதிதாசனுக்கு அப் பேறு எளிதில் வாய்த்தது. இது கருவிலுற்ற திருவேயாகும்.

தோழருடன் சிறிது நேரம் பேசினும் அவர்தம் குழந்தைமனம் புலனாகும். குழந்தைமனம் பாட்டுப் புலம் என்பதை விளக்கவேண்டுவதில்லை.

புதுவைத் தமிழ் வைப்பு—சுப்புவினிடத்திருந்து போங்கி வழிந்த பாமணிகள் பலப்பல. அவற்றுள், கருத்து வேற்றுமை உண்டு. வேற்றுமை என் நெஞ்சைக் கவர்வதில்லை; பாட்டே என் நெஞ்சைக் கவரும். இது சுப்புவின் பாட்டுத்திறம் என்று கூறாது வேறென்ன கூறுவது?

போதமைப் போழில்—புதுமை மலர்—தமிழ்த்தேன்—பாச்சுவை—பாரதிதாசன் வாழ்க! வாழ்க! வாழ்க பல்லாண்டு!

பாரதிதாசன்

வாணிதாசன்

முடியரசன்

மு. அண்ணாமலை

கோவை இளஞ்சேரன்

வெ. குருசாமி

சி. திருநாவுக்கரசு

இராம. வே. சேதுராமன்

ஆகிய கவிஞர்கள் கலந்துகொள்ளும்

மணி விழாக் கவியரங்கம்



தமிழ் மக்களின்

ஆசான்

வீழ்ச்சியுற்ற தமிழருக்கு வலிவூட்டும் குன்றம்!
மெல்லியரின் வாழ்விற்குப் புரட்சிவழிப் பாட்டை!
சூழ்ச்சியினால் வளர்ந்தமதக் கோட்டைக்கு வேட்டு!
ஒருசிலரின் சொத்தாக இருந்ததமிழ் ஊற்றைத்
தாழ்ச்சியின்றித் தமிழ்நாட்டு மக்களெலாம் உண்ண
எளிமையோடு சுவைகூட்டிச் சரிசெய்த வள்ளல்!
ஆழ்கடலின் முத்தொத்த அறிவுரையை நல்கும்
எனதாசான் கவியரசர்! தமிழ்மக்கள் ஆசான்!

சிரிக்கின்ற அழகெல்லாம் செஞ்சொல்லால் தீட்டிச்
செந்தமிழின் நயம்விளங்கச் செய்திட்ட ஆசான்!
'வரிப்புலியே! இளந்தமிழா!' எனவிழித்து நாட்டில்
வளர்கொடுமை அறியாமை வறுமையினைக் காட்டி
"ஒருநாளும் தயங்காதே! தமிழ்வாளைத் தூக்கு!
ஒண்தமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஏற்றம்
குறைப்பாருக் கஞ்சாதே!" எனநாளும் ஊக்கும்
எனதாசான் சொல்லேறு! தமிழ்மக்கள் ஆசான்!

செக்கிழுக்கும் மாடொத்த தமிழ்ப்புலவர் உள்ளச்
சிறுமைக்கும் எழுத்திற்கும் அறிவூட்டும் ஆசான்!
கொக்கொத்த ஆரியரின் பசப்புமொழி கேட்டுக்
கும்மிருட்டில் வாழ்வோரின் குடும்பவிளக் கன்னோன்!
மிக்கநறுந் தமிழ்த்தென்றல்! முத்தமிழின் தோற்றம்!
வேறெவர்க்கும் பணியாத தமிழ்நாட்டு வேங்கை!
இக்காலத் தமிழ்நாட்டின் நிலைஉணர்த்தப் பாடும்
எனதாசான் கவியரசர் தமிழ்மக்கள் ஆசான்!

—வாணிதாசன்—





தமிழ் மக்களின்

தந்தை

தீமைதரும் தமிழ்ப் பகைவர் தம்மைச் சார்ந்து
திருநாட்டின் பெருமையினை, தமிழ்ப்பண் பாட்டை,
ஏமமுறும் இலக்கியமாம் செல்வந் தன்னை,
இத்தனையும் அழித்தொழித்தோம்; அந்த நாளில்
ஊமைஎன இருந்தானா? இல்லை இல்லை;
உயர்தந்தை கடமைகளை உணர்ந்த மேலோன்
தீமைஎன இடித்துரைத்தான் பகைவர் தம்மைச்
சேராதீர் எனப்புகன்றான் எங்கள் தந்தை!

இனிமைமிகு தமிழ்மொழியைப் படித்தல் இன்றி
இங்குவந்த சழக்கரையே கூடி நின்று
கனிவுதரும் அவர்வஞ்சப் பேச்சில் சிக்கிக்
கண்கலங்கி நின்றிருந்தோம்; அந்த நாளில
நனியன்பு மிக்கநல்லான் "மக்காள்! அந்தப்
புல்லுருவி நாடாதீர்! உறிஞ்சித் தீர்ப்பர்
இனிஉங்கள் தமிழ்படிப்பீர்!" என்று எம்மை
இடித்துரைத்துத் திருத்திவிட்டான் எங்கள் தந்தை!

புதுமைமிகும் இலக்கியமாம் செல்வந் தந்தான்
புரட்சிசெய வீரரென ஆக்கி விட்டான்
பழமை என வாழாமல் தமிழ மக்கள்
பகுத்தறிவு தந்துமுந்தி இருக்கச் செய்தான்
எதுகையுடன் மோனைசொலும் கவிதை யாக்கும்
இளங்கவிஞர் பரம்பரையைத் தோற்று வித்தான்
அதுவன்றித் தமிழ்நலமே நாடு கின்றான்
அக்கவிபா ரதிதாசன் தந்தை யன்றோ!

—முடியரசன்—





தமிழ் மக்களின் தோழன்

பருகிடத் தமிழ்பி ழிந்து
பாரதி தாசன் தந்தான்;
உருவெலாம் தமிழே யானான்;
உணர்வெலாம் தமிழே யானான்;
இருபதாம் நூற்றாண் டிற்கோர்
இணையிலாக் கவிஞன் என்றே
பெருந்தமிழ் முரசம் கொட்டப்
பெருமக்கள் தோழ னானான்!

பகைவர்கள் எதிர்ப்புக் குள்ளே
பலமான இருட்ட டிப்பில்
புகைநீக்கி எழுந்த செம்மல்
புலம்பிடும் தமிழைக் காத்துத்
தகைபெறு வள்ள லானான்;
தமிழ்மக்கள் மடமை போக்கி
வகைபெறக் கவிதை செய்தான்
மக்களின் தோழ னானான்!

அரசியல் துறையை அண்டி
அதற்கேற்பத் தாளம் போட்டு
வரக்காணும் பதவிக் காக
வந்ததைப் பாடித் தள்ளும்
சாக்கிலாக் கூட்டந் தன்னைத்
தலைநாணித் தேம்ப வைத்தான்;
தருந்தமிழ் தானே யாகித்
தமிழ்மக்கள் தோழ னானான்!

—மு. அண்ணாமலை—





தமிழ் மக்களின்


காதலன்

"என்னுடலோர் பொன்னேடு; பாராய் தோழி!"
"உன்னுடலோர் பொன்னேடே! ஆம்! ஆம்!! ஆனால்,
முன்னொருநாள் உணர்வழிந்தே யுடல்தளர்ந்து,
முள்ளெலும்புக் கூடெனவே நின்றா யன்றோ?"
"என்னிலைமைக் கிரங்கியொரு இனியோன் வந்தான்.
ஏடிணைசத்தான். பொன்னேடாய் எழிலிசைத்தான்!"
"என்னேடி, தமிழச்சி! உடலை மாற்ற
என்செய்தான்! எவன்செய்தான்? பூரிப் புற்றாய்."

"சொல்லெடுத்துச் சுவைதொடுத்த உணர்ச்சி கூட்டி,
சுருக்கென்று காதல்தனைப் பாய்ச்சி விட்டான்.
கெல்லிவிட்டான் என்னுளத்தை. அன்னோன் தந்த
காதல்நினை வென்னுணர்வை மீட்கக் கண்டேன்!
மெல்லஒரு எதிர்பாரா முத்த மொன்றால்
மலர்ந்ததடி தளர்ந்தஉடல்! பூரிப் புற்றேன்.
கொல்லிமலைத் தென்றலுக்குக் குறும்பை யூட்டும்
கவிஞனவன் பாரதிக்குத் தாசனென்பான்."

"புலிகேட்டால் நகைக்குமடி, அறுப தாண்டுப்
புகழ்பாட்டன் கன்னியுனக் காளனென்றால்!"
"செவிகுளிரக் கேட்குமடி! தமிழ்ப் பகையைச்
செகுத்தெறியும் பகுத்தறிவுக் காளை யன்னான்.
கவிக்குமிருட் குடும்பத்தில் விளக்கை யேற்றிக்
கவின்பரிசைக் கன்னியெனக் கீந்த வீரன்!
கவிஞனவன் சொல்வீச்சில் தமிழினத்தார்
காதல்வெறிக் கன்னியராய்க் குழறிநிற்பார்."

—கோவை இளஞ்சேரன்—





தமிழ் மக்களின்

அன்னை

கல்வியில்லாத் தமிழகத்தில் 'இருண்ட வீட்டில்'
கவிதைக்கு மனையாளாய் வாழ்க்கைப் பட்டாள்!
சொல்லொணுத் தொல்லைதந்தாள் பழமை மாமி!
சுடுசொற்கள் வசைஎல்லாம் ஏற்று வாழ்வை
நல்வழியிற் சமைப்பதற்குப் பாடு பட்டாள்!
நாடெங்கும் 'குடும்பவிளக்' கொளிசிறக்க
செல்வழியை அறுதியிட்டு வாழ்ந்து காட்டிச்
செந்தமிழ மக்கட்கு அன்னை யானுள்!

'தமிழெக்கள் இளமைக்குப் பால்'என் றாட்டித்
தன்மானத் தொட்டிலிலே கண்ண யர்த்திக்
குமிழ்சிரிப்பின் 'அழகினி'லே சொக்கிப் போனுள்!
குவளைமலர்க் கண்திறக்க நிலவு காட்டி
'அமிழ்தென்றாள்! முத்தென்றாள்! நீல வானின்
அழகுமுக' மென்றெல்லாம் ஆர்வமூட்டி
இமைப்போதும் அயர்வின்றி வளர்த்தாள்! நெஞ்சில்
'எழுங்காதல் வாழ்க!' என வாழ்த்தும் சொன்னுள்

காதலினைத் தீக்கின்ற கட்டுப் பாட்டைக்
கண்மூடி வழக்கத்தைத் தீத்துக் கைமை
வாதைபடும் மகளிர்க்குப் பரிந்து பேசி
மறுமணத்தால் நலஞ்செய்தாள்! மதத்தால் மக்கள்
பேதையுறு வகையினிலே அறிவை யூட்டிப்
பொய்க்கடவுட் கற்பனையை உடைத்தாள்! அன்புக்
கோதையவள் 'புதுவைநகர் சுப்பு' எங்கள்
குலந்தழைக்க வந்ததமிழ் அன்னை! வாழி

—வே. குருசாமி—





தமிழ் மக்களின்

தொண்டன்

"தாழ்ச்சியுற்ற திராவிடத்தின் வாழ்வு மீண்டும்
தழைத்துவரப் பணிபுரிவேன்! கவலை யில்லை
பாழ்ச்சிறைதான் பரிசாகக் கிடைத்திட் டாலும்!"
எனும்பண்பைச் சேர்க்கின்ற தொண்டு செய்வோன்;
சூழ்ச்சியால்நம் தமிழ்சிதைப்பார் முயற்சி எல்லாம்
சோர்ந்தொழியப் பெரும்புரட்சிக் குரலெடுப்போன்;
வீழ்ச்சியில்லை! வீழ்ச்சியில்லை! பாரதி தாசன்
வெற்றிதரும் தொண்டிங்கு கிடைக்கப் பெற்றோம்!

சாதிசொல்லும் கொடுமைகளை, நமக்கொவ்வாத
சமயங்கள் சொல்லுகின்ற பொய்மை தன்னை,
மேதினியில் உழைப்புடையார் ஈட்டும் செல்வம்
மேடாகி ஓரிடத்தில் தேங்கு தற்குத்
தூதுசொல்லும் தனியுடைமைத் தத்துவத்தைத்
தொலைப்பதற்கு வாள்வடித்துத் தந்தான்; வாழ்வுப்
பாதைகாட்டும் முப்பாலின் கருத்தை ஆய்ந்து
பழந்தமிழர் உயர்பண்பைத் தெளியச் செய்தான்!

வான் காட்டும் வெண்ணிலவை, மலர்நாற் றத்தை
வாரிவரும் தென்றலைத்தெள் அருவி தன்னைக்
கான் காட்டும் இசையரங்கை, மங்கை நல்லார்
கவின்இதழின் குமிழ்சிரிப்பை எல்லாம் கொம்புத்
தேன் காட்டும் சுவைத் தமிழில் வரைந்த ளித்தான்
செந்தமிழின் உயர்வுக்கே தொண்டு செய்வோன்!
நான் காட்டத் தேவையில்லை! கவிதை ஊற்றாய்
நம்மெதிரே அவனுருவம் தோன்றா நிற்கும்!

—சி. திருநாவுக்கரசு—





தமிழ் மக்களின்

மன்னன்

அல்லியும் கொட்டியும் நெய்தலுமுள்ள
அழகான குளத்திலே தாமரைப்பூவே
நல்ல மணத்தையும் தேனையும் சிந்தி
நாட்டிற்(கு) இன்பத்தை ஊட்டுதல் காண்பீர்

சொக்கும் தமிழிலே கற்பனை ஊற்றிச்
சுவைத்திடத் தந்திடும் பாரதிதாசன்
மக்கள் மனங்களில் ஆட்சிபுரிவதால்
மன்னவன் என்றே போற்றிடுவோமே

வஞ்சகநெஞ்சினர் வந்தெமைச்சூழ்ந்து
வளரும் தமிழைக் காய்ந்திடுவாரேல்
அஞ்சா நெஞ்சன் பாரதிதாசன்
அடுபகை வென்றிடும் காவலனுமே

எந்தமிழ் நாட்டு மன்னவன் வாழ்க!
இனிக்கும் தமிழில் கவிதைகள் பாடும்
செந்தமிழ் நாட்டுச் சிங்கம் வாழ்க!
சீர்பெற நாடு வாழிய நெடிதே

—இராம. வே. சேதுராமன்—



எதிர்பாருங்கள்!

?

விருந்து

விபரங்கட்கு 10—5—51 இதழில் இதே பக்கத்தைப் பார்க்கவும்.

உயிர்க் கவி

இளமைப்பித்தன்

ஊர் முழுவதும் ஒரே அமளி. எங்கு பார்த்தாலும் திரளான மக்கள். கடல் பொங்கி எழுவதைப் போன்ற பேரிரைச்சல். அலங்கரிக்கப்படாத இடமே பாக்கி இல்லை. வீதிக்கு வீதி மகர தோரணங்கள்; வளைவுகள் வாழ்த்துப் பலகைகள்......ராஜ பாட்டையைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. நகர மாந்தர்களில் முக்கியமான இடத்தை வகிக்கும் வணிகர்கள், செல்வந்தர்கள், இன்னும் பிரமுகர்களின் அணிகள். அரண்மனைக் குதிரைகளின் மேல், படை வீரர்கள் அமர்ந்து அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தனர்.

அன்று தான் அந்நாட்டின் சரித்திரத்தில் உள்ள ஒரு குறை பூர்த்தியாகப் போகிறது. அரச சபையும் சோபையுடன் திகழப் போகிறது.

தொலைவில் அதிர்வெடிகள் வெடித்துத் தீர்த்தன. எல்லோருடைய பார்வையும் ஒரே காலத்தில் ஒருபுறமாகத் திரும்பின. முதலில் மங்கல வாத்தியங்கள் ஒலிக்கத் தொடங்கிற்று. வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். நாட்டிய மாதர்களின் கூட்டம் எல்லோருடைய கவனத்தையும் கவர்வதாக இருந்தது...இப்படியாகப் பல காட்சிகள்...ஒன்றன் பின் ஒன்றாக...

அழகாக அலங்கரிக்கப்பட்டு, அசைந்தாடிக் கொண்டே வந்தது...அதற்குக் கூட ஆனந்தம் பொங்கிவிட்டது. இல்லாவிட்டால் இப்படிப் பிளிறுமா?

ஒளி தவழும் பல்லக்குகள்... சிற்பிகளின் சித்திரப் பூவேலைகளை விளம்பரப்படுத்தின. தங்கம், வெள்ளி, முத்து...இந்த ரகங்களில் பலப் பல பல்லக்குகள் பந்தி பந்தியாக ஊர்ந்தன. ரதங்களின் உருளைகள் நிலத்தை நடுங்கவைத்துவிட்டன. உருண்டு திரண்ட தோள்களுடனும், உறுதி குலையாத உடலுடனும் இருமருங்கிலும் மெய்க்காப்பாளர்கள், இரும்புச் சிலைகளைப்போல வந்துகொண்டிருந்தனர். ஆகாயப் பூப்பந்தலிலிருந்து அடைமழை மாதிரி மலர்கள் சொரிந்தன.

தங்கத் தேரின்மேல் வீற்றிருந்தான் அரசன். அவனுடைய முகத்தின் அழகு, அகத்தைப் படம்பிடித்துக் காட்டிக்கொண்ருந்தது. அந்த முகத்தில்தான் எவ்வளவு மகிழ்ச்சி! அவனுக்குப் பக்கத்தில் ஒரு இளைஞன்; அவனுடைய முகத்திலே அரசகளை இல்லை; ஆனால் அருள் வடிவு பெற்றிருந்தது. கண்களிலே, கலை தேங்கிநின்றது. இதழ்கள் புன்னகையில் தோய்ந்து கிடந்தன. அவனும் அரசனும் சரிநிகர் சமானமாக வீற்றிருந்தார்கள். அந்த அற்புதக் காட்சியைக் காணத்தான் இவ்வளவு கூட்டம்!

பார்த்தீர்களா?" என்று கனிவும் பரிவும் நிரம்பிய குரலில் கேட்டான் மன்னன். அருகிலிருந்தவன் இளைஞன்; அரசனைவிட வயதிலும், வனுவிலும் குறைந்தவன்தான் என்றபோதிலும் மன்னன் அவனிடம் 'மரியாதை' தவறிவிடவில்லை. ஆம்! அந்த இளைஞன் ஒரு கவி; உயிர்க்கவி இனத்தைச் சேர்ந்தவன். நாட்டின் நல்முத்தாக விளங்குகிறான். அந்த இளைஞனின் நா அசைந்தால் நாடே அசையும் ...

"உங்கள் மீது உள்ள அன்பின், நிழல் என்மீதும் தாவிப் படர்ந்துவிட்டது, மன்னரே" என்றான், மென்முறுவலுடன். அரசனுக்கு அங்கமெல்லாம் குளிர்ந்தது.

* * *

சபையில்......

உலகின் சுகபோகங்களெல்லாம் அந்த இளைஞனுக்காக வாழ்த்துக்கூறி எதிர்நோக்கி உபசரித்தன. அமோகமான வரவேற்புடன் கவிஞனை அழைத்துச்சென்று சிம்மாசனத்திற்குப் பக்கத்திலேயே உட்காரவைத்தான் அரசன். ராஜாங்க விருதுகள் அவனுக்கு வழங்கப்பட்டன.

'உயிர்க் கவி வாழ்க' என்ற வாழ்த்தொலி அண்டத்தைப் பிளந்தது. அரச சபையில் 'கலை' படையெடுத்தது. இசையும், கூத்தும், இரட்டைக்

எல்லோருடைய இதயமும் இன்பக்கடலாடிக் கொண்டிருந்தன. கவிஞன் அமைதியாக, அலைகடலுக்கு மத்தியில் நின்று கொண்டிருக்கும் பாறைபோல அங்கே நடப்பவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். கலை நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வேண்டாமா? அரண்மனையைச் சேர்ந்த நாட்டியக் காரியான சதுர்முகி—அங்கே வந்தாள்.

கலையரங்கில் ஏறி நின்று வணங்கினாள். சபையில் ஒரே ஆரவாரம்!

நாட்டியம் ஆரம்பமாகியது. காலினில் சதங்கை கொஞ்ச, கைவளைகள் குலுங்க, முத்து மாலைகள் அசைய, மின்கொடி மாதிரி நெளிந்தாடினாள். கவிஞன்—கந்தர்வ குமாரன்—பாட ஆரம்பித்தான். பாட்டும் கூத்தும்பரிமளித்தன. அரசனுக்குக் கட்டுக்கடங்காத வெறி—இன்பவெறி—தலைக்கேறிவிட்டது. பொன்னையும் மணியையும் வாரி வழங்கினான் இருவருக்கும். சதுர்முகியின் கண்களும் கருத்தும், கந்தர்வ குமாரனைச் சிறைப்படுத்திவிட்டன.

அவனும் பார்த்தான்; அவளும் பார்த்தாள். ஆனால் இரண்டும் வெவ்வேறுவிதமான அர்த்தங்களை வெளியிட்டன. சபையின் கீழ்க் கோடி மூலையில் ஒரு மென்திரை லேசாக அசைந்து கொண்டிருந்தது......அதற்குப் பின்னால்......நாட்டின் ராணி—ர்தி தேவி—முகிலுக்குப் பின் தோன்றும் முழுமதி போன்ற

ஆடைய உடல் புல்லரித்தது. உள்ளத்தில் இன்னதென்று சொல்லமுடியாத வேதனை புகுந்தது. மன்னனையும் - கந்தர்வ குமாரனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

இப்படியே பல நாட்கள் — மாதங்கள்......

கந்தர்வ குமாரன், நாட்டின் கவிக் களஞ்சியமாக விளங்கினான். வற்றாத கவியூற்றில், அழகழகான கவிகள் ஊறிப் பெருகியபடி இருந்தன.

* * *

மாலைப் பொழுது... ...

அரண்மனைப் பூந்தோட்டத்தில்......

சதுர்முகி, தனிமையில் இருந்த கந்தர்வ குமாரனைச் சந்தித்தாள். பேசினாள். சிரித்தாள் கவிஞனிடம் தன் மனோ நிலையை எடுத்துச் சொன்னாள் 'நீங்கள் தான் என் வாழ்வின் ஒளி விளக்கு' என்று அவன் ல்களில்விழ்ந்தாள்.

கந்தர்வ குமாரன், அவளுக்கு



னை;

சதுர்முகி, மன்றாடிக் கேட்டாள். பலன் இல்லை. பாச வலை அறுந்தது. வெஞ்சினம், நெஞ்சைச் சுட்டெரித்தது...

அவள் போய் விட்டாள்...

இரவோடு, இரவாக மன்னனிடம் போய் முறையிட்டாள். தன்னைக் கவிஞன் கற்பழித்ததாகப் பொய் சொன்னாள்.

முதலில் மன்னன் மருண்டான். சதுர்முகி சொன்னதை நம்பவில்லை... நாசுக்காகப் பேசினாள் சதுர்முகி ... அவன் மனதைக் கலைத்தாள்... இதையறிந்த ராணி—ரதிதேவி... கவிஞனுக்காகப் போராடினாள்... சதுர்முகியின் வார்த்

தைகள் மூழுப்பொய் என்று வாதாடினுள்...

மறுநாள்...

சதுர்முகி, நாடு கடத்தப்பட்டாள்...

பல நாட்களுக்குப் பின்...

ஒரு நாள், சந்திரகாந்த மேடையின் மீது சாய்ந்த வண்ணம் வெண்ணிலவின் ஒளியில் குளித்துக் கொண்டிருந்தான் கந்தர்வ குமாரன்... பின்னுல் யாரோ வந்துநின்றமாதிரி இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களையே அவனுல் நம்பவில்லை...

வந்து நின்றவள்—ரதிதேவி!

"மகாராணியா?" என்ருன். குரல் நடுங்கியது அவனுக்கு.

"இல்லை, ரதிதேவி; உன் கவியின் அடிமை. நீ விரும்பினுல் உனக்கும் அடிமை" என்ருள்.

கந்தர்வகுமாரன் வெருண்டு ஓட ஆரம்பித்தான். கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினுள் ரதிதேவி... அவன் திமிறினுன்.

"தாங்கள் நாட்டின் ராணி, மக்களுக்குத் தாய்; இப்படி நடந்துகொள்வது, தகாது" என்று கெஞ்சினுன். பலன் இல்லை. அவனை, அவள் பலவந்தமாக இழுத்து அணைத்துக் கொண்டாள்.

இந்த—நாடகத்தை— அங்கே வந்தஅரசன் பார்த்துவிட்டான். அலைபோலச் சினம் பொங்கியெழுந்தது. அவர்கள் இருவரையும் அப்படியே இழுத்துக் கொண்டு போய்ச் சிறைக்குள் தள்ளினுன்.

மறுநாள் விசாரணை...

சபை கூடிற்று...


நீதியும், நேர்மையும் தவருத அவனுடைய ஆட்சியில் விசாரணை நடந்தது. மன்னனே சாட்சியாக வந்து நடந்தவைகளைச் சொன்னுன்...

இருவருக்கும் மரண தண்டனை விதித்துவிட்டதாகச் சபை தீர்ப்புக் கூறியது.

ராணி அழுதாள்.

கவிஞன் சிரித்தான்.

தண்டனை நிறைவேறியது. ராணி போய்விட்டாள். கவிஞனும் போய்விட்டான். அவள் கடைசியில் களங்கத்தை விட்டுச் சென்ருள். அது சரித்திரத்தைக் கறைப்படுத்திவிட்டது. ஆனுல் கவிஞன்—தன்னுடைய உயிர்க் கவிகளையே விட்டுச் சென்ருன்—அதிலே கறையில்லை... களங்கமில்லை... கவிஞன் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிருன்... இனி எப்போதும் வாழ்வான், அவனுடைய கவிதைகளின் மூலமாக... காலத்தால் கூட அதை அழிக்க முடியாது.



புரட்சிக் கவிஞருக்குப் புகழ் மாலை

[தமிழ் நாட்டுப் பொது வாழ்வில் பல துறையிலுமுள்ள குறிப்பிடத்தக்க நூற்றுக்கு மேற்பட்ட பெரியவர்களிடம் "பாரதிதாசன் மணி விழா" பற்றி அறிவித்து அவர்களின் கருத்துரைகளைக் கேட்டிருந்தோம்; அன்புடன் பலர் விரைந்து அனுப்பித் தந்தார்கள். கிடைத்த அனைத்தையும் இங்கு வெளியிட்டிருக்கிறோம்; "புரட்சிக் கவிஞருக்குப் புகழ் மாலை"யாக இவை தொகுக்கப்பட்டிருக்கின்றன.
— ஆசிரியர்]

வாழி நீடூழியே!

என்மை உள்ளத்தின்
சொல்வஞ்சர்
உண்மை அஞ்சும்
உரனில் நெஞ்சர்
பொய்மையிற் போந்த
புலமைப்பஞ்சம்
தஞ்சமின்றித் தலைதடு
மாறவும்,
மூவாத் தமிழின்
சாவாப் பெருமை
ஓவாதுயிர்ப்பித்
தோங்கவும் வைத்தவர்
பாரதியா ரோடு
பாரதி தாசப்
பட்டம் பூண்ட
மெய்ப்பாவலர்; அவர்புகழ்
திட்டம் எய்தித்
திகழுமிவ் வறுபது
நிறைவிழாச் சிறக்க
முறைசெயும் தமிழர்
திறை மனதாரச்
செப்பும் நல்வாழ்த்தே,
வாழி பாரதிதாசர் நீடூழியே!

பசுமலை
25-4-51 **ச. சோமசுந்தர பாரதியார்**

○●○

பெருந்தமிழர்

திருவாளர் பாரதிதாசன் கவிகளைச் சுமார் 15 வருஷங்களுக்கு முன் முதல்முதல் படித்தேன். தமிழ்க் கவிக்குப் புத்துயிரூட்டிய சுந்தரம் பிள்ளையவர்களுக்குப் பிறகு பாரதிதாசன் ஒருவர் வந்திருக்கிறாரென்று எண்ணம் தோற்றியது. எல்லோருக்கும் தெரியக் கூடிய எளிய நடையில் அறிவு வளர்க்கும் முறையில் உள்ளதுள்ளபடி உரைக்கும் திறமை வாய்ந்தவர் என்ற எண்ணம் வளர்ந்தது. 1938-ம் வருஷத்தில் காஞ்சீபுரத்தில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நமது கவியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கும் பணியை மகிழ்ச்சியுடனேற்றேன். பெருந்தமிழர் நீடூழி வாழ்ந்து அரும்பணியை நடத்தி வருவாராக.

மைலாப்பூர் **எஸ். முத்தையா**
23-4-51 (முன்னாள் அமைச்சர்)

○●○

மனித சமூகத்தின் கடமை

இந்து மதம் என்ற பெயரால் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக மக்களை அடிமைப்படுத்திய கொடுமையை, இனிக்கும் தமிழ்க் கவிதைகள் மூலம் உலகத்தாருக்கு எடுத்து விளக்கிய பாரதிதாசன் அவர்களுக்கு மனித சமூகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

சென்னை **எஸ். ராமநாதன்**
26-4-51 (முன்னாள் அமைச்சர்)

என் வாழ்த்து

கவிஞர் திரு. பாரதிதாசன் அவர்களுடைய மணி விழாவைச் சிறப்பிக்கும் தங்களுடைய 'பொன்னி'யை என் மனமார வாழ்த்துகின்றேன்.

நாமக்கல் **வெ. இராமலிங்கன்**
24-4-51 அரசவைக் கவிஞர்.

○●○

சங்கத் தமிழ் நலம்

நடையிலும் கருத்திலுப், முறையிலும்; முடிபிலு:ர், மிடுக்கிலும், எடுப்பிலும், உணர்ச்சியிலும், கிளர்ச்சியிலும், தேவையிலும், சேவையிலும், தூய்மையிலுப், வாய்மையிலும், திருத்தத்திலும், உறுத்தலிலுப், புரட்சியிலும்; தெருட்சியிலும் சங்கத் தமிழ் நலம் அமைந்தது திரு. பாரதிதாசன் கவிதை!

மாம்பாக்கம்
26-4-51 **இளவழகனார்**

○●○

ஆற்றல் தரும் கவிதைகள்

பாரதிதாசன் அவர்களது புரட்சிக் கவிதைகள் நமது நாட்டு இளைஞர்கள் பெரும்பாலார்க்கு ஒரு புதிய ஆற்றலைக் கொடுக்கக் கூடியவை. வெகு காலமாகப் புதுக் கொள்கைகளையும் புதுக் கருத்துக்களையும் நமது சமூகமும் கலையுலகமும் ஏற்றுக் கொள்ள மறுத்து வந்திருக்கின்றன. அந்த மனப்பான்மை நீங்க வேண்டுவது அவசியம். அதற்குப் பாரதிதாசனுடைய கவிதைகள் பெரிதும் உதவும் எனக் கருதுகிறேன்.

சென்னை
24-4-51 **எஸ். வையாபுரிப் பிள்ளை**

பெரும்பாக்கியம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நம் தமிழகம் மணி விழா நடத்துவது அகஸ்மாத்தாகஏற்பட்ட ஒரு பெரும் பாக்கியம் ஆகும். இந்த விழாவுக்கு அவர் ஒப்புக்கொண்டதென்பது நம் நாட்டுக்கு அவர் கொடுத்த விலை உயர்ந்த விலை மதிக்க முடியாத ஒன்றை வயதினாலோ அல்லது மறதியினாலோதான் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் இது அவருடைய புரட்சிப் பான்மைக்குப் புறம்பானது.

கோவை
24-4-51 **ஜி. டி. நாயுடு**

○●○

தொண்டாற்றுவாராக

பாரதிதாசன் தற்காலத் தமிழ்க் கவிஞர்களில் பெயர் பெற்றவர்களில் ஒருவர். ஆண்டவனருளால் அவர் நெடுநாள் வாழ்ந்து, தமிழ்த் தாய்க்கும் தமிழ்நாட்டிற்கும் தொண்டாற்றுவாராக.

வித்யாலயம் **அவினாசிலிங்கம்**
26-4-51 (முன்னாள் அமைச்சர்)

○●○

வீரத் தமிழ்ச் சொல்லின் சாரம்

பாரதியார் கூறும் "வீரத் தமிழ்ச் சொல்லின் சார"த்தைப் பாரதிதாசன் பாடல்களில் சிறப்பாகக் காணலாம். கருத்து வேற்றுமை யுடையவர்களும் பாரதிதாசன் கவிப் புலமைக்குத் தலை சாய்த்து வணங்குகின்றார்கள். இன்று பாரதிதாசனுக்கு வாழ்த்துக் கூறும் பல்லாயிரக்கணக்

கான பக்களுடன் நானும் சேர்ந்து கொள்கிறேன். வாழ்க பாரதிதாசன்!

சென்னை
24-4-51 பரலி-சு. நெல்லையப்பர்

○●○

வெள்ளிடைமலை

பாரதிதாசரின் அறுபது ஆண்டு நிறைவு மணி விழாவைத் தமிழர் கொண்டாடுவது அவர்களுடைய தமிழ் உணர்ச்சியை மேன்மையுறச் செய்வதாகும். பாரதிதாசர் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு வெள்ளிடைமலை. இன்னும் அவர் பல்லாண்டு பாங்குற வாழ்ந்து தமிழ்க் கவிகள் புனைந்து நல்வழியில் தொண்டு புரிவாராக.

அ. நகர் செ. கோ. மணவாள
24-4-51 ராமாநுஜம்
துணைவேந்தர் அண்ணமலைப்பல்கலைக் கழகம்

○●○

தெளிவில் அழகு

பாரதிதாசன் கவிதையில் கனலும் உண்டு; தண்மையும் உண்டு. தெளிவில் அழகும், தீவிரத்தில் வேகமும் காணலாம்.

கலைமகள்
24-4-51 கி. வா. ஜகந்நாதன்

○●○

புரட்சி வாழ்க!

சாதி வேறுபாடும்—உலகிற்
சமய வேறுபாடும்—ஊரில்
விதி வேறுபாடும்—இன்றி
வீறு பெற்று முன் செல்!
காற்றைப் போல மனிதர்—
என்றும்
கட்டிலாது வாழ
நேற்றை மூடப் பழக்கம்—இனி
நீறுபட்டுப் போக
கூற்றையும் உதைக்கும்—சக்திக்
கொழுந்துபற்றி முன்செல்—
போற்றுகின்றேன் உன்னை—நல்ல
புரட்சி செய்யும் தமிழா!
நாட்டு வாழ்விற் புரட்சி—இந்த
ஞால வாழ்வில் புரட்சி
வீட்டு வாழ்விற் புரட்சி—மிக
வேண்டும் வீரத் தமிழா!

புதுவை
25-4-51 சுத்தானந்த பாரதி

○●○

பாரதியின் மூலம்

தமிழன்னையின் சிறந்த மகன் பாரதி. தமிழர் யாவரும் ஏற்றத் தாழ்வின்றி, அடிமையின்றி, பொய்யின்றி உலகில் தலை நிமிர்ந்து நின்று பெருவாழ்வு வாழ வேண்டுமென்று விரும்பினான். அவன் வழித்தோன்றல்

வளரும் இலக்கியம்

கிருஷ்ணன்—மதுரம் வாழ்க்கைப் பாதை

'தமிழ்நாட்டுப் பெரியார்கள்' என்ற புத்தகத்தில் என். எஸ். கிருஷ்ணனையும் ஒரு பெரியாராகச் சேர்த்திருந்தார் அறிஞர் வ. ரா. அது எத்துணை பொருந்தம் என்பதை இந்தப் புத்தகத்தில் காணலாம். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல, அன்னாரின் குண இயல்புகளும், எண்ணங்களும், எண்ணத்தின் எதிரொலிகளும் இதில் படம்பிடிக்கப் பட்டிருக்கின்றன. இதற்கு என். எஸ். கிருஷ்ணன் அவர்களே முகவுரை வழங்கியிருப்பது முற்றிலும் புதுமையானதாகும்.

—அரசன்

[எழுதியது: ஜெகசிற்பியன். வெளியிட்டோர்: வெண்ணிலா வெளியிடு, பிராட்வே, சென்னை-1. விலை அணா 8:

பாரதிதாசன். பாரதியின் மூலம்-தமிழன்னையின் தாசன்—இந்தக் கனக சுப்புரத்தினக் கவிஞன். தமிழையும் தமிழ் மக்களையும் உணர்பவர்க்கு இவர் ஒரு ரத்தினம். மணிவிழா வெல்க. பாரதிதாசன் நீடு வாழ்க.

காரைக்குடி
24-4-51 **சொ. முருகப்பா**

○●○

இணையற்றவர்

பாரதிக்குப் பிறகு தமிழ் நாட்டின் மிகச் சிறந்த கவிஞர் பாரதிதான்தாசன்; கவிதைபுனைவதில் இன்று தமிழ்நாட்டில் அவருக்கிணையானவர் வேறு யாருமே இல்லை. தனித்திருக்கும்போதும் சரி, பகிரங்கமாகவும் சரி, கருத்து வேறுபாடு காரணமாக இதைப் பலர் ஒளித்துப் பேசுகிறார்கள்; எனக்கும் கருத்து வேறுபாடு ஓரளவு உண்டு என்றாலும், அவருடைய கவிதைத் திறனை என்றும் மதிப்பவன் நான்; அவருடைய கவிதைச் சுவையை என்றும் போற்றுகிறவன் நான். அவருடைய 60-ஆம் ஆண்டு விழா, எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. அவரை வாழ்த்துகிறேன்.

சென்னை
26-4-51 **தி. ஜ. ர.**

○●○

ஒப்பற்ற கவி

அசூயை, பொறாமை ஆகிய நீசத்தனமான உணர்ச்சிகளுக்கு இடங்கொடாமல் மாசற்ற இதயத்துடன் நோக்குபவர்க்குக் கவிஞர் பாரதிதாசன் ஓர் ஒப்பற்ற கவி என்பது புலப்படும். அவருக்கு உவமை சொல்ல இறந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி — எந்தக் கவிஞனும் இல்லை. கல்லைக் கனிய வைக்கும் சிற்பி அவர். ஆகவே கொத்தனார் வேலையை அவருடைய கவிதைகளில் காண முடியாது...

தாம் வாழ்வதற்காகப் பரந்த மனம் என்று சொல்லிக்கொண்டு பக்கத்தில் இருப்பவனை மறந்துவிடும் பாதகத்தை அவர் செய்ய வேண்டுமா? மதத்தின் பேரால், கடவுளின் பேரால் மக்கள் வஞ்சிக்கப்படுவதை —வதைக்கப்படுவதை அவர் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமா? பணக்காரர்கள் தம்மைப் பாராட்டவேண்டும் என்பதற்காகப் பாமரர்களை அவர்களுக்குப் பலி கொடுக்க வேண்டுமா? அப்படியானல் கவிஞர் பாரதிதாசனை நீங்கள் வாழவைக்க வேண்டாம்; அவரை வாழ வைப்பதற்கு அவருடைய கவிதைகளே போதும்...

தனித்து இயங்க முடியாத கவிஞனுக்குத் தானே தாளம் போட ஆள் தேவை?

சேத்துப்பட்டு
24-4-51 **விந்தன்**

○●○

உண்மைப் புலவர்

எந்த நாட்டை எடுத்து ஆராய்ந்தாலும் உண்மைப் புலவர்களிலே இரண்டு வகையினரைக் காணலாம். ஒரு வகையினர் நாட்டு மக்களின் உண்மையான மனப்போக்கை அறிந்து அத

ளைச் சிறந்த கருத்தோவியங்க ளாக வெளியிடுபவர். மற்ருெரு வகையினர் நாட்டு மக்களை ஊக்கித் தம் மனப் போக்கின் வழி இழுத்துச் செல்லும் வகையில் அருமையான கவி ஓவியங்களைத் தீட்டுபவர். இவ்விரு வகையினரும் தமிழ் நாட்டில் சங்கத்தார் காலத்தில் இருந்தனர். இந்த இரண்டு வகைகளையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு தற்காலத்தில் விளங்கும் புலவர், பாரதிதாசன் ஆவார். அந்தச் சிறப்பைப் போற்றித் தமிழர் அன்னுருக்கு அன்னுர் மணிவிழாவின் போது பாராட்டினைத் தந்து தம் கடமை செலுத்துவார்களாக!

கோவை சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்
25-4-51

○●○

சாதனை பெரிது

வள்ளுவர், இளங்கோ, மற்றச் சங்கப் புலவர்கள் ஆகியவர்கட்குப் பின்னர்த் தமிழன்னை ஈன்றெடுத்த தலைசிறந்த தமிழ்க் கவிஞன் பாரதிதாசன் என்று அழைக்கப்படும் கவிஞர் கனக சுப்புரத்தினம் அவர்களே. அவருக்கு வழிகாட்டிய பெருமை கவிஞர் பாரதியாருக்கு உரியது. ஆனல் சாதனையில் பாரதிதாசன் பாரதியாரைத் தாண்டிக் கவிதைப் படைப்பிலும் கலைப் பண்பிலும் நெடுந்தொலை சென்றுள்ளார். வாழ்க பாரதிதாசன். வளர்க தமிழ். வெல்க தமிழர் பண்பு.

சென்னை
24-4-51 கா. அப்பாத்துரை

○●○

எங்கள் கவிஞர்

ஏழையின் கவிஞர்—இல்லாதாரின் தோழன்—அன்புள்ளம் படைத்தோருக்குத் தென்றல்—ஆதரவற்றவர்களை உயர்த்தும் ஏணி—ஆணவக்காரருக்கு அணுகுண்டு!

அவர் அமைத்த இலட்சிய உலகம் நடைமுறை உலகத்துக்கு முரண்பட்டது. ஆனல் நாட்டு முன்னேற்றத்துக்குத் தேவைப்படுவது!

உடலைப் போல உள்ளமும் பரந்தது—வலிவு நிறைந்தது! எழுத்தைப் போல எண்ணமும் ஆழமானது — அறிவு செறிந்தது!

அவர் எங்கள் கவிஞர்! இந்த நாட்டில் எப்போதும் தோன்ருத புரட்சிக் கவிஞர்!

அவர் வாழட்டும் நாம் வளர்வதற்காக! நாம் வளருவோம் அவர் வாழ்வதற்காக!

திருச்சி
23-4-51 டி. கே. சீனிவாசன்

●○

உண்மைக் கவிக் கனல்

பாரதிதாசனுர்க்கு அறுபது ஆண்டு நிறைவு மணிவிழா நடக்கப் போகிற நற்செய்தி கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசனிடமே நான் உண்மைக் கவிக் கனலைக் காண்

கின்றேன். அதற்கு என் வணக்கம் உரியது.

அவர் நீடுழி காலம் வாழ்ந்து, கற்பனைக் கிழியில் பல அழியா ஓவியங்கள் வரைவாராக.

சென்னை
24-4-51 **ரா. ஸ்ரீ. தேசிகன்**

○●○

தேவிட்டாத மலைத்தேன்

பாரதிதாசன் கவிதை இன்பம், தெவிட்டாத மலைத்தேன். ஒரு பாவைப் படித்தால், இது போன்ற பாடல் எப்போது தொகுதியாக வரப் போகிறது என்று நினைக்கிறேன். ஒரு புத்தகத்தை நாம் படித்தால் இவர் எழுதியுள்ள புத்தகங்கள் எத்தனை யெனக் கடை வீதிக்குப் போய்க் கேட்கிறோம். ஒரு புத்தகத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், எல்லாம் நம்மிடம் இருக்க வேண்டுமென்ற பேராசை கூடப் பிறக்கிறது.

இரவலுக்கும் அப்பால், சொந்தமாக நமக்கு வேண்டும்—அதுவும் கவிதை நூல்கள் வேண்டும்—என்ற ஆசையைத் தமிழகத்தில் தூண்டிய பெருமை இவருக்கே உண்டு. அது எவ்வளவு விலை, என்ன தான் என்றெல்லாம் பார்க்காமல் வாங்கிக் கொண்டு போகிறவர்கள், பாரதிதாசன் தாசர்களே!

எண்ணிறந்த இந்தத் தாசர்களுக்குள் நானும் ஒருவன் என்று தலைநிமிர்ந்து சொல்லிக் கொள்ளுகிறேன். அவ்வளவு அருமையான கவிதை நூல்கள்! எல்லாம் தெவிட்டாத தேன் துளிகள்! இப்படி வாய்விட்டுச் சொல்லுவதால் என்னைத் தாராளமான நபராக நினைக்காதீர்கள். இவரது நூல்களைப் பொறுத்தவரை நான் லோபி. பிறருக்குக் கொடுக்க மனம் வருவதில்லை. கொடுத்தால் அவர்களும் என்னைப்போல் ஆகிவிடுகிறார்கள்!

திருச்சி
23-4-51 **"சுகி"**

○●○

அமர கவிதைகள்

பாரதிதாசன் கவி சுப்பிரமணிய பாரதியாரிடமிருந்து எழுச்சி பெற்றவர்தாம். ஆனால், பாரதியாரை அவர் வெறுமனே காப்பியடிக்கவில்லை. தமக்கென ஒரு வழி வகுத்துக்கொண்டு அவர்தம் போக்கிலே பாடுகின்றார்; சுயமாகத் தம் கருத்துக்களின்படி பாடுகின்றார். தமிழன்பு, தமிழன் என்ற தனியுணர்ச்சி, ஜாதி சமய வேறுபாடுகளின்பால் வெறுப்பு — இவை அவர் கவிதைகளில் மேலோங்கி நிற்கும் இயல்புகள். அவர் கவிதைகளில் பிரசார அம்சம் சிறிது அதிகமாயிருப்பினும், இக்காலத் தமிழ்க் கவிதையில் அவை உயரிய இடம் பெற்றுள்ளன என்பதைப் பாரபட்சமற்றவர் ஒப்புக் கொள்வர் என்பதில் ஐயமேயில்லை. தெள்ளிய தேன் மொழியில் அவர் மேலும் பல அமர கவிதைகள் வழங்குவாராக!

சென்னை
24-4-51 **பி. கோதண்டராமன்**

○●○

வாடாத மலர் மாலைகள்

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைமட்டிலும் கவிஞர்கள் பிறக்கிறார்கள் என்ற சொல் உண்மையாக இருந்தால் பாரதியாருக்குப் பிறகு பாரதிதாசன் பிறந்திருக்க முடியாது. பாரதிதாசனின் கவிதையைப்பற்றி நினைக்கும்போது எனக்கு 'நிலத்திரைக் கடலோரத்திலே' நிற்கும் கன்னித் தமிழ்க் குமரியின் இளமை அழகும், வடவேங்கட மலையின் கம்பீரச் சாயலும் நினைவுக்கு வருகின்றன. கவிதையில் பாரதிதாசன் புயலாகச் சீறுகிறார்; மின்னலாக ஔிர்கிறார்; தென்றலாக வீசி இன்ப மணத்தை உதிர்க்கிறார். புதுமைத் தமிழணங்கின் நெஞ்சில் துவளும் வாடாத மலர் மாலைகள் அவர் கவிதைகள்.

தமிழ் வளர்ச்சியில் உண்மையான அக்கரை கொண்டவர்கள் இந்த நாட்டில் மிகவும் குறைவு என்றே தோன்றுகிறது. இல்லாவிட்டால் தமிழ் நாடு முழுவதுமல்லவோ கவிஞர் விழாக் கொண்டாடவேண்டும்? தாகூருடைய விஸ்வ பாரதியைப் போல் ஒரு தமிழ் நிலயம் இந்த நாட்டில் ஏற்படுத்த முடியாதவர்கள் எங்கே கவிஞர்களையும் கலைஞர்களையும் சரியான முறையில் பாராட்டப்போகிறார்கள்?

திருச்சி
23-4-51 அகிலன்

பொதவுடைமை

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே சொன்னேன், பாரதிதாசன் ஒரு கட்சியின் சார்புடையவராக இருந்தாலும், எல்லாக் கட்சியாராலும் போற்றப்பட வேண்டிய — நாட்டு மக்களின் பொதுவுடமையாகக் கருதப்பட வேண்டிய கவிஞர் என்று. இன்றும் சொல்கிறேன், அவர் யாருடைய தனியுடைமையுமல்ல; தமிழர் எல்லோருக்கும் பொதுவுடைமை. ஆதலால், எல்லோரும் அக்கவிச் செல்வத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்; பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று.

பாரதிதாசன் சங்க இலக்கியங்கள் இயற்றியுள்ள நல்லிசைப் புலவர்களின் சரியான வாரிசு. வருங்காலப் புலவர்களுக்கு நல்ல வழிகாட்டி. பண்டை இலக்கியப் பூஞ்சோலையில் பூத்த புதுமலர் அவர். புதுமை இலக்கிய வானில் உதயமாகிய விடிவெள்ளி. வேகமாக மாறிவரும் தமிழ்ச் சமுதாயத்தின் நிலையைச் சரியாகக் கணித்துக் காட்டும் 'தர்மாமீட்டர்' பாரதிதாசன். அவர் பல்லாண்டு வாழ்க!

சென்னை நாரண-
24-4-51 துரைக்கண்ணன்

உயரிய கவிகள்

வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்ற மரபினைக் கடந்து, வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை "இருண்ட வீடு", "மாந்தோப்பில் மணம்" முதலிய செய்யுட் பகுதிகளில் வரைந்து காட்டிய கவிஞர் பாரதிதாசனரின் அறுபத்தோராவது

பிறந்த நாட் கொண்டாட்டம் நடைபெறுவது அறிந்து மகிழ்கிறேன். தமிழ்நாட்டிடத்தும் தமிழ் மக்களிடத்தும் பேரன்பினை எழுப்பவல்ல உயரிய கவிகளை இயற்றித் தொண்டு செய்து வரும் கவிஞர் பல்லாண்டு வாழ்க.

அ. நகர்
24-4-51 அ. சிதம்பரநாதன்

○●○

பாலினும் இனிய பாக்கள்

கவியரசர் தம் பாட்டுக்களின் மூலம் தமிழ்நாட்டுக்கு ஆற்றியிருக்கும் தொண்டு மிக மிகப் பாராட்டத் தக்கதாகும். பாலினுமினிய பாக்கள் நெஞ்சை அள்ளும் திறத்தன. அன்னாருக்கு நிறை நாட்களும், உடல் நலமும் ஒருங்கே கிடைக்கவேண்டுமாய் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

புதுக்கோட்டை பெ. ராம. ராம.
24-4-51 சித. சிதம்பரம்

○●○

இனிப்பூட்டும் கவிதைகள்

தமிழுக்கே இனிப்பூட்டுவன பாரதிதாசனின் கவிதைகள்.

சென்னை
24-4-51 ப. நீலகண்டன்

○●○

பரிதிபோல் வாழ்க

தக்கநற் கவிதைகள்
தடைபறத் தோன்றும்
உறைவிட மானான்;
உறுதிகொள் மனத்தான்;
காளைபோல் நல்ல
கட்டுடல் கொண்டான்;
கோழைத் தனத்தைக்
குழியினிற் புதைத்தான்;
புதுவையில் வதியும்
புரட்சிக் கவிஞன்
மாண்புடை அவனின்
மணிவிழா வதனைக்
காண்போம்; அவனது
கவியும் பெயரும்
பன்னெடுங் காலம்
பரிதிபோல் வாழ்க.

சென்னை
23-4-51 அழ. வள்ளியப்பா

○●○

தனிப் பெருங் கவிஞர்

கவிதை உலகிலே புதுமை கண்டவர் பாரதியார், புரட்சி செய்தவர் பாரதிதாசன். தமிழ் இலக்கியவானிலே தோன்றிய விடிவெள்ளி பாரதியார், இருள் நீக்கி எழுந்த செஞ்ஞாயிறு பாரதிதாசன். உரிமைப் போர்க்களத்திலே அவர் திராவிடத்தின் ஷெல்லி; வீழ்ச்சியுற்ற இனத்தின் எழுச்சிக் குரலிலே அவர் தமிழகத்தின் இக்பால்; புத்துலகத்தைக் காணப் புது வாழ்வைப் பாடுவதிலே அவர் தென்னாட்டின் வால்ட்விட்மன்.

இன்றைய தமிழகத்தின் தன்னிகரற்ற தனிப் பெருங் கவிஞர் நமது புரட்சிக் கவிஞரே ஆவர். தமிழகம், புரட்சிகரமான மறுமலர்ச்சியடைந்து வருவதே அவரது பெருமைக்குச் சான்றாகும். உள்ளத்தால், உரையால், உடற்கட்டால், அறுபதாண்டு கண்டும் இன்னும் இருபதாண்டு இளைஞர் எனுமாறு விளங்கிடும் நம் கவிஞர், இணையின்றி விளங்கும் திராவிடத்தில், எல்லையில்லா இன்பத்தோடும், ஈடில்லாப் பெருமை

யோடும், இன்னும் என்பதான் டும் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

சென்னை
24-4-51 க. அன்பழகன்

○●○

இணையற்ற இயற் கவிஞர்

புரட்சிக் கவிஞரின் கவிதைகள் ஏதோ ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டு புனையப் பட்டவையல்ல. கவிதைகளின் போக்கு உலக அனுபவத்தின் பண்பாட்டில் உதித்தெழுந்த எண்ணங்கள். இலக்கண இலக்கியங்களைக் காக்க வெழுந்த வூற்றுக்கள். இவை கவிஞராகவே உதித்தவர்களுக்குத்தான் அமையும். அவர்தான் நம் தமிழகத்தின் ஒரே கவிஞர் பாரதிதாசன்.

சிவக சிந்தாமணி ஆசிரியரைப் "பொய்யாமொழி புகழ்மையறு காட்சித் திருத்தகு முனிவன்" என அக்காலத்தில் சிறப்பித்துக் கூறியது போன்று இக்காலத்தில் நம் தமிழ்ப் பெரியார் முதுபெரும் புலவர் திரு. வி. க. அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் "இணையற்ற இயற் கவிஞர்" எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனரைப் போற்றுவதனின்றும் அவர் தம் பெருமை விளங்கும்.

சென்னை
23-4-51 டி. எஸ். ஸ்ரீபால்

○●○

இனிது வாழ்க!

பழந் தமிழ்ப் புலவர்கள் அகம் புறம் என்னும் மக்கள் வாழ்வியலைப்பற்றிப் பாடித் தமிழர் வாழ்க்கையைச் சீர் செய்து சிறப்புற்றனர். ஆனால், இடைக் காலப் புலவர்களோ, மக்களை மறந்து, கடவுளரைப் பற்றியே பாடித் தம் காலத்தைப் பயனின்றிக் கழித்தனர்.

தமிழர் வாழ்வியலைச் சீர் திருத்தியமைக்க எழுந்த தன்மான இயக்கத்திற்குத் துணையாக, நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமது புலமையை — கவித் திறத்தைப் பயன்படுத்தி உறங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி யெழுப்பிப் புத்துணர்ச்சி யூட்டிப் பழந் தமிழ்ப் புலவரையும் மிஞ்சிவிட்டார். மணிவிழாக் கண்டு மகிழ்வுறும் நமது புலவர் பெருந்தகையார் உடல் உள நலத்துடன் இனிது வாழ்க!

பவானி
25-4-51 புலவர் குழந்தை

○●○

வானம்பாடி

நமது கவிஞர் பாரதிதாசனவர்கள் ஓர் வானம்பாடி. அவர் அறிவு வானில் பறந்து வட்டமிட்டுக்கொண்டே உலகில் நன்மை எவை, தீமை எவை என்பதைத் தமது ஆராய்ச்சித் திறனால் அறிந்து மக்கள் பகுத்தறிவு பெற்று நல்வாழ்வு பெற முன்னறிவிக்கும் ஓர் ஒப்பற்ற கவிஞர்.

சென்னை எம். எம். தண்டபாணி
25-4-51 தேசிகர்

○●○

பாரதி தந்த அணுகுண்டு

கவிஞர் இயற்றும் ஒவ்வொரு கவிதையும் தமிழகத்தின் மூச்

சுக் காற்று. தமிழின் உயிரை வளர்க்கும் தனிப் பண்பு பெற்றவை. பழமையை நாசப்படுத்தப் 'பாரதி' நமக்குத் தேடி வைத்து விட்டுப் போன 'அணு குண்டு' கவிஞர் பாரதிதாசன். அவர் செய்ய முடியாததை இவர் செய்தார். கவிஞர் வாழ்க.

புதுவை
23-4-51 இளமைப்பித்தன்

○●○

வழிகாட்டும் கவிதைகள்

கவிஞர் பாரதிதாசன் அவர்கள், ஒரு சிறந்த ஒப்பற்ற கவிஞர். கவிஞன உள்ளத்தோடு குதூகலமாக, இன்ப வெறியில் பாடுகின்றார். இன்ப உச்சியில் பாடும்போது, புதிய தமிழைப் புரட்சிகரமாகவே சிருஷ்டி செய்கிறார். சொற்கள், வெறியை மினனல் மொழியாகவே எடுத்துச் சித்திரிக்கின்றன. இயற்கையின் எழிலையும், மனித இயற்கையின் மாறுபாடுகளையும், மனம் பொங்கி வரும்போது எடுத்துக் காட்டுகின்ற முறையே தனி இன்பம் கொண்டது. கவிஞரின் 'மயில்' எவ்வளவு அருமையான சிருஷ்டி ; மயிலைக் கண்ட கவிஞர் மயிலாகவே ஆடிப் பாடிக் கும்மாளி யிடுகின்றார். மனித சமூகம், எந்த அளவில் துன்பத்தை ஒழித்து இன்பமாகவும் இயற்கையாகவும், சுதந்திரமாகவும் வாழலாம் என்பதற்கு ஒரு சிறந்த தீபஸ்தம்பமாக அவருடைய கவிதைகள் வழி காட்டுகின்றன. 'அழகின் சிரிப்பு' என்ற தலைப்பே ஒரு அபூர்வமான தலைப்பல்லவா? இதை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க ஆசைப்படுகிறேன்.

திருச்சி
24-4-51 வி. ஆர். எம். செட்டியார்

○●○

கவிஞர்களின் சிகரம்

இன்றைய கவிஞர்களின் சிகரம் புரட்சி கவி பாரதிதாசன். அவர் கவிதைகள் உயிர் ஓவியம். கற்பவர் கருத்தைக் கவர்வன. கேட்போர் செவிக்கு விருந்து ; இனிய சொற்கள்; எளிய மொழிகள்; புதிய கருத்துக்கள்; அரிய கற்பனைகள்; கண்மூடி வழக்கங்களைக் கருவறுப்பதிலே முனைந்து நிற்கும் வீரவுரைகள்.

அவர் கவிதைகள் சமுதாயப் பணி செய்யும் வீரர்களுக்கு ஆண்மையும், அறிவும், ஊக்கமும் ஊட்டுவன ; சமுதாயப் புல்லுருவிகளின் நெஞ்சத்தை நடுங்க வைக்கும் இடி முழக்கம்.

சமூகத்தின் அடித்தலத்திலே கிடந்து அல்லற்படும் மக்கள் பல கோடி. அவர்களைத் தட்டி எழுப்பும் கவிதைகள், இன்னும் பல வேண்டும். இவைகளை உலகம் புரட்சிக் கவிஞரிடம் எதிர்பார்க்கின்றது. வாழ்க பாரதிதாசன்! வளர்க அவர் எண்ணம்.

சென்னை
26-4-51 சாமி சிதம்பரன்

○●○

நந்தா விளக்கு

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழகத்தின் செல்வம். சமூ

சப் புரட்சிக்குத் தமிழர்களை உருவாக்கிய தனிப் பெரும் வீரர்.

அவராலே தமிழ் வளம் பெற்றது. தமிழர் வாழ்வு பெற்றனர்.

நைந்த தமிழர்களின் நரம்புகளில் முறுக்கேற்றிய 'நந்தா விளக்கு' அவருடைய கவிதைகள்.

பொதிகையின் தென்றல் போல் புதுமை நிறைந்தவை அவருடைய கவிதைகள். காதிற்கும் இனிமை, கருத்துக்கும் இனிமை, சொல்லும் நாவிற்கு இனிமை தருவன அவருடைய கவிதைகள். அவர் வாழ்க !

சென்னை
25-4-51

டி. கே. ஷண்முகம்

தமிழ் விழா

பாரதிதாசனின் மணி விழா தமிழ் மக்களின் தமிழ் விழா. கன்னல் தமிழோடு பாரதிதாசன் வெண்ணிலாவும் வானும் போற் கலந்து ஒன்றுபட்டவர். பாட்டாளி மக்களுக்குப் பரிந்துருகித் தொண்டுபட்டவர். அறியாமையை அழிக்க அஞ்சாமையை மேற்கொண்டு, கொலை வாளினை எடடா என்று கொக்கரிப்பவர். அவர் இளகிய மனத்தைக் கண்டு இரும்பு மனத்தர்கள் அஞ்சுவார்கள். பாரதிதாசன் நீடுழி வாழ்க.

அ. நகர்
24-4-51

ஜி. சுப்பிரமணியம்

மேலான பணி

எண்ணங்கள் வாழவைக்கும் மனிதர்களும் அந்த எண்ணங்களை உண்டாக்கி வாழவைக்கும் மனிதர்களும்—

கவியரசர் பாரதிதாசன் இதில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்; இதில் முதல் வரிசையில் தனியிடமும் சிறப்பான பெருமையும் அவரை அடைந்து பெருமை பெற்றுள்ளன.

மின்னலாக ஒளி வீசி மின்மினியாகத் தேய்ந்துவிட்ட தமிழ்ச் சமுதாயத்தை மீண்டும் நிலவாக நிறுத்தும் மேலான பணியே அவர் பாட்டாக உருவெடுக்கிறது !

பார்வையினாலேயே எதையும் படித்து முடிக்கும் சிந்தனைச் சிற்பிகளைக்கூட கவியரசர் பாட்டு வாய்விட்டு, படிக்க அல்ல, பாடவே வைத்துவிடுகிறது ! அன்னாருக்கு மணிவிழா எடுப்பதில் வழி தமிழர்கள் தங்கள் அறிவின் மனத்தையும் அன்பின் இதயத்தையும் பரந்த உலகத்துக்குத் திறந்து காட்டுகிறார்கள் !

குடந்தை
24-4-51

நா. பாண்டுரங்கன்

வாழ்க பன்னூறாண்டு

அன்புடைய நண்பர் திரு. பாரதிதாசன் அவர்களது மணிவிழாச் செய்தி கேட்டு மட்டிலா மகிழ்ச்சியுறுகின்றேன். இழுமென்மொழியும் விழுமிய கருமுதும், செறிந்த அழகிய தமிழ்க் கவியால் எம்மனோர் உள்ளத்தை இன்பத்தில் திளைப்பிக்கும் திரு. பாரதிதாசனாரது தமிழ்க் கவிச் செல்வம் மேன்மேலும் பெருகுக.

புன் கவிஞர் சூழ்ச்சி
புலர்ந்தொழிய இன்பநிறை
நன்கவிஞன் செந்தமிழ்
நன்னாட்டுக்கு - மன் கவிஞன்
சூழ்க புகழ் சுற்றம்
துணை பாரதிதாசன்
வாழ்க பன்னூறாண்டு
மகிழ்ந்து.

அ. நகர் ஔவை
26-4-51 சு. துரைசாமி

○●○

புதுக் கவிதா பரம்பரை

கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பின்பற்றி எத்தனையோ இளைஞர்கள் தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். பாரதிதாசன் பாணியிலே ஒரு கவிதா பரம்பரை தோன்றியிருக்கிறது. அதுதான் ஒரு கவிஞனின் கவிதா மேதைக்குரிய சான்றாகும்.

கொத்தமங்கலம்
24-4-51 மு. அண்ணாமலை

○●○

பாட்டாளிகளின் அண்ணல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இன்றைய மக்கள் வாழ்வின் எதிர்காலப் பெரும் புரட்சிச் சின்னமாக விளங்குவது போலவே 60 ஆண்டு நிறைவு மணி விழாவிலும் வயதுக்கேற்ற உடல் தளர்வில்லாது வயதும் அவரைத் தன் வழிப்படுத்த முடியாத ஒரு தனிப் புரட்சி நிலையுடையதாக இருக்கிறது. கல்வியின் வாடை வரவிடாத மதக் குருக்களின் மேடை நொறுக்கத் தொலையும் பீடைகளாவும்; காட்டை, நாடு நகரம், மாட மாளிகை, கூட கோபுரங்கள் ஆக்கியவனின் மதி இழந்து கோவணாண்டி ஆன நிலையை வேறு எவரும் விளக்கிக் கூற நெஞ்சு அதிரும் நிலையில் அஞ்சாது ஆர்ப்பரித்துக் கூறிய அண்ணல் பாரதிதாசனைப் பாட்டாளி உலகம் என்றும் மறவாது.

சென்னை
24-4-51 என். ஜீவரத்தினம்

○●○

சிறந்த விருந்து

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகள் நம் தமிழ்நாட்டிற்கே சிறந்த விருந்து. நமது கவிஞர் மேலும் 60 ஆண்டுகள் நமது நாட்டில் வாழ்ந்திருந்து மடமைச் சேற்றில் அமிழ்ந்து கிடக்கும் மக்களை அறிவுடைய மக்களாக ஆக்கும் பணியில் தொடர்ச்சியாகத் தொண்டு செய்யவேண்டுமென விரும்புகிறேன்.

திருவொற்றியூர்
25-4-51 டி. சண்முகம்

○●○

நீடு வாழ்க

கவிஞருக்கு மணி விழாக் கொண்டாடுவது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சி. புலவர் பெருமான் நீடூழி வாழ்க!

ஆனால் அதற்குள் அவருக்கு 60 ஆண்டுகள் நிறைந்துவிட்டதை நினைக்கும்பொழுது என்னகத்தே இன்னொரு எண்ணமும் எழுகின்றது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவில் அவரைக் கவிகள் எழுதிக்

குளிக்கச் செய்வதன் மூலம் தமிழ்நாடு முழுப்பயனும் பெற வேண்டும் எனபதே என எண்ணம். வாழ்க, புரட்சிக் கவிஞர்!
சென்னை
24-4-51 **வ. உ. சி. சுப்ரமணியம்**

○●○

எங்கள் கவிஞன்

"எங்கள் கவிஞன்" என உரிமையோடு உண்மைத் தமிழன் கூறவேண்டுமானல் அவன் நிச்சயம் பாண்டிச்சேரிக் கவிஞன் — பாரதிதாசனை — மறந்துவிட முடியாது! — தமிழகத்தில் தம் கவிஞர் பரம்பரையை உண்டாக்கினன்! வாழ்க அவனும்— அவன் கவிதைகளும்!
சென்னை
24-4-51 **என். எஸ். இளங்கோ**

○●○

இளங் கதிரவன்

பாரதிதாசன் தமிழகத்தின் தனிப் பெருங் கவிஞராவார். தமிழை நினைக்கும் தன்மை உடையவர்கள் தமிழ்க் கவிஞர் பாரதிதாசனை நினைக்காமலிருக்க முடியாது. ஒரு காலமிருந்தது— ஏனென்று கேட்பாரிலாது தமிழ் தாழ்ந்து, தேய்ந்து வந்து கொண்டிருந்த அக் காலத்தில் "இனிமைத் தமிழ்மொழிஎமது எமக்கின்பம் தரும்படி வாய்த்த நல்லமுது"! என்று பாவிசைத்து பைந்தமிழின் உயர்வுக்காகப் பாடுபட முன் வந்தார் நமது புதுவைக் கவிஞர்.

புரட்சிக் கருத்துக்களைத் தேன் போன்ற கவிதையிலே கலந்து தமிழர்களின் இதயம் தித்திக்க இவரைப்போல எவரும் நந்ததில்லை. அவரது கவிதைக் கருத்துக்கள் தமிழர்களின் உள்ளத்திலே ஊறிய காரணத்தால்தான் இன்றைய தமிழகத்தில் ஓரளவாவது தமிழ் வாடை வீசுகிறது. தமிழர்களும் தரணியிலே தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது. இடைக் காலத்திலே இருண்டு கிடந்த இலக்கிய வானிலே எழுந்த இளங் கதிரவனும் பாரதிதாசனர் வாழ்க! வாழ்க தமிழ்!
தில்லை
24-4-51 **புலவன். கோ. கணபதி**

○●○

வருங்காலத் தாரகை

பாரதிதாசன் அவர்கள் தமிழகத்தின் கவிஞரேறு! காலப் பெரு வெள்ளத்தில் அலை மோதும் அலைப் புயலவர். மனித இனத்தின் பாதுகாவலன். மக்கள் நல்வாழ்வு வாழ வழி வகுத்துக் கொடுத்த வருங்காலத் தாரகை. இன்று அவருக்கு அறுபதாவது ஆண்டு மணிவிழா தமிழகம் கண்டறியாத வகையிலே நடைபெறுகின்றது. இது கவிஞர் மாட்டு மக்கள் கொண்டுள்ள எல்லையற்ற அன்பிற்கோர் எடுத்துக்காட்டு. இந் நன்னாளில் கவிஞர் பெருந்தகையை அவர் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். அவரது கவிதை மணம் உலகெங்கும் கமழவேண்டும். அவரது புகழ் அகில உலகமும் பரவவேண்டுமென வாழ்த்துகின்றேன்.
கோவை
24-4-51 **எஸ். சதாசிவம்**

தேன் விழா

வான மண்டலத்திலே நிறைந்திருக்கும் விண்மீன்களுக்கெல்லாம் இணையில்லாது விளங்கும் வெண்ணிலாப் போல, கவிதா மண்டலத்தில் ஈடும் இணையும் இல்லாது விளங்குபவர் நம் கவிஞர் பாரதிதாசன்! அவரது கவிதைகளைப் படித்து மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன். காலத்துக்கேற்ற கருத்தும், பொருளாழத்தோடு கவிதை புனைதலிலும் வல்லவர் என்பதற்குப் பாரதிதாசன் அளித்த கவிதைகளே சான்றாகும். அவரது ஒவ்வொரு வரியும் கோழையை வீரனாக்கக் கூடியவை! அன்னார் நாட்டுக்கும், இலக்கியத்திற்கும் செய்த தொண்டை எவரும் மறவார். அப் பெருந்தகையாளர் மணி விழா, இலக்கியப் பித்தேறிப் போன இதயத்திற்கு உவந்தளிக்கும் தேன் விழா! வருங்காலத் திராவிடம் 'இருபதாம் நூற்றாண்டுப் புதுமைக் கவிஞன் பாரதிதாசனுக்கு, முன்னோர்கள் சிறப்புச் செய்து எம்மையும், மக்களையும் பெருமைப் படுத்தினார்கள்' என்று கூறிப் பெருமைப்படுவது என்பது உறுதி. வாழ்க வையகமெல்லாம் கவிஞன் புகழ்!

சென்னை
23-4-51 பி. இராமசாமி

○●○

தமிழ்க் கவியின் ஊற்று

உலகுபுகழ்க் கவிஞர்களுள்
முதல்வனாக
ஒப்பற்ற பாரதியின்
நண்பனாகப்
பலபுலவர் விண்மீனின்
மதியமாகப்
பழமையெனு மழிதனக்
கோர் தீயுமாக
குலவுமெழில் தமிழெதிரிக்
கூற்றுமாக
கொண்டல் நிகர்த் தமிழ்க்
கவியின் ஊற்றுமாக
நிலவுலகில் விளங்கிடும் நம்
கவிஞரென்றும்
நிலைத்திடும்பே
ரிலக்கியத்தைத் தந்து வாழ்க!

தில்லை
24-4-51 புலவர் த. முருகேசன்

○●○

சிந்தனைக் கருவூலம்

இதயத்தின் அடித்தளத்திலிருந்து பீய்த்து உதறிக்கொண்டு வெளி வருகிறதே அதுதான் உண்மையான கவிதை. அதனுடைய வேகமே தனி. புரட்சிக கவிஞரின் கவிதைகள் அத்தனையும் சிந்தனைக் கருவூலங்கள்.

எழும்பூர்
24-4-51 வ. சம்பந்தன்

○●○

காலத்துக்கேற்ற கருத்து

பாரதிதாசனார்க்குப் பொன்னி மணி மலர் வழங்க விருப்பது நற்செய்தியே. இந்த முயற்சி சிறக்க.

இலக்கியம் என்பது மக்களுடைய வாழ்க்கையோடு இணைந்தது. இதையுணர்ந்த கவிஞர் பாரதிதாசன் அவர்கள் காலத்திற்கேற்ற கருத்துக்களை உணர்ச்சி நிறைந்த நடையிலே, எளிய இனிய தமிழில் கவிதைகளாகத் தந்திருக்கிறார்கள் அவர்கள் பாடல்களைப் பால்

ணம் மாறாக் குழந்தைகளும் அறியும். கிளியின் பெருமை முதல் நாட்டின் பெருமைவரை அவர்கள் பாடலிற் காணலாம். தமிழ்மக்கள் இந்த நன்னாளில் அவருக்கு வணக்கம் தெரிவிப்பது மிக மிகப் பொருத்தமாகும்.

சென்னை சோம. லெ·
23-4-51 இலக்குமணச் செட்டியார்

○●○

தன்னம்பிக்கை ஊட்டுகிறார்

கவிஞர் பாரதிதாசன் மணி விழாக் கொண்டாடுவது பற்றிப் பெரிதும் மகிழ்கின்றேன். புரட்சிக் கவிஞர் தன் கவிகளிலே புரட்சிக் கொள்கைகளை மக்களிடத்திலே பரப்பும்போது இலக்கியச் சுவை குன்றாமல் இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. பழமை, வைதீகத்தின் பரம எதிரியான கவிஞர் தன் கவிகளிலே பகுத்தறிவுக் கொள்கைகளை மக்களிடத்தில் அள்ளி வீசி. எதற்கெடுத்தாலும் "தலைவிதி", "வினைப்பயன்" என்று தன்னம்பிக்கையை இழந்து நிற்கும் திராவிட மக்களிடத்தில் "தன்னம்பிக்கை"யை ஊட்டி மக்களிடம் அச்சமின்மை, துணிவு இக்குணங்களை உண்டாக்குகிறார். கவிஞர் காலத்திலேயே அவர் இன்பத் திராவிடத்தின் ஆஸ்தான கவிஞராகத் திகழப் பெரிதும் விழைகின்றேன்.

திருப்பூர்
25-4-51 செ. இரா. சுப்பிரமணியம்

○●○

விடுதலை தந்த வீரன்

பலர்க்குப் பயன்படாமல் சிலர் பிடியில் சிக்கி முடங்கிக் கிடக்கும் மூலதனம் போலத் தமிழும் படித்தவர் பண்டிதர் என்ற சிலருக்குள் சிறைப்பட்டுக் கிடந்தது—அந்தச் சிறையை உடைத்துச் செந்தமிழ்க்கு விடுதலை தந்த வீரன்—பாரதிதாசன்.

கரந்தை
25-4-51 ஏ. கே. வேலன்

○●○

ஒளிசிந்தும் முழுநிலவு

பாரதிதாசன் திராவிடத்தின் ஒளிசிந்தும் முழுநிலவு! திராவிடத்திலே கப்பியிருந்த கும்மிருட்டு அந்த நிலவின் ஒளியால் மறைந்து வருகிறது. புன்னகை புரி நோக்கிப் பயணம் செய்யும் நமக்கெல்லாம் அந்த ஒளி பூரிப்பைத்தான் தருகிறது...பாதையிலே படர்ந்துள்ள முட்செடிகளையும், படுகுழிகளையும் நாம் அந்த ஒளியின் துணைகொண்டு உணர்ந்து கொள்ளுகிற காரணத்தால்!

திண்டுக்கல்
24-4-51 மா. தங்கவேலர்

○●○

எழுச்சிக் கவிஞர்

அரசர்கள், பிரபுக்கள், மதத்தலைவர் போன்ற புளிச்சேப்பக்காரரின் ரசிப்புக்குரியதாயிருந்த கவிதைத் துறையிலே பகுத்தறிவுக் கனல் ஏற்றி ஏழையை, பெண்ணை, பாட்டாளியைத் தலைநிமிரச் செய்யப் பாடினார். பழமைச் சக்திகள் எதிர்த்தன; எதிர்க்கின்றன. ஒடிந்து விழுந்தன; விழுகின்றன. இவ்விருபதாம் நூற்றாண்டின் எழுச்சிக்

கவிஞன் பாரதிதாசனே என்ப தைக் காலமும், தமிழும் ஏற்றன.

சலகண்டபுரம்

25-4-51 ப. கண்ணன்

வெற்றிக் கவிஞர்

கவிஞர் பாரதிதாசன் விழிப் புற்ற தமிழ் உலகின் வெற்றிக் கவிஞர்; தமிழ் வளர்க்கத் துடிக் கும் இளைஞர்களுக்கு வழி காட் டும் முன்னோடி; புதுமைக் கருத் துக்களைக் கவிதையிலே கலந்து தந்த சிந்தனையாளர்; இனிமை, இளமை, உயிர்ப்பு, உணர்வு, அழகு, எளிமை, மாண்பு, வளமை — தமிழின் சிறப்புகள் அனைத் துக்கும் எடுத்துக்காட்டுகள் பாரதிதாசனின் கவிதைகள்.

சென்னை

26-4-51 வல்லிக்கண்ணன்

அஞ்சாமையின் சின்னம்

பாரதி பரம்பரையின் மூத்த பிள்ளை பாரதிதாசன். வீரத் தின் எல்லைக்கோட்டைத் தொடு வது அவரது கவிதைகள்: அஞ் சாமையின் சின்னமாக விளங்கு கிறார்கள். உள்ளத்துக்கு வலி மையும் தெம்பும் வேண்டுகிற வர்களுக்கு அவர் கவிதைகள் நிறைகுறையாத பொக்கிஷமாக இருக்கிறது. பன்முறை அவர் கவிதைக் கடலில் நீந்தியிருக் கிறேன். இன்னும் அலுப்போ சலிப்போ ஏற்பட்டதில்லை. இது தமிழகத்தின் ஏகக் குரல்.

சென்னை

26-4-51 எஸ். எஸ். மாரிசாமி



திருமணம்

சென்னை மூர்த்தி டயர்ஒர்க் ஸின் உரிமையாளர் திரு. K தட்சிணாமூர்த்தி அவர்களின் புதல்வி சாந்தகுமாரிக்கும் மோகன் ஆர்ட்ஸ் உரிமை யாளர் திரு. மோகன கிருஷ் ணன் அவர்களுக்கும் 20-4-51 அன்று சென்னை யில் விமரிசையாகத் திரு மணம் நடைபெற்றது. மண மக்களுக்கு எங்கள் வாழ்த்து.



பாரதிதாசன்

எண்ணினால் நூறிருக்கும்
எங்கள் வீட்டின் எலிகள்—அவை
இரவு பகல் பண்டங்களைத்
திருடுவதில் புலிகள்!

கண்ணெதிரில் ஓடி ஒன்று
கதவிடுக்கில் மறையும்—அங்குக்
காய்ச்சி வைத்த நெய்யினிலே
பாதிக்கு மேல் குறையும்.

பிண்ணாக்கைத் தின்ற எலி
பானையையும் உடைக்கும்—நல்ல
பெட்டியினைத் துளைத்த எலி
பட்டினையும் கடிக்கும்

எண்ணெயினைக் குடிக்கும் ஒன்று
புளியை ஒன்று தின்னும்—அங்கு
இரண்டெலிகள் பழச்சீப்பை
இழுக்கும் முன்னும் பின்னும்



ஐந்து பரிசுகள்

டி. கே. சீனிவாசன்
இளமைப்பித்தன்
க. சண்முகசுந்தரம்
எஸ். ஆறுமுகம்

ஆகியோர் அளிக்கும்
நான்கு பரிசுகள்

1–6–51 ல் தவருது
உங்களை வந்தடைய

ரூ. 3-8-0

அனுப்பி முந்திக்கொள்ளுங்கள்.

பொன்னி அலுவலகம்

[புத்தகப் பிரிவு]
16—சேணி அம்மன் கோயில் தெரு
தண்டையார்ப்பேட்டை :: சென்னை—21.

குறிப்பு: 20—5—51 க்குள் பணம் அனுப்புபவர்களுக்கு மட்டும் பொன்னி அலுவலகத்தாரின் **ஐந்தாவது பரிசு** ஒன்று தேடிவரும்.

தடுமாற்றம்

—ஏ. எஸ். ராகவன்—

இலவம் பஞ்சுப் படுக்கை தான்; ஆனால் முள்ளாயிருந்தது. கண்ணாடி ஜன்னல் மூலம் கரிய கீழ்வானம் அடிக்கொரு முறை குமுறிச் சிரிக்கும் சிரிப்பொலி—இடியோசை — கண்ணைப் பறிக்கும் மின்னலுடன் காதில் விழுந்தது. மழைத்துளி கண்ணாடி மேல் சில விநாடி நின்று பின் பல துளிகளுடன் ஐக்கியமாகி மறைந்து கொண்டே இருந்தது.

கடிகாரம் 'டிக்' 'டிக்' என்று ஒலித்துக்கொண்டு இருந்தது. அந்த ஓசை காதில் விழும் போது தன் இருதயத்தின் படபடப்புத்தானோ என எண்ணுவான் நாராயணன். ஏனெனில் நள்ளிரவில் கண்விழித்து இப்படித் தடுமாறும் நிலையிலேதான் அவன் இருந்தான். விடிவிளக்காகச் சிறு மின்சார விளக்குப் பச்சை நிறத்தை வீசிக்கொண்டிருந்தது. சுவரில் பூசப்பட்டிருந்த பச்சை டிஸ்டெம்பருடன் அது கலந்து உறவாடி மௌனமாகச் சரசமாடுவதுபோலதோன்றியது.

நாராயணன் படுக்கையை விட்டு எழுந்து விளக்கைப் போட்டான். அறை முற்றும் வெண்மையான ஒளி படர்ந்து விட்டது. பழைய சூழ் நிலையைப் போக்கடித்துவிட்ட பெருமிதத்தில் படுக்கையில் அமர்ந்து புத்தகத்தைப் புரட்டினான். ஆனால் அதற்குள் இருந்த கடிதம் மீண்டும் பழைய சம்பவங்களை நினைப்பூட்டும் தூதனாக இருந்தது.

சரோஜாதான் எழுதியிருந்தாள். சுமாராகப் படித்த பெண் தான். ஆனால் உள்ளம் எரிமலை போலக் குழம்பிக் குமுறும் போது வார்த்தைகளுக்கா பஞ்சம் ஏற்படப்போகிறது?

"கோபம் கள் என்று முன் ஒரு முறை நீங்களே கூறினீர்கள். ஆனால் அதை அருந்திவிட்டுக் கூரிய அம்பை என்மீது எய்துவிட்டீர்கள். மானாக இருந்தால் அன்றே நான் இறந்திருப்பேன். ஆனால் புலியாக இருக்கிறேன் நான், அதையும் தாங்கிக்கொண்டு. ஏனெனில் எனக்கு ஒரு சந்தேகம். ஒரு வேளை அந்த மதுவை நானே தான் அந்தக் கோப்பையில் வார்த்துத் தங்களுக்கு அளித்து விட்டேனோ என்று"

அதற்கு மேல் படிக்க விரும்பாமல் கண்களை மூடிக்கொண்டான் நாராயணன். பிரமைபாக இருந்தது. சரோஜா இவ்வளவு அழகாக எழுதுகிறாளா? என்ன கற்பனைப் பின்னல்! கோபத்தை ரசமாகக் கள்ளுக்கு உவமையாக்கிவிட்டாளே!

யாருக்குக் கோபம் வந்தது? நாராயணன் இந்தக் கேள்வியைத் தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். ஆபீஸ் வேலை கசக்கிப் பிழிந்து வெற்றுடலாக வீட்டுக்கனுப்பும்போது மனதில் புரிபடாத கோபம் தானே புலி போலப் பதுங்கிக்கொண்டிருக்கிறது. வீட்டை அடைந்ததும் டிபன் காப்பி வராவிட்டால் அந்

தப் புலி ஒரு நிமிடமாவது தாமதிக்கிறதா? அன்று சரோஜாவின் மீது கோபம் வந்ததற்கு இது ஒரு காரணம். அவள் மீது குற்றமில்லை என்று கூற முடியாது. ஏனெனில் வீட்டில் டிபன் கிடையாது. காப்பி என்று கழிநீர் போன்ற வெந்நீர் மட்டும் தான் கிடைத்தது. போதாக் குறைக்கு உடலைக் குலுக்கி மினுக்கி, "இன்றைக்குச் சினிமா போகலாம். வாருங்கள். அரண்மனைக்கொட்டகையில் 'ராணியின் காதல்' நடக்கிறதாம். விமலா சொன்னாள், அதைப் போன்ற படம் இதுவரை வெளிவரவே இல்லையாம்" என்றாள்.

சரோஜாவுக்குக் கண் பார்வை கெட்டுவிட்டதோ என்ற சந்தேகம் நாராயணனுக்கு. இல்லாவிடில் எதிரே கொட்டை எழுத்தில் '3.' என்று மாதத்தின் கடைசித் தேதியை அறிவிக்கும் காலண்டரைப் பார்த்த பின்புமா அவள் இப்படிக் கேட்கிறாள்? ஆனால் நாராயணனின் சந்தேகம் உடனே தீர்ந்தது.

"என் அண்ணா வந்திருந்தான். அவசர காரியமாய் மதுரை போகிறானாம். அநேகமாக நாளைக்கு வந்து விடுவானாம்" என்றாள்.

காரணம் புரிந்துவிட்டது நாராயணனுக்கு. அண்ணன் அளித்திருக்கும் அன்புப் பரிசு 'அரண்மனை' கொட்டகைக்கு அழைக்கிறது. மேலும் ஜட்ஜின் பெண் அல்லவா? முன் யோசனை குறைந்தா போகும்!

நாராயணன் வேறு சமயமாயிருந்தால் புறப்பட்டிருப்பான். ஆனால் அவள் செலவில் படம் பார்க்க மனம் ஒப்பவில்லை. ஆகவே அவசரமாகச் சாப்பிட உட்கார்ந்தான். ரேஷன் புழுங்கல் அரிசி அவனைப் பார்த்து விழித்தது. ஒவ்வொன்றும் புளியங் கொட்டை அளவு! சாம்பாரில் உப்பே இல்லை.

"ஏன் உப்புக்குப் பஞ்சம் வந்துவிட்டதோ?... சுயராஜ்யம் வந்த கதை தெரியுமா உனக்கு? ... உப்புத்தான் முதலில் நாட்டுப்போருக்கு அடிப்படையாயிருந்தது... அதை ஏன் விரட்டிவிட்டாய் சாம்பாரிலிருந்து?" என்று கேட்டான் நாராயணன்.

சரோஜா சிரித்தபடியே, "போட மறந்துவிட்டேனே?" என்று கேட்டாள்.

"மறந்து போகவில்லை, உன் உடம்பில் அவ்வளவு திமிர் இருக்கிறது. ஜட்ஜின் பெண் அல்லவா?..." என்று கோபமாகக் கூறினான் நாராயணன்.

சரோஜா அயர்ந்துவிட்டாள்.

"ஏன் விழிக்கிறாய்? அடுத்தபடி இருப்பதைக் கொட்டு. உன் அண்ணன் தங்கியிருந்தால் சமையலில் தடபுடல் செய்திருப்பாய்... நான் ஜடம் வேலை செய்யும் 'மிஷின்' தானே...சரி. சரி.. ... கண்ணைக் கசக்காதே... எனக்கு வேலையிருக்கிறது. வெளியே போக வேண்டும்" என்றான் நாராயணன்.

அதற்குப் பிறகு வீட்டில் மௌனம்தான் நிலவியது. நள்ளிரவில் கதவு படபடவென்று

தட்டப்பட்டது. இருவரும் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டார்கள். நாராயணன் கதவைத் திறந்தான். அங்கு சரோஜாவின் அண்ணன் ராஜு நின்று கொண்டிருந்தான்!

நாராயணன் 'வா' வென்று அழைக்காமல் திரும்பினான். ராஜுவுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால் சரோஜா அவனைத் தேற்றும் முறையில், "என் அண்ணா, மதுரை போகவில்லையா?... வண்டி தவறி விட்டதா?" என்று கேட்டாள்.

ராஜு வண்டிச் சத்தம் கொடுத்துவிட்டு உள்ளே வந்ததும், "சரோஜா, அத்தைக்கு உடம்பு சரியாயில்லையாம். இப்பவோ நாளைக்கோ என்றிருக்காம். நம் ஊரிலிருந்து ஆள் வந்திருக்கிறான். நீயும் புறப்படு. காலையில் போவோம்" என்றான்.

நாராயணன் கதவைத் தாழ் போட்டுப் படுக்கையில் படுத்தான். வெளியே அண்ணனும் தங்கையும் "குசு, குசு" வென்று பேசும் ரகசியம் காதில் விழுந்தது. வேறு என்ன பேசப் போகிறாள், குற்றம், குறை கூறுவாள் என்று எண்ணிக்கொண்டான் நாராயணன். அதே சமயம் தன் நிலைமையும் அவனுக்கு நினைவுக்கு வந்தது. சாதாரண குமாஸ்தா, வயிற்றுக்கும், வாய்க்கும் சரிக்கட்டும் வருவாய் — அவளைப்போலச் செல்வக் குடும்பமா? தன் நிலைமை தெரிந்தும் ஏன் அவள் மணந்து கொண்டாள் என்ற கோபம்தான் முன் நின்றது.

காலையில் ஊருக்குப் புறப்படும்போதும் நாராயணன் ஒன்றும் சொல்லவில்லை.

"போய் வரட்டுமா?"

"ம்..."

"என்ன, பதில் சொல்லாமல் இருக்கிறீர்களே!"

"நீ போவதும் போகாததும் என் கையிலா இருக்கிறது?"

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? நீங்கள் போக வேண்டாமென்றால் நான் போகப்போகிறேனா? எந்தா அத்தை கடைசிக் காலத்தில் சாகக் கிடக்கிறாளே என்று..."

அச்சமயம் ராஜு வந்துவிட்டான். "என்ன மாப்பிள்ளை, சரோஜாவை அழைத்துப்

போய்ச் சீக்கிரம் அனுப்பி விடுகிறேன்" என்ருன்.

"தாராளமாக" என்ருன் நாராயணன்.

சரோஜா அவன் முகத்தையே பார்த்தாள். ஆனல் அவன் வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான்.

* * *

கடமுட வென்று இடி உருண்டோடியது. மழை பலமாகப் பிடித்துக்கொண்டது. நாராயணனுக்குக் குளிரவே இல்லை. அது ஏனே தெரியவில்லை.

படுக்கையில் படுத்துக்கொண்டு சிறிது நேரம் கால்களை ஆட்டினன். தனிமையில் இருப்பது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது என்ற எண்ணத்தைத் தனக்குத்தானே வரவழைத்துக்கொண்டான். விருப்பப்படி எதுவேண்டுமானுலும் செய்யலாம். வீட்டிற்கு எப்போது வந்தாலும் கவலையில்லை. ஹோட்டல் சாப்பாடு. காசை வீசி எறிந்தால் கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிருர்கள்.



சிந்தனை ஒருபடி மேலே சென்றது. இன்று தேதி பதினைந்து. ஆனால் அதற்குள் பணம் பூராவும் செலவாகிவிட்டது. காலையில் காப்பி சாப்பிட மட்டும் போதுமான சில்லரை இருக்கிறது. என் காப்பியை வீட்டிலேயே போட்டுவிட்டால் போகிறது? இது கூட முடியாதா? பால்காரன்தான், வாங்குகிறோமோ இல்லையோ, தினம் ஒரு குரல் கூப்பிடுகிறான். 'திக்'காகக் காப்பி போட்டுக் குடிக்க வேண்டும் என்று திட்டமிட்டான் நாராயணன்.

"இவ்வளவு வெளிச்சம் எதற்கு" என்று விளக்கை அணைத்துவிட்டுப் பச்சை விளக்கைப் போட்டான். அதன் மங்கிய ஒளியேதோ புதுச் சேர்க்கையைக் கொண்டுவந்துவிட்டது. எதிரே சுவரில் சரோஜாவின் படம் இருந்தது. அதைத் தற்செயலாகப் பார்த்தான் நாராயணன். அவள் கண்கள் அவனையே கூர்மையாகப் பார்ப்பதாகத் தோன்றியது. ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்? குற்றம் செய்த நெஞ்சல்லவா! பார்வையை வேறுபுறம் திருப்பிப்



விடுதலை

வென்ற தொளொடு,
மீண்டும்நம் தோள் எனும்,
குன்று சாடிய
குருதி தோய்ந்த
வெற்றி நிலத்தில்
விளைவதாம் விடுதலை.
மற்றது கெடுதலை
மறவர் மாட்சிக்கே

— பாரதிதாசன்

பழைய கோபத்தை உறுதிப்படுத்த முயன்றான். காரைச் சுவர்போல அது முதலில் பற்றிக்கொண்டது. பிறகு தொட்டதும் கையோடு வந்துவிட்டது. மறுபடியும் பழைய நினைவு இதே அறையில் — பச்சை விடிவிளக்கில், சரோஜாவின் பூத்த இளம் மேனியழகை ரசித்த நாட்கள்! அவன் சிரித்த சிரிப்பொலி!

நாராயணனுக்கு என்னவோ போலிருந்தது. பச்சை விளக்கையும் அணைத்துவிட்டுப் படுத்தான். வெகு நேரம் ஆகிவிட்டது போலும்! தூக்கம் வந்துவிட்டது.

* * *

"அம்மா, பால் வேணுங்களா?" என்ற பால்காரனின் குரல் வெளிப்புறம் கேட்டதும் நாராயணன் விழுந்தடித்துக் கொண்டு எழுந்தான். கையில் ஒரு டம்ளரைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து

"வேணும், கால்படி கொடு" என்றான்.

பால்காரன் குறும்பாகச் சிரித்தபடியே, "அம்மா இன்றைக்கு வந்துடுங்களா? கால்படி வாங்கிறீங்களே!" என்று கேட்டான்.

"ஆமாம்... ஏன் கால்படி போதாதா?" என்றான் நாராயணன்.

"இல்லே வழக்கமாக அம்மா காலையிலே அரைக்கால்படிதான் வாங்கும்" என்று கூறிவிட்டுப் பால்காரன் போய்விட்டான்.

நாராயணன் பரபரவென்று காரியங்களில் முனைந்தான். சமையலறையைத் திறந்ததும் சுவரில் படர்ந்து தொங்கிக் கொண்டிருந்த ஒட்டடை — கீழே காற்று வெகு சிரமப்பட்டுக் கொண்டு வந்து சேர்த்திருந்த புழுதி எல்லாம் ஒரே அலங்கோலமாகக் கிடந்தன. முதலில் அறையை ஒழுங்குபடுத்தியாக வேண்டும். ஆகவே விளக்கு மாற்றை எடுத்துப் பெருக்க ஆரம்பித்தான். அப்பப்பா! எவ்வளவு குப்பை! அவசரமாகப் பெருக்கும்பொழுது கயிற்று உரியில் தலைபட்டு அதிலிருந்த ஜாடி கீழே விழுந்து உடைந்தது. பெரிய ஜாடிதான். அதை உறியிலா வைப்பது? ஜாடியைப் பார்த்ததும்தான் நாராயணனுக்குப் பகீரென்றது. சரோஜா பெருமையுடன் பேசும் பண்டம் அது ஒன்றே. பழைய துணி மணிகளைப் போட்டு அவள் சாமர்த்தியமாக வாங்கிய அரும் பொருள், அது உடைந்ததைக் கண்டு அவளுக்கு வருத்தமாயிருக்கும். என்ன செய்வது?

உடைந்த துாள்களை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு தெருவில் வீசிவிட்டு வருவதற்குள், கால்படி பாலையும் விவேகமற்ற பூனை உருட்டிவிட்டு ஓடிவிட்டது. அதாவது குடித்திருக்கக் கூடாதா?

நல்லவேளையாகப் "பால் வேணுமா, பால்" என்ற குரல் தெருவில் கேட்டது. நாராயணன் வெளியே ஓடி இரண்டணாக் கொடுத்துப்பால் வாங்கிக் கொண்டு வந்தான்.

அடுப்புப் பற்றவைத்துத் தண்ணீர் கொதித்த பிறகு பாலையும் அடுப்பில் ஏற்றினான். காப்பி வடிகட்ட ஒரு துணி உண்டு. அது எங்கே என்று தெரியவில்லை. அது தொலைகிறது! பெட்டிக்குள் கால் கஜம் கெட்டித் துணி இருக்கிறது. அது வேறு எதற்கு உபயோகப்படப் போகிறது? அதை எடுத்துவர நாராயணன் பெட்டியைத் திறந்தான்.

திரும்பி வரும்போது பால் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. "ஐயையோ" என்று பதறியபடி அவசரத்தில் சூடான பால்பாத்திரத்தைக் கையாலேயே தொட்டு விட்டான். பால் பாத்திரம் கையிலிருந்து நழுவிவிட்டது. கொஞ்சம் பால் தவிர மீதி எல்லாம் தரையில் சிந்தி ஓடியது.

அரை டம்ளர் காப்பி போட்டுக் குடித்துவிட்டு ஆபீஸ் சென்றான். காலையில் டிபன் சாப்பிடாததால் பதினொரு மணிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. அருகிலி

ருந்த சாப்பாடு ஹோட்டலுக் குள் நுழைந்தான்.

புழுங்கரிசிச் சாதம் அளவாகப் பரிமாறப்பட்டது. பஞ்ச வர்ணம் கலந்த அதன் மேனியழகைக் கண்டு ஆத்திரம்தான் வந்தது அவனுக்கு சாம்பார் பரிமாறப்பட்டதும் அவசரமாகச் சாப்பிட ஆரம்பித்தான். ஆனால் காலையில் சூடுபட்டுத் தீய்ந்திருந்த கைவிரல்கள் எரிய ஆரம்பித்தன. அத்துடன் சாம்பாரில் உப்புமில்லை! அதற்காக யாரைக் கோபிப்பது? வீடா, மனைவியைக் கோபிக்க!

வேலையில் மனம் செல்லவில்லை விறைப்பு தளர்ந்துவிட்டது. மாலையில் வீடு திரும்பியதும் அலங்கோலமான சமையலறைதான் வரவேற்றது. மனம் சரியாயில்லை. ஏதாவது சினிமாவுக்குப் போகலாம் என்றால் பணம் இல்லை.

தன் அறைக்கு வந்து குறுக்கும் நெடுக்குமாகநடந்தான் நாராயணன் சுவரிலிருந்த 'சரோஜாவின் படம் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை. அவளுக்கு அவன் எழுதிய கடிதம் ஞாபகத்துக்கு வந்தது. காரசாரமாக எழுதியிருந்தான் அவன்!

சரோஜாவின் பெட்டி அவன் கண்ணில் பட்டது. அதில் ஏதாவது பணம் இருக்குமோ! பார்க்கலாம் என்று நாராயணன் அதைத் திறந்தான். பட்டுப் புடவை மேலேயே இருந்தது. பச்சைக் கலர்ப் புடவை. இந்த அறையின் பச்சைப் பின்னணிக்கு இந்தப் புடவை அவளுக்குப் பிரமாதமாக இருக்கும். அதைப் பிரித்துப் பார்த்தான் நாராயணன். அதற்குள்ளிருந்து ஒரு பச்சைப் பத்து ரூபாய் நோட்டுக் கீழே விழுந்தது. புதையலைக் கண்டது போலிருந்தது அவனுக்கு.

* * *

மறுநாள் ஆபீஸ் விடுமுறை. நல்ல வேளையாக அதற்கு அடுத்த நாளும் விடுமுறைதான். எனவே ஊருக்குப் போய்ச் சரோஜாவை அழைத்து வந்து விடுவது என்று தீர்மானித்தான் நாராயணன்.

சிறு பெட்டியை எடுத்து அதில் தனக்கு வேண்டிய சட்டை வேட்டிகளை எடுத்து வைத்துக்கொண்டான். தலையை அழகாக வாரிக்கொண்டான். சில்க் சட்டையைப் போட்டுக் கொண்டு தன் அழகைக்கண்டு தானே வியந்தான். சரோஜா அந்த நிலையில் அவனைப் பார்த்தால் அயர்ந்து விடுவாள். அவ்வளவு ஜோராக இருந்தது உடுப்பு!

புறப்படும் தருவாயில் ஒரு வண்டி வந்து நின்றது. நாராயணன் ஆச்சரியத்துடன் வெளியே வந்து பார்த்தான். வண்டியிலிருந்து ராஜுவும் சரோஜாவும் இறங்கினர்.

"வா, ராஜு......வா" என்றான் நாராயணன்.

சரோஜா அவனைக் கண்டு உண்மையாகவே ஆச்சரியமடைந்தாள். ராஜு சிரித்தான். மாப்பிள்ளை காரசாரமாகக் கடி

தம் எழுதியிருந்தது அவனுக்குத் தெரியும். ஆகவே வீட்டில் நுழைந்ததும் ஏதாவது தகராறு ஏற்படுமோ என்று பயந்தே வந்தான்.

சரோஜா மெல்லிய குரலில், "ஏது 'டிரஸ்' பிரமாதமா இருக்கு! எங்கே புறப்பட்டீர்களாம்?" என்று கேட்டாள்.

நாராயணன் சிரித்தபடியே, "உன்னை அழைத்து வரலாமென்றுதான், அதற்குள் நீயே வந்துவிட்டாய்" என்றான்.

"என்னை அழைத்து வரவா? பொய்!" என்றாள் சரோஜா.

"பொய் அல்ல. அதோ பார் சூட்கேஸ். அதில் வேண்டிய உடுப்பு எடுத்து வைத்திருக்கிறேன்" என்றான் நாராயணன்.

ராஜு உள்ளே வந்ததும் "முதலிலேயே அழைத்து வரணும் என்றுதான் பார்த்தேன். முடியவில்லை" என்றான் குழைவுடன்.

"அதனால் என்ன? பரவாயில்லை" என்று கூறிவிட்டு நாராயணன் அவனுடன் கலகலவென்று பேச ஆரம்பித்தான்.

சமையலறைக்குள் நுழைந்த சரோஜா அடுத்த கணம் வயிறு வெடிக்கச் சிரித்துக்கொண்டு வெளியே வந்தாள். "பெண்பிள்ளை இல்லாவிட்டால் வீடு எப்படி ஆகிறது பாருங்கள்!" என்றாள்.

*   *   *

"சரோஜா, சினிமாப் போகலாமா?...அரண்மனைக் கொட்டகையில் ராணியின் காதலாம்!" என்றான் நாராயணன்.

"நான் வரவில்லை..." என்றாள் ஸரோஜா.

"பார்த்தாயா! கோபமா?..." என்று கேட்டான் நாராயணன், கொஞ்சலாக.

"நான் ஜட்ஜின் பெண் அல்லவா?" என்றாள் சரோஜா.

"ஊஹூம்...நீ இனிமேல் என் ராணி" என்று அவள் கைகளைப் பிடித்தான் நாராயணன்.

நொண்டி

"வாசன்"

அச் சிற்றூரில் அவனைத் தெரியாதவர்கள் கிடையாது.

அவனுக்கும் அச்சிற்றூரை நன்ருகத் தெரியும். எந்த நேரத்தில் எங்கு சென்ருல் என்ன கிடைக்கும், எவரிடத்தில் எப்படிக் கேட்பது, எவரெவர் என்ன தருவார்கள் என்ற பட்டியல் முறை அவனுக்குப் புதிதல்ல.

ஏற்பது ஆண்டுகளாய், கால் இல்லாத அவன், கால்களுக்குப் பதிலாகக் கக்கத்தில் ஊன்றும் கவைத்தடிகளின் உதவியால் வாழ்ந்து வந்தான்.

அவன் இயற்பெயர் என்ன என்று யாருக்கும் தெரியாது. ஆயினும் அவனை எல்லோரும் "கோயில் மணி" "கோயில் மணி" என்றே அழைப்பார்கள்.

கோயில் மணி இரண்டு தூண்களுக்கிடையில், அல்லது கட்டைகளுக்கிடையில் அசைந்தாடும். அவன் கால் இல்லா உடலும் கைத்தடிகட்கிடையே அசைந்தாடுவதைப் பார்த்த எந்தக் குறும்புக்காரனே அவனுக்கு இந்தப் பெயரை இட்டிருக்கவேண்டும்.

அவனுக்குத் தாயோ தந்தையோ உற்ருர் உறவினரோ கிடையாது.

அவன் பதினைந்து வயதில் போக்குவரத்து மிகுதியான நெடுந்தெருவொன்றில் போய்க்கொண்டிருக்கும்போது வண்டியேறிக் கால்களைத் துண்டித்தது. நொண்டியானுன்.

இரக்கமான உள்ளம் உடையவர் எவரோ அவனை மருத்துவச் சாலையில் சேர்த்து உயிர்ப்பித்தார்.

அவன் அன்றுமுதல் பிச்சை எடுத்து வாழ்ந்தான். அவன் பிச்சை எடுத்து வாழ்ந்தான் என்பதைக் காட்டிலும், சமூகம் அவனைப் பிச்சைக்காரனுக்கியது என்பதுதான் உண்மை.

அவனுக்கு இந்நிலைமை ஏற்படுவதற்கு முன் அவன் காலை முதல் மாலை வரையில் நன்ருக உழைப்பான். உழைப்புக் கேற்ற கூலி கேட்பான். சற்று சுதந்தரமாக வாழவேண்டும், பிறரை எதிர்பார்க்கக்கூடாது என்றெல்லாம் அவன் நினைத்ததுண்டு.

"அம்மா! தாயே! அம்மா! தாயே!" ஒவ்வொரு வீட்டின் முன்னும் அவன் குரல் இப்படி அலறும். உடல் மணியைப் போலக் கவைத்தடிகட்கிடையே ஆடும்.

ஏதோ மலைப் பிளவிற்கு இடையே அழுத்தப்பட்டதைப் போன்று அவன் தலை, கைத்தடியால் உயர்த்தப்பட்ட தோளுக்கிடையே தோன்றும்.

சாய்ந்தாடிச் சாய்ந்தாடித் தடியை ஊன்றித் தலை நிமிர்ந்து நிற்பான். ஒவ்வொரு வாயிற்படியிலும் "அம்மா தாயே!" என்ற பாட்டுத்தான்.

எஞ்சிய ரொட்டித்துண்டு இரண்டொரு வீட்டில் கிடைக்கும்.

சன்னலின் அருகே திரைச் சீலையில் மறைந்து தெருவில் வருவோரையும் போவோரையும் பார்த்திருக்கும் எழில் நிலவுகள் இரண்டொரு காசுகளை வீசும்.

மக்கள் சுவைத்த மிச்சில், புளித்த குழம்பு, வரண்ட ரொட்டித் துண்டுகள் கிடைக்கின்ற நாளே அவன் திருநாள்.

இப்படிச் சில நாட்கள் அவன் வாழ்வில் கிடைப்பதுண்டு—சில நாட்கள் கிடைக்காத வெறும் நாட்களாக இருப்பதும் உண்டு.

இது அவனுக்குப் புதிதல்ல.

மாட்டுக்கொட்டகைகள் எங்கெங்கு உள்ளனவோ, அவையெல்லாம் அவன் படுக்கை அறை. ஒரு மூலையில் வைக்கோல் மீது படுத்துறங்குவான். உறக்கம் வராதபோது தன் நிலையை எண்ணி எண்ணி ஏங்குவான். பிச்சை எடுத்து வாழ்கின்ற வாழ்க்கை அவனுக்கு வெறுப்பாகத்தான் இருந்தது. என்ன செய்வது, வயிறு விடுகிறதா?

பலருடன் வெற்றிகண்ட பயில்வான், ஒருவனிடம் தோற்றுப் போவதுண்டு. பல நாட்டை வென்ற அரசன் ஒரு நாட்டில் புறமுதுகிடுவதுண்டு. பல முரட்டுக் காளைகளை அடக்கிய காளை ஒருகாளைக்குப்பயந்து ஓடுவதுண்டு. பல வேல்விழிகளைவெற்றி கண்ட துறவி ஒரு சேல்விழியால் சிறைப் படுத்தப் படுவதுண்டு. அதைப்போலச் சோமனைச் சீரழித்த குளிர், கோமளவல்லியைக், குலுக்கு நடைக் காரியைக் கொடுமைப் படுத்திய குளிர் அவன் குறையுடல் முன் போட்டியிட்டுத் தோற்றது.


செல்வத்தை விட்டுப் பிரிவதா-சிங்கார மாளிகையை விட்டுப் பிரிவதா-உற்றார் உறவினரை விட்டுப் பிரிவதா-பட்டமும் பதவியையும் விட்டுப் பிரிவதா என்று ஏங்கும் மனிதரைப் போலல்ல அவன்.

"சாவு வாராதா? சாவு வாராதா?" என்று ஏங்கிக் கொண்டே இருந்தான் அவன்.

ஒரே ஒரு ஆதரவு அவனுக்கு இருந்தது. மூலைவீட்டு மூதாட்டி சற்று இளகிய நெஞ்சமுடையவள். மனிதரை மனிதராகப் பார்ப்பவள். மற்றவர்களைப் போல மனிதரைக் கழுதைகளாகவோ — நாய்களாகவோ பார்ப்பவளல்ல.

உணவு கிடைக்காதபோது அவனுக்குச் சிறு ரொட்டித் துண்டும் கொஞ்சம் தண்ணீரும் கொடுத்து ஆதரிப்பவள்.

அவள் கொடுப்பது அவன் வயிற்றுக்குப் போதாது என்றாலும் அவன் அதையே பெரிதாக எண்ணி அவளை வாழ்த்துவான். அவன் அந்தவீட்டுச் செல்லப் பிள்ளை என்று பலர் குத்தலாகக் கூறுவதுண்டு.



வீட்டில் எங்கோ ஒரு மூலையில் படுத்துறங்க அவள் இடங் கொடுக்காவிட்டாலும் மாட்டுக் கொட்டகை

யில் படுத்துறங்குவதை அவள் தடுத்ததே கிடையாது.

அவளும் இறந்துவிட்டாள்.

அவள் இருந்தவரையில் அவனுக்குச் சற்று நிம்மதி இருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல அந்தச் சிற்றூரில் இருந்தவர்கட்கு அவன்மேல் வெறுப்புத் தோன்றியது.

வெறுப்புக்குரிய செயல் அந்த நொண்டி செய்தது கிடையாது. ஆயினும் ஏனோ அவ்வூர் மக்களின் கண்கள் அவன்பால் வெறுப்பைக் கக்கின.

இரக்கம் காட்டிய இரண்டொரு சீமாட்டியின் மனமும் இரும்பாகியது.

உண்ட உணவையே மீண்டும் மீண்டும் உண்ணுகின்றவர்களுக்கும் கண்டகாட்சியையே மீண்டும் மீண்டும் காண்கின்றவர்களுக்கும் வெறுப்பேர்படுமாம். இது ஒருவாறு செல்வர்களுக்குப் பொருந்தலாம். ஏழைகட்கு எவ்வாறு பொருந்துமோ அறியோம்.

அவனை அடிக்கடி கண்டகாரணத்தாலோ அல்லது அடிக்கடி ஏதாவது கொடுத்த காரணத்தாலோ அந்த நொண்டியின் மீது அவர்கள் மனம் இரக்கங்காட்ட இசையவில்லை.

பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன அச் சிற்றூரில் சிலர், "நீயேன் வேறு எந்த ஊருக்கும் போகாமல் இங்கேயே தொந்தரவு செய்கிறாய்" என்று சிடுசிடுத்துக் கூறினர்.

"இது என்ன சனியன்! ஏதோ ஒருநாள் இரண்டு நாளைக்குத்தான் பிச்சை இடலாம்! காலம் முழுதுமா?" என்று கடுமொழி கூறினர் சிலர்.

"சோம்பேறிக் கழுதைகள்! வேறு வேலையே கிடையாது" என்றனர் சோம்பேறிகளுக்கும் வயிறு உண்டு என்பதை மறந்துவிட்ட சிலர்.

"குளத்திலே குட்டையிலே விழுந்து சாவதுதானே" என்பர்-படியளந்து உலகத்தைப் பராமரிக்கும் பரமபிதாக்கள்.

"ஆளைப்பார், மணலிலே பிடுங்கிய கிழங்கைப் போல இருக்கிறான்" என்பர் உழைக்காது பிறர் உழைப்பில் உண்டுகழிக்கும் தொந்திபெருத்த திரு அவதாரங்கள்.

'கொடுத்துவைத்தவன் மாதிரி அடுத்து அடுத்து வந்து விடுகிறானே" என்று குத்திக்காட்டுவர் சிலர்.

நொண்டியோ மறுமொழி கூற மாட்டான். வசைமொழி கேட்டுக் கேட்டு மரத்துப் போன அவன் செவிகளில் வீசிய அம்பு போன்ற சொற்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

குமரியையும், சீமாட்டியையும் சீமானையும் பார்த்துப் பார்த்துக் கெஞ்சிய விழிகளுக்கு ஓய்வே இல்லை.

வீடுவீடாக அவன் குறை உடலை நடத்திச் சென்ற அவன் இரண்டு ஊன்று கோல்களும் அவனை ஒவ்வொரு வாயில் தோறும் நடத்திச் சென்றன.

அவன் வாய்திறந்து பேசினதே கிடையாது. இவ்வளவு

ஏசலையும் கிண்டலையும் ஏற்றுக் கொள்வானே தவிர ஏதும் பேசமாட்டான்.

வயிற்றுக்கு வழியில்லாத நமக்கு வாயேன் என்பது அவன் சித்தாந்தமாக இருக்கலாம் அல்லது முற்பிறப்பின் பயனுல் மூண்ட தீவினை என்று யாராவது அவனுக்கு உபதேசம் செய்திருக்கலாம்.

அவன் பேசுவது கிடையாது.

ஆனல் வீடு வீடாகச் சென்று கையேந்தி "அம்மா! தாயே!" என்ற வேதனை நிறைந்த குரலைக் காட்ட அவன் ஒருநாளும் தவறியது கிடையாது.

* * *

இந்த நாற்பது ஆண்டுகளாய் அந்தச் சிற்றூர் ஒன்றுதான் அவனுக்குத் தெரியும். அவன் கண்ணுக்கெட்டிய அச்சிற்றூர்த் தோப்புகளுக்கும் மலைகளுக்கும் பின்னே உலகம் விரிந்திருக்கிறது என்பதை அவன் உணராததாலோ என்னவோ — வேறு ஊருக்குப்போய்ப் பிழைக்க அவன் விரும்பவில்லை.

சந்தேகத்தோடு சில கண்கள் அவனைப் பார்த்தன — சலிப்போடு சில கண்கள் அவனைப் பார்த்தன — ஆயினும் அச்சிற்றூரை விட்டுப்போக அவனுக்கு விருப்பம் இல்லை

பழகிய ஊரைவிட்டு எப்படிப் போவது என்ற பாசமோ—கால் இல்லாத நாம் எப்படி வேற்றூருக்கு நடந்துபோவது என்ற கவலையோ — என்னவோ அவனுக்கு வேறு ஊருக்குச் சென்று வயிறு வளர்க்க விருப்பம் உண்டாகவில்லை.

அச்சிற்றூருக்கு எப்பொழுதாவது சில சமயம் போலீஸ்காரர்கள் வருவார்கள். அவர்களைத் தொலைவில் அவன் பார்த்தானே இல்லையோ தடியை நீட்டி நீட்டி வைத்து எந்த மரத்திற்கிடையிலேனும் சென்று மரத்தோடு மரமாக ஒட்டிக்கொள்வான்—

அப்படி ஒன்றும் போலீஸ்காரர்களைப் பார்த்து அஞ்ச வேண்டிய திருட்டுச் செயல் எதுவும் அவன் செய்தது கிடையாது — இருந்துங்கூடப்

துயருற்ற காதை

விருந்தினரை வரவேற்பான்
 தமிழன்; அந்த
விருந்தினர்க்கு நலம்செய்வான்
 தமிழன்; சாவா
மருந்தேனும் வந்தவர்கள்
 பசித்திருக்க
வாயில் இடான் தமிழன்; இது
 பழமைதொட்டே
இருந்துவரும் பண்பாகும்
 எனினும் 'வந்தோன்
எவன், அவனை ஏன்நம்ப
 வேண்டும்' என்று
துரும்பேனும் நினையாத
 தாலே இந்நாள்
தூய்தமிழன் துயருற்ருன்!
 வந்தோர் வாழ்ந்தார்!

— பாரதிதாசன்

போலீசென்றால் அவனுக்கு ஒரே பயம் —

குற்றமற்றவர்களைக்கூடக் குற்றவாளிகள் என்று அவர்கள் நினைப்பார்கள் என்பதை இந்த நாற்பது ஆண்டு அனுபவத்தில் அவன் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். போலீசென்றால் அவனுக்கு ஒரே பயம் —

இரண்டு நாட்களாக அவன் வயிற்றுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. கொடுக்க நினைத்தவர்களைக்கூட ஒரு சிலர் தடுத்தனர்.

ஏழைக் குடியானவர்களும் கூட அவனைக் கண்டவுடன் எரிந்து விழுந்தார்கள் —



அவனுக்கு எங்கும் "இல்லை! இல்லை!" என்ற சொற்கள் கிடைத்தனவே ஒழிய இன்னல் தரும் பசிநோய்க்கு எதுவும் கிடைக்கவில்லை —

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய வயிற்றுக்கு உபதேசம் செய்துபார்த்தான் கொண்டி — வயிறு கேட்டால்தானே!

இனி வேறு வழியில்லை மறு ஊர் என்ற முடிவுக்கு வந்தான்.

அது தை மாதம் — குளிர் காற்று சொப்பு சுற்றி அடித்துக் கொண்டிருந்தது. அவன் மனதிலே எழுந்து எழுந்து படர்கின்ற தன் நினைவுகள் போல வானத்தைப் பனிப் படலம் கப்பத் தொடங்கியது. அவன் எங்கு செல்கின்றோம் என்ற நினைவில்லாமலே நடந்துகொண்டிருந்தான். அவனைப் போலவே வானத்தில் இரண்டொரு கரு மேகங்கள் ஓடிக்கொண்டிருந்தன —

அவன் ஊன்றுகோலைத் தூக்கித் தூக்கி வைத்துத் துணை புரிந்த கைகளும் ஓய்ந்தன —

தன் கையே தனக்கு உதவி செய்ய மறுப்பதை எண்ணும் போது வசை மொழி பேசி வயிற்றுக்கு ஒன்றும் அளிக்காத மக்கள் மேல் அவனுக்கு இரக்கந்தான் தோன்றிற்று.

மெல்ல நடந்துகொண்டிருந்தான்.

இரண்டு நாட்களாக உணவில்லாத உடலுக்குச் சிறிது ஓய்வு கொடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இடையிடையே பாட்டையின் அரு

இல் உள்ள பள்ளத்தில் வாய்க்காலின் மதகுக் கட்டையில் உட்கார்ந்து இளைப்பாறினான். வயிறு அவனை வம்புக்கிழுத்துக்கொண்டிருந்தது.

குழப்பமும் சோர்வும் நிறைந்த அவன் மனதிற்கு ஒன்றும் விளங்கவில்லை. எப்படியும் வயிற்றுக்கு ஏதாவது தேடவேண்டும் என்ற ஒரே எண்ணம் அவனை வாட்டி வதக்கிற்று.

“எப்படித் தேடுவது?” இது அவனுக்கு விளங்காத விடை.

முற்பகல் முழுதும் அவன் நெடும் பாட்டையை ஒருவாறு கடந்துகொண்டிருந்தான்.

அவன் பஞ்சடர்ந்த கண்களுக்குப் பக்கத்து ஊர் தென்பட்டது.


இருண்ட வானத்திலே இரண்டொரு உடுக்கள் ஒளி வீசுவதைப் போலத் தோப்புக்கிடையே இரண்டொரு வீடுகள் தோற்றமளித்தன.

அவன் மனதிலும் மகிழ்ச்சிக் கீறல் தோன்றியது.

சிறிது ஊக்கத்தோடேயே அவனது சோர்ந்த கைகள் ஊன்றுகோலைத் தூக்கி உதவிசெய்தன.

சோர்வையும்பொருட்படுத்தாது அவன் சிறிது விரைவாகவே நடந்தான்.

வழியில் தென்பட்ட முதல் குடியானவனைக் கண்டவுடன் அவன மனங்குளிர்ந்தது.



சற்றுத் தடுமாறி நின்று வயிற்றைக் காட்டினான் நொண்டி.

கடுமொழிதான் அவன் பெற்ற உணவு. வீடுவீடாகச் சென்றான். வேதனைக் குரலைக் காட்டினான்.

“இல்லை! இல்லை!” என்ற பதிலே எங்கும் கிடைத்தது.

வேறு வழியில்லை; இனி நடக்க முடியாது என்பதை அவன் உணர்ந்தபோது அவன் கண்கள் இரண்டு சொட்டு நீரைக் கக்கின.

அவன் மனதிலே பல எண்ணங்கள் உருண்டோடிக்கொண்டிருந்தன.

சாரற் காற்று சிலுசிலு என்று அடித்துக்கொண்டிருந்தது. வானம் மங்கி மந்தாரமாக இருந்தது. மக்கள் மனதிலே ஒரு வெறுப்பை உண்டாக்குகின்ற நிலையிலே இயற்கை சிணுங்கிக்கொண்டிருந்தது.

நீண்ட ஊன்றுகோலைச் சிறிது சிறிதாக வழுக்கி விட்டுத் தள்ளாடித் தள்ளாடி அறுவடையான வயலின் அருகில் உட்கார்ந்தான்.

அறுவடையான வயல் வெறிச்சென்றிருந்தது. ஈவு இரக்கமில்லாத மக்களையும் அந்த வயலையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது அவன் உள்ளம்.

தூறல் கலந்த சாரற்காற்று அவன் சஞ்சலத்தை அதிகப்படுத்தியது.

அவனால் பசிக்கொடுமையைத் தாங்கமுடியவில்லை.

அவன் கிழிந்த சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவினான். பாதித்துண்டுச்சுருட்டு ஒன்று கிடைத்தது. அதைக் கொளுத்திப் புகைத்துக் கொண்டே இருந்தான் அவன்.

அவன் வயிறோ அவனைப் பகைத்துக்கொண்டே இருந்தது. அறிவு அடுபசியைப் போக்க வழியுண்டா என ஆராய்ந்துகொண்டிருந்தது

கோழிக குஞ்சுகள் தன் தாயோடு வயற்புறத்தை நோக்கித் துள்ளிக்குதித்து வந்து கொண்டிருந்தன.

உயிரை ஊட்டிவளர்க்கும் வயலில் சிய்த்துச் சிய்த்துச் சிதறிய நெல்மணிகளைக் கொத்திக் கொத்தித் தின்றுகொண்டிருந்தன கோழிக்குஞ்சுகள். தப்பியோடும் புழு பூச்சிகளைத் தாவிப் பிடித்துத் தின்பதையும் அங்கும் இங்கும் ஓடி ஓடி அவைகள் தங்களுக்கு வேண்டிய உணவைத் தேடுவதையும் அவன் கண்கள் செயலற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன.

பசி அவனை வாட்டி வதக்கிக் கொண்டிருந்தது.

வேறு எந்த நினைவும் அவனுக்குத் தோன்றவில்லை.

தானும் அவைகளைப்போலத் தனக்கு வேண்டிய உணவைத் தேடினால் என்ன என்ற கேள்வியை அவன் உள்ளம் எழுப்பிற்று.

கேட்டால் உதவாத இந்த உலகத்தில் இவைகளைப் போல நாமும் பிறரைக் கேட்காமலே, உணவைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

பக்கத்தில் இருந்த மண்ணாங்கட்டி ஒன்றை எடுத்துக் கோழிகள்மீது வீசினான். அருகில் மேய்ந்துகொண்டிருந்த கோழிக்குஞ்சு ஒன்று கீழே விழுந்துஇறக்கையை அடித்துக் கொண்டது.

மற்ற கோழிக் குஞ்சுகள் கூவிக்கொண்டே வெருண்டோடின.

நொண்டி எழுந்தான், படுத்திருந்த கிழக்காளை பசும்புல் பார்த்து எழுந்திருப்பதைப் போல. அவன் கண்கள் மகிழ்ச்சி ஒளியை வீசின.

மெல்லத் தடியை ஊன்றி இறந்து கிடக்கும் கோழியின் அருகில் போனான். இரத்தம் தோய்ந்து இரக்கக்கண் காட்டி உயிர்விட்டுக் கொண்டிருந்தது கோழிக்குஞ்சு.

குனிந்து எடுத்தான் நொண்டி. அவ்வளவுதான். யாரோ பின்புறமாக அவனைத் தள்ளியது போலத் தோன்றியது. கைத்தடிகள் எங்கோ சென்று விழுந்தன. வயலில் உருண்டான் நொண்டி. அவன் முகத்தையும் உடலையும் கோழிக்குரிய உழவனின் கைகளும் கால்களும் பதம்பார்த்துக் கொண்டிருந்தன.

சிற்றூரே அங்கு திரண்டு விட்டது.

வந்தவர்கள் ஆளுக்குச் சிறிது அந்த நொண்டியைத் தொட்டுப்பார்க்காமல் விடவில்லை.

உதிரம் தோய்ந்த அவன் உடலைப் பார்த்தபிறகே அவர்கள் கைகள் ஓய்ந்தன. அருகிலிருந்த மாட்டுத் தொழுவத்தில் அவனை அடைத்த பிறகே போலீசுக்கு ஆள் அனுப்பினார்கள்.

போலீஸ் மறுநாள் பிற்பகலே வந்தது.

நொண்டி அன்றும் பட்டினி.

ஒழுகிய இரத்தத்தில் உருண்டு கிடந்த நொண்டியை வந்த போலீஸ்காரர்கள் எழுப்பினார்கள்.

பாவம்! நொண்டி என்ன செய்வான். சேற்றால் அடித்த சுவரல்லவா உடல்! அவனால் எழுந்திருக்கமுடியவில்லை!

போலீஸ் புலிகள் உறுமின.

நொண்டி எழுந்திருக்க முயன்று பார்த்தான். அவன் உடல் அவன் எண்ணத்தை நிறைவேற்ற மறுத்தது.

பாசாங்கு செய்வதாய் நினைத்த போலீஸ்காரர்களின் கைத்தடி அவனை ஊன்றுகோலுக்கிடையே ஊசலாட வைத்தது.

பூனையின் முன் நிற்கும் எலியைப் போலப் பாம்பின் முன் நிற்கும் சிறுபறவையைப் போலத் துப்பாக்கி முன் செய்வது என்ன என்று தோன்றாது நிற்கும் விலங்கைப் போல நொண்டி போலீஸ்காரனின் முன் நின்றுகொண்டிருந்தான்.

வையத்தின் நோக்கம்

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்ப தான
இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்;
கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்.

—பாரதிதாசன்


"ஊம் நட" என்று உறுமியது போலீஸ் குரல்.

இரண்டு போலீஸ்காரர்களுக்கு இடையில் தள்ளாடித் தள்ளாடிப்போலீஸ் ஸ்டேஷனைநோக்கி நடந்து கொண்டிருந்தான் நொண்டி.

"காலில்லாதபோதே திருடுகிறானே கையையும் வாங்கிவிட வேண்டும்" —வழிநெடுக அவனுக்குக் கிடைத்த வாழ்த்தொலிகள் இவை.

மாலையும் வந்தது. நொண்டியும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தான்.

ஏட்டு அலுவலகத்தில் இல்லை. மேலதிகாரி வேறெங்கோ செல்லவேண்டியிருந்தது. இது ஒன்றுதானா போலீஸ்காரர்களுக்கு வேலை? இன்னும் எத்தனையோ இருக்குமல்லவா?



"குற்றவாளியைக் காலையில் விசாரிக்கலாம்

சிறையில் தள்ளிப் பூட்டு'' என்று கட்டளை இட்டது மேலதிகாரியின் குரல்.

நொண்டிக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்தோம், ஏன் இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்தது என்பதை எண்ணிப் பார்க்கின்ற அளவுகூட அவன் அறிவு வேலைசெய்யவில்லை.

நான்கு நாட்களாகப் பட்டினியால் வாடிய உடல், அதற்கு மேலும் உழவர்கள் வலிய கைகளால் வாங்கிய அடிகளை எதிர்க்கமுடியாது ஏற்று அலுத்த உடல், போலீஸ் கண்டிப்பால் நடந்து சோர்ந்த உடல், இந்நிலைமையில் உள்ள உடலின் உள்ளே உறையும் அறிவு எவ்வாறு வேலைசெய்யும்!

அவன் வழக்கம்போல் வாயைத் திறக்கவில்லை. திறக்க எண்ணி இருந்தாலும் வீங்கிய முகத்தில் வேதனையடைந்த உதடுகளுக்கு அசையும்வலிவேது?

அவனைச் சிறையில் பூட்டினார்கள் போலீஸ் புலிகள். பூட்டிய புண்ணியவான்களில் ஒருவராவது அவனுக்குச் சிறிது உணவு கொடுக்க வேண்டுமே என்று எண்ணவில்லை. மற்றவர்கள் உணவைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை!

மறுநாள் விசாரணைக்காக நொண்டி அழைக்கப்பட்டான். சிப்பாய்கள் சிறைக் கதவைத் திறந்தார்கள். நொண்டி இறந்து கிடந்தான். எங்கிருந்தோ அழும் நாயின் உருக்கமான குரலைச் சிறைச்சுவர்கள் எதிரொலித்தன.

[பிரெஞ்சுக்கதையின் மொழிபெயர்ப்பு]

ஏற்றிய விளக்கு

எஸ். ஆறுமுகம்

ரேடியோவில் நிலைய வித்வான்களின் கதம்ப நிகழ்ச்சி யொன்று நடந்து கொண்டிருந்தது.

சங்கரன் இசைத் தேனி; இருந்தும் அவன் மனம் அன்றைய இசையின்பத்தில் ரசனை கொள்ளவில்லை.

'சொக்க வெள்ளிப் பாற்குடம்' வானத்து வீதி நெடுக வெண் புள்ளிக் கோலமிட்டுக் கொண்டிருந்தது.

இயற்கை என்றால் அவனுக்குத் தனி மகிழ்வு; என்றாலும் அந்நிலையில் அவன் உள்ளம் அதில் ஈடுபட மறுத்தது.

'நாவல்' ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தான் அவன். கதை என்றால் அவனுக்கு ஒரு பித்து. இதழ்கள் புரண்டன. கண்கள் கருத்தில் ஒன்றவில்லை; மனமும் படிப்பில் இல்லை. சங்கரன் பித்துப் பிடித்தவனாக வீணே உட்கார்ந்து விட்டான். அதிர்ந்திருந்த அவன் இதயம் அமைதியடையவில்லை. ஏதேதோ சிந்தனைகள் அவன் நெஞ்சை அலைக்கழித்தன. அவன் கண்கள் கலங்கின.

மாடிப் படிகளைக் கடந்து 'கலகல'வென்ற வளையல்களின் சிங்காரப் பண் சிருங்கார ரசம் இழையக் காற்றில் மிதந்து வந்தது. சங்கரன் நிமிர்ந்தான். அவன் மனைவி சரளா பாலுடன் நின்றாள்.

'பால் இருக்கிறது' என்றாள் சரளா, பாத்திரத்தை மேஜை மீது வைத்தவண்ணம். அவள் குரலில் தாபமிருந்தது; அடக்கம் இருந்தது.

"அதுதான் தெரிகிறதே" என்றான் அவன். அவன் குரலில் விரக்தி, வறட்சி, கடுமை எல்லாமிருந்தன.

சங்கரன் சடக்கென்று ஓடி ரேடியோவை மூடினான். பாவினின்றும் ஆவி பறந்தது. அவன் மற்றுமோர் முறை நிமிர்ந்தான். இன்னும் சரளா நின்றபடி இருந்தாள். அவளது ரோஜாக் கன்னங்கள் குழைந்திருந்தன; வளமேறிய அவள் இளம் இதய வீணையில் உணர்ச்சி நரம்புகள் மீட்டிவிடத் தாபம் சுருதி கூட்டிற்று. தீராத தாபம் ததும்பக் கண்களில் மாறாத சோகம் ததும்பக் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஏ, என் கண் முன் நில்லாதே."

சங்கரன் உத்தரவிட்டான்; எரிந்து விழுந்தான்.

அணைக்கவிருக்கும் கை அடிப்பதைக் கண்ட குழந்தை எவ்வளவு வேதனையுறும்? சரளா அம்மாதிரி மனம் வெந்து போனாள். அரைக்கணத்தில் படியிறங்கினாள். கண்களில் நீர்த்

துளிகள் முத்து முத்தாக உருண்டோடின.

'படித்துப் பட்டம் பெற்ற கண்ணிறைந்த கணவர்; இங்கிதம் தெரிந்து தன்னைப் பராமரிப்பார்; வாழ்வும் சோபிக்கும்; இன்பக்கேளிக்கையில் வாழ்க்கை ஓர் சுவர்க்கமாகத் திகழும்.

அன்று — சங்கரன் தன்னை உடந்தையாக்கிக் கொண்ட பொன்னுளில் அப்படித்தான் அவள் தன் மன டைரியில் 'நோட்' எழுதி வைத்திருந்தாள்.

ஆனல், அவள் எண்ணியது நடக்கவில்லை. இந்த மூன்று மாதங்களில் தன் 'பதி'யின் விபரீத மனப்போக்கை— கணவன்—மனைவி என்ற பாசமின்றித் தாமரை இலை தண்ணீர் போன்று எதிலுமே ஒட்டாத நிலையைக் காணக் காணச் சரளா அதிர்ச்சியடைந்தாள். பேதை யுள்ளம் சுக்கல் சுக்கலாகச் சிதறியது. ஏன் இந்தப் பிளவு? வேற்றுமை?

அழுகை ஒன்றுதான் சரளாவுக்கு அப்போதைய மாற்றுக-தனிமைத் துணையாக இருந்தது. அவள் அழுதாள். குருடன் அழுகின்றான் என்றால் அது கண் பார்வை நிமித்தமே அல்லவா?

மேஜை மீது வைக்கப்பட்டிருந்த பாலின் நினைவு சங்கரனுக்கு வந்தது. கையில் எடுத்தான். சூடு ஆறிவிட்டிருந்தது. ஆனல், அவன் மனத்தின் வேதனைச் சூடுமட்டும் ஆறக்காணேம். தம்ளரில் பாலை ஊற்றி வாயருகில் கொண்டு சென்றான் அவன். அதற்குள் என்ன நினைப்போ? தடக்கென்று தம்ளரை மேஜைமீது வைத்துவிட்டான்.

அன்று வந்த தபால்களுடன் சேர்ந்து கிடந்த அந்தத் திருமண பத்திரிகையை எடுத்தான்; அது இப்படிப்பட்ட புயலைக் கிளப்பிவிடும் என்று அவன் எங்கே நினைத்திருப்பான்?

புயலா? ஊஹூம் - சூறுவளி!

எரிமலை - ஊஹூம்; பூகம்பம்!

கைப்பொருள் களவாடப்பட்டது போன்ற மயக்கம் பரவியது அவனுள்; அழைப்பில் ஓட்டினன் பார்வையை.

சுந்தரம் — சுந்தரி!

பெயர்ப் பொருத்தம் அவனை வியப்புறச் செய்தது. சுந்தரிக்குகந்த சுந்தரன்தானே!

பின், கடிதம்:

"அத்தான்,

கல்யாண அழைப்பு அனுப்பியிருக்கிறேன். உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன்.

சுந்தரி."

சுந்தரி அவனுக்கு 'முறைமைப் பெண்'. அவள் அழகுராணி. அவளென்றால் சங்கரனுக்குத்தனிப்பிரேமை. பிள்ளைப்பிராயந்தொட்டே இருவரும் நெருங்கிப் பழகினவர்கள்.

அப்பொழுது அவன் திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தான். அங்குதான் சுந்தரிக்கு வீடு. சங்கரன் கிளைவ் விடுதியில் இருந்தான். என்றாலும், அடிக்கடி சுந்தரியைச் சந்தித்தான். அவளை

விட்டு அரைக்கணமும் அவனல் பிரிந்திருக்க முடியாது என்பது போன்ற ஓர் உணர்வெய்தினன். வயது வளர்ந்தது; அன்பும் வளர்ந்தது.

தோட்டத்துத் தென்றலில் மாங்குயில்கள் தீஞ்சுவைக் கீதம் எழுப்பும். இங்கே இந்த ஜோடிப் புருக்கள் அளவளாவிப் பிரேம கீதம் இசைப்பார்கள். மலைக் கோட்டை மணி அவர்களது பேச்சின் எல்லைக்குக் கோடிட்டுக் காட்டும். பின்னர்ப் பிரியாமல் பிரிவார்கள். பொழுது விடிந்தால் மீண்டும் சந்திப்பு - பிரிவு. இப்படி எத்தனையோ நாட்கள் எத்தனையோ சம்பவங்கள்!

பரீட்சை எழுதிவிட்டுச் சங்கரன் ஊருக்கு வந்தான்.

அப்பொழுது தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. கல்யாணப் பேச்சு நடப்பதாக இருந்த நாளிலே இருதாப்புப் பெற்றவர்களிடையில் பழைய வியவகார மொன்று முளைத் தெழுந்து 'கோர்ட்' படி ஏறிவிட்டது. அத்துடன் அவர்கள் 'சம்பந்த'மும் முறிந்தது.

ஆனல் சங்கானுக்கு உலகமே சூன்யமாகிவிட்டதாகத் தோன்றிற்று. அப்போதைய நிலையில் அவன் தன் தாய் தந்தையர்க்கு எதிராக நடக்கவும் துணிவு கொள்ளவில்லை. எனினும், அவளை அவன் எங்ஙனம் மறக்க முடியும்? அவளுடைய அன்புப் பார்வை; ஆதாவுப் பணிவிடை; அழகூறும் பேச்சு - இவற்றை அவன் எங்ஙனம் மறப்பான்? அவன் இதயம் பூராவிலும் சுந்தரியல்லவா வாசம் செய்தாள். ஆம்; அவள்தான் அவன் உலகம்!

அன்றைய அவர்களது பாசமும் பிணைப்பும் இருவரையும் கணவன் - மனைவியாக ஜோடி சேர்த்திருக்க வேண்டியது. ஆனல் பந்தம் - விதி என்று கதைக்கின்றனரே அந்த ஒரு தொடர்பு அவர்களைத் திசை வேறு திக்கு வேருகப் பிரித்தது. ஆம்; அது அவர்களது வாழ்க்கைப் பாதையின் திரும்பு முனை.


காலம்மாறியது சங்கானுக்குச் சுந்தரியின் நினைவு மாறவில்லை.

'உலகப் பொருள் அனைத்தும் ஒன்றையொன்று தழுவித்தான் வாழமுடியும்.'

கவிஞன் ஷெல்லியின் கூற்றுயிற்றே இது!

பின் கேட்க வேண்டுமா? சங்கரன் சரளாவைக் கைப்பற்றினன். சரளா தனக்கு முன் பின் தெரியாத இடத்தில், புகாத இடத்தில் அடி எடுத்து வைத்தாள். சுந்தரிக்கு எவ்விதத்திலும் அவள் குறைந்தவளல்ல. சுந்தரிக்கு இனித்தான் மண வினை. அதற்குத்தான் அழைப்பு.

சரளா எழிலணங்கு, சங்கரனைப் பதியாகப் பெற்றதில் எவ்வளவோ பெருமைப்பட்டாள்; பெருமிதமும் கொண்டிருந்தாள். ஆனல் நாளாக நாளாக ஏனே ஒரு மாதிரியாக, எதையோ பறி கொடுத்தவன் போல எப்பொழுதுமே காணப்பட்ட கணவனின் நிலை அவளை வெகுவாகப் புண் படுத்தியது.



அன்புடன் அண்டினால் ஆதரவு கூடிய ஒரு இன்சொல் இல்லை; தாபத்துடன் நோக்கி விட்டால் தயவான ஓர் புது மொழி கிடையாது. வாழ்க்கை - தாம்பத்தியம்; ஊடல் - கூடல்! ஆம்; எதிலும் விரக்திதானா சங்கரனைப் பொறுத்த அளவிலே!

ஆனால் அந்த ஒரு நாளில்—!

'சரளா'.

'அம்மா'.

'நாழி ஆய்விட்டதே. மாப்பிள்ளை வீட்டார்கள் வரும் நேரமாய்விட்டதே. சீக்கிரம் உடுத்திக்கொண்டு தயார் செய்.'

'சரளா'

அழைப்பு பறந்தது. மாப்பிள்ளை தன்னை எடை போட்டு 'ஜட்ஜ்மெண்ட்' சொல்லவிருக்கும் யாரோ ஓர் இளைஞன் எங்கிருந்தோ அப்பாவின் சம்மதத்தின் பேரில் வந்திருக்கிறார் என்று நினைத்துப் பார்க்கையில் அவளுக்கு இனம் புரியாத பரபரப்பு பரவியது.

சரளா 'டீக்'காக டிரஸ்செய்து ஒயிலுடன் ஹாலில் போய் அமர்ந்தாள். பாட்டு வேண்டுமென்றார்கள்.

'கனவு கண்டதிலே—ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை—எவரோ
என்னகம் தொட்டுவிட்டான்.'

அனுபவித்து, ரசனை துள்ளப் பாடினாள் அவள். அவளுக்கு நிம்மதி கனிந்தது. அப்போது எவ்வளவு மனக்கோட்டைகள் கட்டினாள்?

ஆனால் இன்று...!

அவள் கண்கள் கண்ணீரைக்

கக்கக் காத்திருந்தன.

'என்னகம் தொட்டு விட்டான்!'

நினைத்தாள்; அவளிடமிருந்து நெடுமூச்சு வெளிப் போந்தது.

அவளிடம் காந்த இழைவு, மோகனச் சிரிப்பு, கலகலவெனும் பேச்சு எல்லாமிருந்தன; இருந்தும் சங்கரைப் பொறுத்த வரை அவளுள் ஏதோ ஒரு குறை—நிறைவின்மை காணப்பட்டதாக அவன் உணரலானான்.

அந்த ஒரு குறை?

சரளா ஆக்கிரமித்திருக்கும் இடத்தில் தன் கனவுப் பதுமை சுந்தரி இருந்திருந்தால்...!

அவன் செய்கை ஒவ்வொன்றிலும் தவறாது சுந்தரியின் தோற்றமே நிழலாடியது; ஊக்கம் தந்தது. அதேகணம் பித்தனுக்கிச் செயல் இழக்கவும் செய்தது. அவள் இன்ப நினைவை அவனால் மறக்கக் கூட வில்லை போலும். ஏன் இந்தச் சலனம்? ஏன் இந்தச் சபலம்? ஆமாம்; இதயக் குகையில் சுரங்கம் வைக்கப்பட்டிருக்கும் மனித உணர்ச்சிகளின் சலனத்திற்கும் சபலத்திற்கும் அளவு ஏது?

'டிங்-டாங்.'

சுவர்க் கடிகாரம் இரவில் பத்து அடித்து ஓய்ந்தது. சுயஉணர்வு 'லகான்' பிடித்ததும் சங்கரனுக்குத் தன் நினைவு வந்தது.

சுந்தரியின் திருமணத்துக்குப் போக வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு ஓடியது, வீட்டார்களின் பூசலையும் மறந்து. இடைவேளைப் பிரிவின்பின் மீண்டும் அவள் 'தரிசனம்' கிடைக்குமல்லவா?



"சார், பாதி ஷேவிங் முடிஞ்சிருச்சு. ஒரு ரெண்டணாக் கொடுங்க, டீ சாப்பிட்டுட்டு வந்துடறேன்".

என்ன தோன்றியதோ, சங்கரன் ஹாலினுள் பிரவேசித்தான். மின்சார வெளிச்சத்தில் அழைப்பு ஒன்று காணப்பட்டது. என்ன ஆச்சரியம்! தனக்கு வந்தது போன்ற அதே அழைப்பு. யார் அனுப்பினர்கள்? அத்துடன் இணைத்திருந்த கடிதத்தைப் படித்தான். "சுந்தரம்" என்று கையெழுத்திட்டிருந்தது. சரளாவைக் கட்டாயம் தன் மணவிழாவிற்கு வரக் கோரியிருந்தது கடிதம். யார் இந்தச் சுந்தரம்? விஷவித்தின் முதல் கணை இது.

அடுத்து ஒரு கடிதம் இருந்தது. அது சரளாவின் கைப்பட எழுதியிருந்தது.

"அத்தான்,

தங்கள் கடிதம், பத்திரிகை கிடைத்தன. தங்கள் கலியாணத்துக்கு வர இயலாத நிலையிலிருக்

எனக்குத்தானா?

திருந்தாதோ முல்லையெனச்
சிரிப்பாள்! நன்றே
செழிக்காதோ வையமென
அறங்கள் செய்வாள்!
அருந்தாதோ தும்பியென
வாய்மலர் வாள்!
அடையாதோ அன்னம் எனும்
நடையாள்! நாடு
வருந்தாதோ எனஆளும்
வாழ்வு வாய்ந்தாள்!
வாய்க்காதோ என்அருள்தான்
என்று நோக்கி
இருந்தாளே எனக்குத்தா
னாஅல் லாமே
இடருற்றுச் சாகத்தான்
பிறந்திட்டேனா?

—வேலன்

கிறேன். அந்த நாளில் என்மீது கொண்ட அன்பில் என்னை அழைத்திருக்கிறீர்கள். ஆனால், இன்றைய என் நிலை வேறு. நான் என் கைப்பிடித்த கணவரின் கட்டளைக்கு அடிபணிய வேண்டியவள். நெருப்பும் பஞ்சும் தோழமைகொள்ளக்கூடுமா? ஆம்; இன்றைய என் நிலை அது. ஆனால் தங்கள் கடிதத்தைக் கண்டால் கூட என்ன நினைப்பாரோ 'அவர்' என்று அஞ்சுகிறேன். ரயில் நட்புப் போல என்னையும் மறந்துவிடுங்கள். நான் அவர் உயிர்த் துணை. அவர்தான் என் லட்சியம்; அவர் நினைவு ஒன்றே என் உயிர், பலம், ஊக்கம் அனைத்தும். மன்னியுங்கள்.

இப்படிக்கு,
சாளா."

தன் மனைவி எழுதியிருக்கும் கடிதத்தைக் கண்ணோட்டமிட்ட சங்கரனுக்கு நெஞ்சு மலையாய்க் கனத்தது. 'தன்னை மணந்த கணவன்தான் சகலமும் என்ற உயரிய பண்பாட்டைஉள்ளடக்கி எழுதின அவ்வரிகளைக் கண்டதும் வாழ்க்கையின் உண்மை பளிச்சிட்டது, காரிருளில் தோன்றும் மின்னலென.

அவன் இதய அந்தரங்கம் பேசியது.

"அந்நியர் கல்யாணத்துக்குப் போக வேண்டுமென்றால் ஏதாகிலும் நான் நினைத்துக் கொள்வேன் என்றுதானே சராளா இப்படி எழுதியிருக்கின்றாள்? மனைவி என்ற வரம்பிற்கு உட்பட்டாள் அவள். அதே போலத்தானே நானும்? சுந்தரியின் நினைவில் அவளைக் காணத் துடித்தது எத்துணை துரோகம்? நானோ சுந்தரி இன்னொருவனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவளன்றோ? அவள் நினைவில் பித்தாகி, பித்தனாகிச் சராளாவை - அவள் அன்பை நிராகரித்தது எவ்வளவு மன்னிக்க முடியாத குற்றம்? ஆம்; சராளா என் உயிர்த் துணை; அவள் புடமிட்ட பொன்!"

மனச்சாட்சி அவனை என்னவோ செய்தது. 'மனைவி' என்ற ஸ்தானம் அப்பொழுது தான் சங்கரனுக்குப் புரிந்தது. அதேகணம் முதல் தன் கலியாணத்துக்கு எழுத்தாள நண்பர் ஒருவர் அனுப்பிய 'க்ரீட்டிங்க்ஸ்' வாசகத்தையும் சிந்தித்தான்.

"வாழ்க்கை ஓர் முள் படுக்கை என்கிறார்கள்! ஆனால் அது ஓர்

அழகிய மலர்ப்படுக்கை. ஆம்; அது சுகமாக விருக்கும்; 'ஹாயா'க இருக்கும்—உணரும் விதத்தில், புரிந்து கொள்ளும் விதத்தில், அனுபவிக்கும் விதத்தில். வாழ்க்கை ஓர் இன்ப ரோஜா; இளம் தென்றல்; தேனிலவு."

தத்துவ ரீதியில் எழுதியிருந்த அவ்வரிகள் சங்கரனுக்கு நன்றாகப் புரிந்தன. அவன் வாழ்க்கையைப் புரிந்து கொண்டான். சரளாவையும் புரிந்து கொண்டான்!

சரளா படுத்திருந்தாள். சங்கரன் மெல்ல அண்டினன். பள்ளியறை என்ற பாத்தியதையுடன் கிடந்த அவளது மேலாடை நழுவிக்கிடந்தது. நெருங்கிச் 'சரளா' என்றான் அவன். குரல் கேட்டதுதான் தாமதம். உடையைச் சரிப்படுத்திவிட்டு வாரிச் சுருட்டிச சரளா எழுந்தாள். கண்களிலிருந்து கண்ணீர் ஓடியது. அப்படியென்றால் இன்னமும் அவள் உறங்கவில்லையா?

சரளா கணவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்த முகத்தில் ஒன்றுமில்லாத அமைதி படர்ந்திருந்ததைக் கண்ட அவள் அமைதி பெற்றாள்; அதிசயமுற்றாள்.

சங்கரன் மேஜைமீது ஸ்டாண்டிட்டு வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தைப் பார்த்தான். ஒரு கணம் மலைத்து நின்றான். மாலைகள் புடைசூழக் காட்சியளித்தது அவன் போட்டோ. அவன் விழிகள் கலங்கின.

"சரளா, உனக்குச் சுந்தரம் உறவா?"

காதல் இல்லை!

மீதுயர்ந்த இருதோள்கள்
ஒளியை வாரி
வீசுகின்ற குன்றங்கள்!
மறவன் தூக்கி
ஊதுகின்ற வளைகொம்பின்
புருவத்தின் மேல்
உயர்நெற்றி அஞ்சாமை
முழங்கும் கூடம்!
மோதுகின்ற இளங்களிறு
போல் நடந்து
முன்வாயிற் புன்னகையை
விளைப்பான்! ஆனல்
காதலில்லை அவன் கண்ணில்!
தேன்பற்றுத
கவின்மலரில் இடமில்லை
என்உயிர் வண்டுக்கே.

—அன்னம்

"ஆமாம்; சொல்லலாமென்றிருந்தேன். அத்தான் வேண்டும். அவருக்குக் கல்யாணம். லெட்டர் எழுதி வைத்திருக்கிறேன், போஸ்ட் செய்ய."

"சரளா, ஒரு ஆச்சரியம் பார்த்தாயா? மணமகனிடமிருந்து உனக்கும், மணமகளிடமிருந்து எனக்கும் அழைப்புகள் வந்திருக்கின்றன. சுந்தரி என் அத்தை பெண். நீ கல்யாணத்துக்குப் போய் வா."

"உங்கள் இன்பச் சூழ்நிலையை விட்டு நான் எங்கும் போகவில்லை."

"அப்படியென்றால் தம்பதிகட்கு நம் இருவர் சார்பிலும் நல்ல பரிசாக நாளை அனுப்பிவிடுவோமா?"

"ஏன், நீங்கள் போகவில்லையா?"

புதுப்பாதை தந்தகவி

கடவுளரைப் பாடுவதே
கவிதையென நினைத்திருந்த
மடமையினைப் போக்கடித்து
மக்களுக்கே ஆனபல
கடமைகளைச் சிந்தித்துக்
கவிதையிலே காட்டுதற்குத்
தடம் மாற்றிப் புதுப்பாதை
தந்த கவி வாழியவே.

—துரைவேலன்

"ஊஹூம்; என் இதய ராணியை விட்டு எனக்கு அங்கு என்ன வேலை? சரளா, ஒரு விண்ணப்பம். உன் அத்தானுக்கு எழுதி வைத்திருக்கிறாயல்லவா அந்தக் கடிதத்தை அனுப்ப வேண்டாம். பாவம், அவர் வருந்துவார்."

'ஏன்' என்ற கேள்விக் குறி அவளது நெற்றியில் வளைவிட்டது. ஆனால் கேட்கவில்லை; 'சரி' என்ற பாவனையில் இருந்தாள்.

மேஜை மீதிருந்த பால் பாத்திரத்தைப் பார்த்ததும், "சரளா, பால் அப்படியே இருக்கிறதே. இன்னும் சாப்பிடவில்லையா?" என்று கேட்டு, பாலைக் கூர்ந்து நோக்கினான். ஏனோ அடுத்த நிமிஷம் அவன் திகைப்பூண்டை மிதித்தவனாகத் திகைத்து நின்றான். பாலின் நிறம் மாறியிருந்தது. இதில் ஏதோ சூது இருக்கிறதென முடிவிட்டான் அவன்.

"சரளா, பால் உனக்கு வேண்டாமா? நான் சாப்பிடட்டுமா?"

"ஐயோ, வேண்டாம். விஷம் கலந்தது."

"என்ன, விஷமா?"

"விஷம்...!"

சங்கரனுக்குத் தலை கிறுகிறுத்தது. சுற்றுமுற்றும் பார்த்தான். எல்லாம் சுழன்றன. சுவரின் மீது அரியாசனம் வகித்த வீனஸ் ராணி சுற்றினாள்; சிரஞ்சீவிக் காதலர்களான ரோமியோ-ஜூலியட்; லைலா-மஜ்னு-சுற்றினார்கள்.

பாலில் விஷம் கலந்து தன் உயிரைப் போக்கிக் கொள்ளச் சரளா திட்டமிட்டு இருக்கிறாள் என்ற செய்தியை அவன் உணரலானான்; அதற்குக் காரணம் இதுவரை அவளைத் தான் புறக்கணித்ததே என்ற உண்மை புலனானதும் நீர் வழிந்த கண்களால் தன் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வை தன் தவறுக்கு மன்னிப்புக் கோருவது போலிருந்தது.

"சரளா, என்னை மன்னிப்பாயா?" என்று கெஞ்சினான் சங்கரன்.

"மன்னிப்பா? அன்பரே, தாங்கள் அல்லவா மன்னிக்க வேண்டும். கணநேரத்து வெறி கற்பித்த மனமாற்றத்தில் தங்களை விட்டு, விடுதலையடைய எண்ணிய என் தீச்செயலுக்குத் தாங்கள் தான் மன்னிக்க வேண்டும்."

"சரளா."

அவன் அவளது சுருளலை படிந்த கூந்தலைச் சரிப்படுத்தினான்; அவள் நெஞ்சம் விம்மித் தணிந்தது. அத் தருணத்தில் சரளா அவன் இதயத்தில் ராஜ்யம் நடத்திக் கொண்டிருந்தாள். சங்கரனுக்கு அப்போதுதான் உயிர் திரும்பிற்று.

தன் வாழ்வில் துணைவர் ஏற்றிய தாம்பத்திய விளக்கை அஞ்சலி செய்து கொண்டிருந்தாள் சரளா!

வாழ்த்துகிறேன்

டர்பன் ச. மு. பிள்ளை

கவி பாரதிதாசன் அவர்கள் அறுபதாமாண்டு நிறைவு விழா நடைபெறவிருப்பதை அறிந்து, மிக மிக மகிழ்ச்சியடைகின்றோம்.

கவிஞர் அவர்கள், நாங்கள் காணமுடியாத தூரத்தில் வாழ்ந்தாலும், நாங்கள் (இங்குள்ள படித்த தமிழன்பர்கள்) அவர் நாமத்தைப் புகழ்ந்து கொண்டாடி வருகின்றோமென்பதை ஈண்டுப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

காலதேவன் அருளிய மகத்தான பரிசு கவி பாரதிதாசன் அவர்கள். அவர் புரட்சி வீரர்; பாட்டாளிப் பங்காளர்; தமிழ்க் காதலர்; இனப்பிரியர்; தீவிர சீர்திருத்த வாதி; வீரத் தமிழால் தமிழ் மக்களைத் துயிலிலிருந்து விழிப்புறச் செய்து, ஒருமைப் படுத்தும் புத்துணர்ச்சியை யூட்டி வருபவர்; அவரது பாடல்கள் இன்று எங்கு நோக்கினும் பாராட்டப்பட்டு, ஆனந்தத்துடனும், ஆவேசத்துடனும், பரவசத்துடனும் பாடப்பட்டு வருகின்றன. பாடல்கள் அனைத்தும் புதுமைப் பொலிவுடன் விளங்குகின்றன.

எழுதுவதில் தமக்கெனத் தனியொரு வழியை வகுத்துக் கொண்டவர் பார்திதாசன் அவர்கள். அவரது பாடல்களிலுள்ள சுவை இனிது; பொருள் பெரிது; வளம்புதிது. ஏமாற்றமும் துயரமும் மிகுந்த உலகில், அல்லல்களிடையே வாழ்ந்து, அதை எதிர்த்துப் போராடி மண்ணை விண்ணாக்க முயலும் உள்ளத் துடிப்பாம் அவை.

நாம் பெரியோரை வாழ்த்தும் கருத்து, உலக வாழ்வில் முதிர்ச்சிபெற்ற அவர்கள் நீடூழி இருப்பின், அவர்களால் நம் போன்றவர்கள் நலன் அடைதல் கூடும் என்னும் நோக்கத் தாலேயே ஆதலின், உலக அறிவில் முதிர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்து, இடையறு இன்பப் பேற்றினை அடைதற்குரிய நெறியினையும் அறிந்துள்ள நம் கவி பாரதிதாசன் அவர்கள், நோய் நொடியின்றி, உடல் வன்மையும், குன்று உள்ளமும் மேன்மேலும் பெற்று, இவ்வுலகம் உள்ளளவும் அவர்தம் திருப்பெயர் நிலவும்படி, நீடூழி காலம் அன்புற்று இன்புற்று அருள் கனிந்து வாழ்வாராக என நாம் அவருக்கு வாழ்த்து கூற விரும்புவதோடு, பல வகையாகப் பிணங்கி, பிரிவுற்றுப் பிற்போக் கெய்தியுள்ள தமிழர், மொழியின் தன்மையால் அவற்றைத் தெளிந்து, இணங்கி ஒன்றி முற்போக்குற்று, உயர் நிலை எய்தும் நன்னாளையும் நம் கவிஞர் கண்டுகளித்து இறுமாப்பு உறுமாறு செய்ய அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

உலகத் தாயின் கூத்து

—பாரதிதாசன்—

[ஆங்கில மொழிபெயர்ப்பு: கா. அப்பாத்துரை எம். ஏ., எல். டி.,]

உவகை உவகை உலகத்தாயின் கூத்து!—வந்து
குவியுதடா நெஞ்சில்!
உவகை உவகை!

எவையும் தன்னுள் ஆக்கிய பெருவெளி
எங்கும் அடடே தாயின் பேரொளி
உவகை உவகை!

அவிழும் கூந்தல் வானக் கருமுகிலாய்—இடையினின்(று)
அலையும் பூந்துகில் பெருவெளி எங்கும் போய்த்
தவழப் புதுநகை மின்னித் துலங்கும்
தாய்நின் றாடிய அடிஇடி முழங்கும்
உவகை உவகை!

தொடுநீள் வானப் பெருவில் ஒருகையில்—பெரும்புறம்
துளர்கிடவரு கதிர்வேல் ஒருகையில்
அடுநீள் விழியிற் கனலைப் பெருக்கி
ஆடும் திறல்கண் டோடும் பகைபோய்
உவகை உவகை!

அகலொளி விளக்கு நிலவினில் அவள்ஆடி—ஆடிநின்(று)
அந்தமிழின்பத் தென்பாங்கில் பாடித்
துகளறு விண்மீன் துளிகள் பறக்கத்
துடியிடை நெளியும் துணைவிழி உலவும்
உவகை உவகை!

அறிவே உயிராய் அதுவே அவளாகி—மற்றுள
அறமென்ப வெலாம் அழியும் எனவோதிக்
குறியும் செயலாய் ஒன்றாய் இயலக்
கூத்தாடுந் தாய் பார்த்திடுந் தோறும்
உவகை உவகை!

மடமைப் பகைமையும் சாகப் பின்வருமோர் கொடுமைகொள்
வறுமைத் தீயும் அலறிப் புறமேக
அடிமைத் தனமே துகள் துகளாக
ஆடுந் தாயவள் நாளும் வாழிய
உவகை உவகை!



COSMIC DANCE OF MOTHER NATURE

BHARATIDASAN

[Translation By K. Appadurai M. A., L T.,]

Oh Joy, Joy! Joy of the dance
Of Mother Nature doth our hearts entrance!
Oh Joy, Joy, Joy!

The splendour of Her light all space
Prevades all things in its embrace!
Oh Joy, Joy, Joy!


The dark'ning sky, her flowing, flowing hair,
Her garments tangle floating everywhere;
Her gleaming smiles the name of lightning bear,
Her voice, the thunder, all heaven and earth doth tear!
Oh Joy, Joy, Joy!

One of her hands the gaudy rainbow grasps,
The all-destructive Javelin one hand clasps!
The sparks, her flashing eyes emit like wasps!
The clouds of darkness flee to die in gasps!
Oh Joy, Joy, Joy!

The Moon doth hold the candle to Her play;
The sweet cadences of TEMPANGU lay
Keep measure, and the stars of heaven gay
Dance round; Her lips and eyes join in the fray;
Oh Joy, Joy, Joy!

At one with Reason and with very Life
She drives all other passions as of strife
Her poses Her purposes are; Her life
Our life; She dances to Time's lasting fife
Oh Joy, Joy, Joy!

Down with Ignorance! Down with mankind's foe!
Dire grovelling poverty with all her curses, so!
The rule of man O'er man for ever go!
Hail Mother from thy dance, let freedom, new birth grow!
Oh Joy, Joy, Joy!



பாரதிதாசனின் பண்புகள்

நா. இராசவேல்

புதவை, மாதா கோயில் தெருவில் பன்னிரண்டு ரூபாய் வாடகையில் சிறு வீடு; தெரு நடையில் அறையொன்று. அதன் கதவிலும், உள் சுவரிலும் பல இடங்களில் — பற்பல கோணங்களில் -— எழுதப்பட்டு, இல்லை — கிறுக்கப்பட்டிருக்கும், "ராஜவேல் அண்ணன்" என்று!

அவ் அறைதான் என் அலுவலகம். வாத்தியார் எழுதும் கவிதைகளைப் பெயர்த்தெழுதுவது என் 'பிரதான' வேலை!

முதல் முறையாக என்னைப் பார்ப்பவர்களில் ஒரு சிலர், வாத்தியாரைக் கேட்டதுண்டு, "தம்பி, யார்...உங்க பிள்ளையா?" என்று.

புன்சிரிப்புடன் பதில் சொல்வார், "இல்லே...... எனக்கு ரொம்ப வேண்டியவன்... இங்குதான் இருக்கிறான்... இதோ... பண்ணுருட்டி... சொக்கனூர்" என்று.

அறிமுகஞ் செய்கையில், பெயரைக் குறிப்பிட நேர்ந்தால் 'ராஜவேல்' என்பாரே தவிர, என்னையழைப்பது அப்படியல்ல. பெரும்பாலும், "இவனே" என்றுதான் கூப்பிடுவார்.

இது, 1936ல் மட்டுமல்ல — இப்பொழுதும் அப்படித்தான்! பலபேர் மத்தியில் "இவனே" என்றால், "ஏன்?" என்பவன் நான்தான்.

'கவி காளமேகம்' படமெடுக்கப்பட்டது 1939ல். சென்னை அடையாற்றில் படப்பிடிப்பு. பெண்களில் பெரும் பாத்திரம் 'தாசி மோகனு.' இதை யேற்று நடித்தவர் எஸ். பி. எல். தனலட்சுமி. அவருக்குள்ள பல பாடல்களில் 'இராகமாலிகா'வும் ஒன்று. காதற்சுவையுள்ள எண்சீர்விருத்தம் அது. நம் புலவர் ஆக்கியது.

ஒத்திகைக்குப் பின்னொரு நாள், தனலட்சுமியின் முறையீடு கீழ் வருமாறு:—

"அண்ணு... விருத்தம் சிறிது சிக்கலாயுள்ளது; பாடும்போது... ..." புலவர், "எங்கே உன் பாடத்தைக்கொடு" என்று வாங்கி, ஒரு முறை அவ்விருத்தத்தைப் பார்வையிட்டார். அண்டையில் 'சாதிக்காய்ப் பெட்டிகள்' அடுக்கப்பட்டிருந்தன. நின்றபடியே, பெட்டி மேல் வைத்து எழுதினர். விநாடியில் பாடத்தைத் திருப்பித் தந்து, "வேறொன்று எழுதியிருக்கிறேன், இதையும் படித்துப்பார்!" என்று கூறிக்கொண்டே சென்று விட்டார்.

இந்நிகழ்ச்சியைக் கண்டவர்கள் T. N. இராமன், P. S. செட்டியார் உட்பட அநேகர்.

பழைய விருத்தத்தின் கருத்து சிறிதும் மாறாது, எளிய நடையினும் எளிய நடையில், புதிய எண்சீர்விருத்தம்! அப்பொழுதே

பாடப்பட்டது, பாடியவர் மகிழ்ந்தது விந்தையல்ல; புலவரின் புலமையைப் போற்றுதார் அங்கொருவர் இல்லை!

* * *

புலவர்க்குத் தமது மனைவியைக் காட்டிலும் — புதல்விகள் மூவரைக் காட்டிலும் — புதல்வன் 'கோபதி' (மன்னர் மன்னன்)யிடந்தான் மிகுந்த 'பாசம்' 'ஒரே மகன்' என்ற காரணம் போதும்!

'காளமேகம்' படமெடுப்பின் போது, நாளொன்றில் நிகழ்ந்தது உதாரணத்திற்கொன்று:—

'ஈஸ்வர் பாக்' என்ற கட்டிடத்தின் முகப்பில் பெரியதோர் அறை. பட உற்பத்திக் காரியாலயம் அது. அதையொட்டியதோர் உள் அறை. அங்கிருந்து, 'இவனே' என்றொலி கேட்டு, அலுவலகக் கணக்கன் நான், விரைந்து அண்டினேன். ஒரு நிலையில் நிற்காமல், "தம்பியை.. ஏண்டா இவனே... பாருடா அவனை.." என்றெல்லாம் கோர்வையின்றிக் கூறினர் கவிஞர். அவரது முகத்தில் வியர்வைத் துளிகள்; சொல்லில் சிறு தடுமாற்றம். நானும் குழம்பினேன்.

படுத்துள்ள தம்பியின் மார்பையும், நெற்றியையும் தொட்டுப் பார்த்துக்கொண்டே, "தம்பிக்கொன்றுமில்லை; சிறு காய்ச்சல் தான்...இதோ வர்ரேன்" என்று சொல்லிக்கொண்டே உட்புறம் ஓடினேன்.

'அமிர்தாஞ்சனத்'துடன் திரும்பினேன்; தடவினேன். அடுத்து, காப்பியைக் கொண்டு வந்தேன்; அருந்தவைத்தேன்.

ஐந்து நிமிடங்களில் தம்பி, தன்னை எதிர்த்து வந்த இருமலைக் கனைப்பால் தாங்கியவாறு எழுந்தமர்ந்தான். உடலெல்லாம் வியர்த்தது. அப்பொழுதுதான், புலவரின் முகம் மாறியது; சுருட்டொன்றும் வாயினில் ஏறியது!

* * *

தமது மனைவி, மக்களிடத்தில் என்பதல்ல; பொதுவில் எவரிடத்தும் உள்ளன்புடையவர், கவிஞர். அதிலும், எளியவர்களிடம் இரக்கமுடையவர்; பேரன்புடையவர்.

ஆசிரியராக இருந்தவரை, வெளியூர் சென்றால் ஓரிரு நாட்களிலேயே திரும்பவேண்டியவர். வினடியும் வீணுக்காது, நண்பர்கள் பலரையும் ஒரே நாளில் காண்பார். 'தம்மைப் பிறர் வந்து காணவேண்டும்' என்ற 'தலைவர் மனப்பான்மை' அவரிடம் காண்பதரிது. உதாரணத்திற்கொன்று.—

சென்னைக் கொருசமயம் வந்திருந்தபோது, பல்லாவரம் புறப்பட்டோம். 'ரயிலடி'யை விட்டு நடந்தோம். ஏறத்தாழ இரண்டு மைலுக்கு மேலும் சென்ற பிறகு — இடையில் ஒரு சிலர் வழி காட்டி விவரம் கூறிய பிறகு — ஒற்றையடிப் பாதையோரம் ஒதுங்கிய 'கூரை வீடு' ஒன்றைக் கண்டோம். காண வேண்டிய தமது முன்னாள் மாண

வரையும் கண்டார், ஆசிரியர். பயணத் தொல்லையையும் மறந்தார். நலங்கேட்டு உரையாடினார். சிறு தொகையை 'வைத்துக் கொள்' என்றுதவித் திரும்பினார். வழியெல்லாம் அம்மாணவர் பற்றி, அவரது குடும்பம்பற்றிக் கூறிவந்தார்; கேட்டுவந்தேன்.

மேலும், எளியவர்க் கிரங்கும் இயல்பினுக்கொன்ற—

ஊரில், வீட்டுக் குறட்டின் படிக்கட்டில் 'கைலி' உடையுடன், சுருட்டுப் புகையுடன் அமர்ந்திருப்பார். தெருவே செல்லும் ஒருவர் — வாத்தியார் வீட்டையும் கடந்து சென்றவர் — திடீரெனத் திரும்புவார்.

வாத்தியார் எதிரில், தூண் ஒன்றின் துணையில் நின்று, தலையைச் சொரிந்துகொண்டே செல்வார், "ஒரு பத்து ரூபா வேணும்...நாலாந்தேதி சம்பளம் வாங்கியதும்.." என்று.

தரையை அல்லது தெரு வெளியை உற்றுப் பார்த்து, புகையை ஒரு முறை விட்டுக் கேட்பார் வாத்தியார், "பத்து ரூபாயா?" என்று.

"ஆமம்" என்பார் வந்தவர்.

"ஹூம்" என்ற மூச்சுடன் கூறுவார் கவிஞர், "பழநியம்மா,...அவன் கிட்டே ஒரு பத்து ரூபா கொடுத்தனுப்பு" என்று.

பின் நிற்கும் நான் அம்மா (கவிஞரின் துணைவியார்) விடம் செல்வேன். அம்மா மெதுவாக என்னிடம், "எதற்கு?" என்பார்கள்.

நான்— "எவருக்கோ கொடுப்பதற்கு!"

தேதி அநேகமாக 28, 29 ஆக இருக்கும். நாட்டில் எங்கும் "பொதுநெருக்கடி" உலவும் பருவம். வாத்தியார், தமது சம்பளத் தொகையை 'அம்மா'விடம் தந்ததுபோல் தந்த, உடனுக்குடன் ஐந்து, பத்தாக வாங்கித் தீர்த்து விட்ட பத்து நாட்களுக்குப் பிறகு, அம்மா என் செய்வது? என்ன சொல்வது?

யாருக்கோ, எதற்கோ, எந்தக் கடன் தீர்க்கவோ, பதுக்கி அல்லது சேமித்து வைத்திருந்த தொகையையோ, எதையோ எப்படியோ தந்தாகவேண்டும். தருவார்கள். 'நிலைமை' முழுதும்

டான்' நானும் வாங்கி வருவேன். வந்தவரும் வாங்கிச் செல்வார்!

* * *

திடீரெனக் கேட்பவர்க்குத் தடையின்றித் தருவது மட்டுமல்ல; கேட்பதும் அவ்வாறே!

"சென்னைக்குப் போகவேண்டும், பணம் இருக்கா?" புலவரின் பொது அறிக்கை இது; அதுவும் மாலை ஆறு மணிக்கு மேல்.

மெய்யாகவே கையில் இல்லாதிருந்தால் "இல்லை" என்பார்கள் அம்மா.

"சுத்தமா, கொஞ்சங்கூட இல்லையா?" என்பார் மறுபடியும்.

"செம்பாலடித்த காசு...?" என்ற பதில், நகைச் சுவையோடு.

"பாப்பா...தம்பி...உங்க கிட்டக்கூடவா?" என்ற வேண்டுகோள், அடுத்தபடி!

"எங்க கிட்டே ஏதாம்?"

"நம்மையே கேக்கிறாரப்பா இவரு!"

என்றெல்லாம் மறுமொழிகள் படர்க்கையில்.

அம்மாவுக்குச் சிரிப்பு; வாத்தியாருக்குந்தான். ஆனால், சுருட்டுப் புகையால் மறைத்துக்கொள்வார்.

"சரி!...எனக்கென்ன?... என்னென்னவோ கேட்டீங்களே...அதெல்லாம் மெட்ராசிலே..." என்று புலவரின் முறையீடு புரட்சியாக மாறும்.

"உ....ஊம்......அப்படின்னா சரி..."என்று சொல்லிக் குதித்தோடுவர் மக்கள். சேர்த்து வைத்தது, மறைத்து வைத்தது எல்லாவற்றையும் 'சல்லி' விடாது கொண்டுவந்து ஒப்படைப்பர். அதோடு, தத்தம் தேவைகளைக் குறித்து 'ஜாபிதா'வும் தருவர்.

தேவையை மதிப்பிட்டால் பத்துப் பதினைந்து ரூபாய்க்குமேலிருக்கும். தொகையை எண்ணினால் நாலைந்துக்குள்ளிருக்கும். மொத்தத்தில் பயணத்திற்கும் போதாத பணம்! என் செய்வார் புலவர்?

சிறிது நேரம் அமைதியாக உலவுவார். திடீரென 'மேஜை'யண்டை வந்து நின்றபடியே சீட்டொன்று எழுதுவார். 'இவனே' என்றென்னிடம் தந்து 'வாங்கி வா' என்பார்.

சிறிதும் தாமதியேன்; தயங்கேன். விரைந்து செல்வேன். வெளியில் வந்தபிறகே சீட்டின் 'தகவல்' உணர்வேன். வேறொன்றுமில்லை —நண்பர் ஒருவருக்கு எழுதியிருப்பார் 'கடன்' கேட்டு! குறித்த நபரும் தவறாது தருவார். சென்னைப் பயணமும் தொடங்கி நிகழும்.

ஆனால், கடன் தந்த 'பத்தை'யும் கைச்சீட்டு மூலம் கடன் வாங்கிய 'இருபத்தைந்தை'யும், என்போன்று அடுத்துள்ளவா தாம் நினைவு படுத்தவேண்டும். அவ்வளவு மறதி அவருக்கு!

ஒரு சில சமயங்களில், தம்மிடம் பணம் இருப்பதாகவே எண்ணிக்கொண்டு பயணப்பட்டு விடுவார்; 'பஸ், ட்ராம்' முதலானவற்றிலும் அமர்ந்துவிடுவார். நடுப்பாதையில், உடன் செல்

பவர்தாம் குறிப்பறிந்து'குட்டை' மறைக்கவேண்டும்!

* * *

நம் புலவர், வெறும் புலமை மட்டும் நிறைந்து, ஏட்டோடு, எழுத்தோடு நில்லாதவர்; செயலாற்ற வல்லவருங்கூட. கொடுமையைக் காண மறுப்பவர்மட்டுமல்ல; கண்டபோதே கண்டிப்பவர் அவர். எப்படி?...

தொடக்கத்தில் குறிப்பிட்ட வாத்தியார் 'வாடகை' வீட்டின் மாடியில் எனக்குப் படுக்கை. நள்ளிரவு.

திடீரென, "பளார், பளார்!" என்ற முழக்கம் என்னை எழுப்பியது. விழித்தெழுந்து, திடுத்து நின்று வெளியில் நோக்கினேன். நடுத் தெருவில் இருவர் மத்தியில் வாத்தியார் நிற்கிறார். விரைந்தோடி வந்தேன். அதற்குள், இருவரில் ஒருவரை மேலும் அறைகிறார். அண்டினேன். என்னைப்போலவே விழித்துக்கொண்ட அக்கம் பக்கத்தோர் கூடினர். "என்னங்க, வாத்தியார்?" என்றனர்.

"திருட்டு ராஸ்கல் இவன்! நான் பார்த்துக்கொண்டேதான் இருந்தேன். இவன் மெதுவாக வந்தான்; படுப்பதற்கு இடம் பார்ப்பதுபோல் நடித்தான்; இவரது பக்கம் படுத்தான்; நானும் கவனித்தேன். மிகவும் நெருங்கி, மெள்ள அவரது வேட்டி முனையின் 'முடிச்சி'யை அவிழ்த்தான்; இவரும் விழித்தார். ஓடியவனை நானும் பிடித்துக்கொண்டேன்!... ஏண்டா? என்ன சொல்றே" என்று இறுதியில் ஓர் அறை தருவதற்குள், கள்வன் கைகூப்பி மன்னிப்புக் கோரினான். வாத்தியார் அவனை விட்டாலும் கூடியவர் விடவில்லை; கைப்பற்றிக்கொண்டனர்.

இதுமட்டுமல்ல — எதிர்பாராத சட்டத்திற்கு மீறிய துணிவு கொள்வார் புலவர்.

கவிகாளமேகம் கதை, வசனம், பாடல் மூன்றையும் ஆக்கித் தந்தவர் கவிஞர்தாம். P. S. செட்டியார், நம் புலவரிடத்தில் பற்றுடையவர். இத்தொடர்பில் பாடுபட்டுழைத்தவர். எனவே இவரது விருப்பப்படி, "வசனம், பாடல் — பாரதிதாசன்" என்றும், "கதை — P. S. செட்டியார்" என்றும் விளம்பரப்படுத்திக்கொள்ள இசைந்தார் புலவர். ஆனால், நாளடைவில் "கதை, வசனம் — P. S. செட்டியார்" என்று வரத் தொடங்கியது விளம்பரம். ஓரிரு முறைகள் செட்டியாருக்குப் புலவர் எச்சரிக்கையும் செய்தார். பிழை திருந்தவில்லை. தொடர்ந்தும், அப்படியே வந்தது. புலவர், புரட்சிக் கவிஞராயிற்றே! அலுவலகத்தில் அமர்ந்தபடி செட்டியாரை அழைத்தார்; அவரை எதிர் நிறுத்தி,

"என்ன P. S. செட்டி! உனக்குப் பலமுறை சொல்லி விட்டேன். தொடர்ந்து அப்படியே வருகிறது. இப்போ சொல்றேன்... என் தகவலில் ஜாக்கிரதையாக நடந்துகொள். ஏன் தெரியுமா?—நான் புதுச்சேரிப் பேர்வழி — சுட்டுடுவேன்!" என்று விளாசினார்.

பிறர் அஞ்சத்தக்க தோற்றம், பீடு நடை, நிமிர்ந்த நோக்கு, கண்டிப்பான பேச்சு - இவையனைத்தும் புலவர்தம் பிறப்புரிமை. பற்றுக்குறைக்கு மீசையும் அலாதி! இங்ஙனேயில் வாத்தியாரின் சுட்டு விரலையே "துப்பாக்கி" என்று கருதினர் போலும் செட்டியார்!

* * *

வாத்தியாருக்குப் புகை பிடிப்பதுதான் பெரும் பழக்கம். சுருட்டும், சிகரெட்டும் கலக்கும் வழக்கம். ஆசிரியராக இருந்த போது, பள்ளியில் வகுப்பு நடத்தும்போது புகைத்துக் கொண்டும் போதிப்பார்.

நம் மக்களாட்சியில் 'உரிமை' படும்பாடு அங்கில்லை. பிரஞ்சிந்தியப் புதுவையில் உரிமை உண்டு.

அதிலும், கவிதைகள் எழுதும்போது பார்க்க வேண்டுமே; 'சங்கிலிப் புகை' என்பார்களே, அம்முறையில் ஓயாது பிடிப்பார். இதனால் இடையிடையே உடல் நலக்கோளாறும் காண்பதுண்டு. சிற்சில சமயம் சிந்தனையும், சிகரெட்டுமாக இருக்கையில் உணவுக்கு அழைக்கப்படுவார். வந்தமர்ந்து உண்பார். ஆனால், இடது கையில் சிகரெட்டும், புகையும்! இதைக் கண்ணுற்றவர் கூறிய பின்னரே, எறிவார்!

மிக விரைவில் உண்டு எழுவார். குளிப்பது, உடுப்பது, உண்பது முதலான அனைத்திலும் சுறுசுறுப்புள்ளவர்.

விருந்தினரை வரவேற்பதில் வாத்தியார் குடும்பமே சளைப்பதில்லை. பெரும்பாலும் விருந்தின்றிப் புசிப்பதில்லை. புலவருக்குப் புலால் உணவில்தான் பற்றுதல், காய், கறிகளைக் காட்டிலும்! உள்ளன்போடு எவரையும் வரவேற்பார். போலி உபசரிப்பை என்றும் மேற்கொள்ளார். அவரது அகமும், புறமும் ஒன்றுதான்!

* * *

இரவில் நெடுநேரம் எழுத்தில் அல்லது பேச்சில் ஈடுபட்டிருந்தாலும், விடியற்காலையே விழித்தெழுவார். இரவு கண் விழித்த நேரத்தைக் கணக்கிட்டுப் பிற்பகல் வரையிலும் தூங்கும் வழக்கம் அவருக்கில்லை!

உறக்கத்தில் சிறிது ஒலித்தாலும் விழித்துக் கொள்வார். அது மட்டுமல்ல, ஒவ்வோர் சமயம் சினங்கொள்வார். பகல் உணவுக்குப் பின் சிறிது நேரம் உறங்குவதும் உண்டு.

ஒருநாள், வீட்டில் வளரும் கோழி, தன் கால்களில் கட்டிய கயிறு சிக்கியதால் குதித்ததோடில்லை; கூவியும் விட்டது. அம்மா அதைச் சரிப்படுத்த முயல்கையில் மேலும் கூவியது. வாத்தியார் விழித்துக் கொண்டதோடில்லை; எழுந்தோடி அம்மாவை 'அறைந்து'ம் விட்டார். அம்மா வாய் பேசாது நடுங்கிப் போனார்கள். நாங்கள் கதிகலங்கிப் போனோம்!

எப்போதேனும் வாத்தியார் இப்படித்தான்!

சிறிதேனும் அறிமுகமில்லாத ஒருவரை, எவ்வகை விசாரணையு

பெருமை

விண்ணோ நிலவால்
விளக்கம் அடைந்தது.
தண்கடல் முத்தால்
தனிச்சிறப்புற்றது.
தரையோ தானறிந்தது
பிறர்க்குச் சாற்றும்
அருமை மக்களால்
பெருமை பெற்றது.

— பாரதிதாசன்

மின்றி முதல் நாளே முழுதாக நம்புவார். பல்லாண்டு பழகிய என் போன்றவன் மீதும், பிறர் சொல்வதை நம்பித் திடீரென ஐயுறுவார். அடுத்த நாளே அல்லது மிக விரைவிலேயே ஆராய்ந்து உண்மையைத் தெரிவார். உரியவரிடம், "நான நினைத்தது தவறுதான்". என்றுரைத்து வருந்துவார். பொய்யனை உடனே விலக்குவார்.

* * *

'மூகத்துக்காக' என்று எதையும் செய்யார். 'சரி'யெனத் தோன்றுவதைத்தான் செய்வார்; சொல்வார்.

அண்மையில், ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் பதவியில் இருக்கையில், திருச்சி வானொலி நிலையத்தில், ரெட்டியார் தலைமையில் கலை நிகழ்ச்சி ஒன்று! அதில் நம் புலவர்க்கும் பங்குண்டு.

ஆனால், அதே நாளில், தில்லையில 'வழியர்' ஒருவரின் திருமணத்தை நடத்தித் தரவே இசைந்தார்.

ரெட்டியார் அவர்களை மதிப்பவர் கவிஞர். என்றாலும், வானொலி மூலம் அன்றைய சேவையைவிடத் திருமண நிகழ்வே பெரிதெனக் கொண்டார்!

* * *

கவிஞர் நல்ல ரசிகர். இசை, நாடகம், நடனம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் அனைத்திலும் பற்றுதல் உடையவர்; இளைஞர்களிடமதே மதிப்புடையவர். கலைகளை ஆராய்வதில் கருத்து வேற்றுமை — கட்சி வேற்றுமை — துளியும் இல்லாதவர்; மாற்றாராயினும் அவர்தம் மாண்பினை, புலமையைப் பாராட்டும் பண்பினர்.

* * *

இப்படிப் பற்பல நண்பர்கள் உடைமைப் பெற்ற வாத்தியார், பாரதிதாசன் காசருமை தெரியாதவர் 'புலமை' ஒன்றுதான் அவரது சொத்து; அவருக்கமைந்த துணிவும், நேர்மையும் அச்சொத்தினைப் பாதுகாக்கும் அரண்கள்!

இனியும், இந்நாட்டுக்குத் தேவையாகும் அவரது கவிதைகள், வெள்ளப் பெருக்கெனப் பாய்ந்திடக் கோருவோமாக!

மிக விரைவில் பிறக்கப்படும் திராவிடத்தின் - சமதர்மக் குடியரசின் - "ஆட்சிப் பெரும்புலவராக"த் திகழ - இன்றே, நமது அழைப்பைப் பணிவன்போடு அன்னவர்க்கறிவித்து, இன்றுபோல் என்றும், தமது துணைவி, மக்கள், சுற்றம், நட்புடன் நீடூழி வாழ நாம் வாழ்த்துவோமாக!

எங்களூர்க் கவிராய கேசரி

சுகி

எங்கள் தெருவிலுள்ள தாய்மார்கள் ரொம்ப ரொம்பப் பாக்கியம் செய்தவாகள் குழந்தைகள் தூங்கவில்லையா? "கூப்பிடு மணவாள கேசரியை" என்பார்கள். விளக்கெண்ணெய் குடிக்கவில்லையா, மற்றபடி அடிதடி, சண்டை கூச்சல் எதற்கும் "கவிராயரைக் கூப்பிடு" என்பார்கள். நான் சிறு பையனாக இருந்தபோது, விளக்கெண்ணெய் குடித்தது, தூக்கத்திலிருந்து எழுந்தது எல்லாம் மணவாள கவிராய கேசரியார் பெயரைக் கேட்டுத் தான்.

இவ்வளவும் சொன்னதால் ஆசாமியைச் சித்தானைக் குட்டியாக நினைப்பது தவறு. ஈர்க்குச்சிபோல இருப்பார். பேச்சுத் தான் வெண்கலக்கடை யானை மாதிரி வரும். சும்மாவா பேசுவார்! மோனையும், எதுகையும் வந்துவிழும்; திண் திண்ணென மலைவீழ் அருவிமாதிரி விழும் எல்லாம் அறுசீர் நெடிலடி ஆசிரிய விருத்தங்கள். சொல்ல வேணுமா? பாட்டு முடியாதபடி மைல் கணக்காகப் போகும், போகும், போகும்! மங்கம்மா சாலை மாதிரி போகும். ஒரு சொல்லையடுத்து முடிக்காத அந்தாதி போலப் பாடிக்கொண்டு போவார். விஷயம் விட்டு விஷயம் தாவுவார்; பேச்சையும் முடிக்க மாட்டார். அத்தனை பெரிய தொண தொணப்பு. அவர் பாக்களிலே இலக்கணம் இல்லை என்பாரும் உளர்; அவர் வார்த்தைகளிலே நயம் இல்லை என்பாரும் அதனினும் உளர்; வெறும் வார்த்தைப் பந்தல்கள் என்று தெரிந்ததும், ஓதுங்குவார்களா? யாரும் மாட்டார்கள்.

உதாரணமாக இவர் பேச ஆரம்பிக்கிறார்:

> கடல் கடந்த கதிரோன் கதிர்கள் சாயும் கணப்பொழுதின் காம்பீர்யம் கண்ணுங் கருத்தும்க்கம்மேனகலந்தளிக்கும் கரத்திலே, கவரவல்லது; காயவல்லது; கலக்கவல்லது; கலாட்டாவல்லது.

உங்களுக்கு என்மீது சந்தேகம். இப்படியும் அர்த்தமற்றுப் பேசமுடியுமா என எண்ணலாம். 'க'வில் ஆரம்பித்த அவர் பிரசங்கம் ஒன்றை அச்சடிக்கத் தமிழ் நாட்டு அச்சகத்து க.க்கள் எல்லாம் சேர்ந்தாலும் நடக்காது. க என்ற அச்சுகள் கண்ணராவியாக வந்து கட்டுப்பாடின்றித் தட்டுக்கெட்டுக் கடலிடை அகப்பட்ட கட்டுமரமன்ன கால் தள்ளாடும். 'க'வுக்கு மட்டுமே இந்தக் கதியா? அன்று அன்று. அவர் வாய்ப்பட்ட எந்த முதல் மெய்யும், எந்த முதல் உயிரும், எந்த உயிர் மெய்யும் இதே கதியடைவது எங்களூரில் கர்ண பரம்பரை. இதைவிடுத்து, அந்



தாதிக்குள் அவர் புகுந்துவிட்டால், நாம் எறும்புப் புற்றுக்குள் தலைமூழ்கி இறங்கி நிற்கும் உணர்வு பெறுவோம். உடலெங்கும் அவஸ்தை, நச்சரிப்பு, நமைச்சல் எடுப்பதை அவர் சொற்கள் செய்துவிடும். சொல்கிற விஷயங்கள் நெல்லிக்காயை மூட்டை கட்டியதுபோல நெஞ்சோடு ஒட்டாமல் தனித்தனியே நிற்கும்.

நாம் கண்மூடி வீடுவது கெடுதல்; கெடுதலான காரியங்கள் நம் கண்ணில் மட்டுமா, கருத்திலும் நிறைய இருக்கின்றன; இருக்கின்ற பழைய சோறு இருக்க இருக்கப் புளிக்கும்; புளிக்கும் பொருளில் தலையாயது எலுமிச்சம் பழம்; மிச்சம் பழம் உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் எனக்குப் பிடிக்கும்; பிடிக்கும் கன்றுக்கும் வித்தியாசம் உள: உளதாயினும் இலதாயினும்......

மேலே நான் சொன்னது வெறும் வசனம்; அவர் சொல்லிப் போவது பாக்களிலே. அந்தப் பாக்களை நான் மேற்கோள் காட்ட முடியாதது என்மேல் குற்றமில்லை. சுருங்கச் சொல்லுகிற பழக்கமே நம்முடைய கவிராய கேசரிக்குக் கிடையாது; எந்தச் சிறிய கருத்தையும் 101 பாடல்களாகத்தான் சொல்லுவார். இவர் சொல்லிய எந்தப் பாடலையும் பூரணமாகச் செவிமடுத்தவரை யாம் எங்கணும் கண்டதில்லை; இந்த அபூர்வத் திறமை பெற்ற காரணத்தால், அவர் ஆயிரம் பதினாயிரம் ஏன் லட்ச மக்கள் கூடினாலும் சுலபத்தில் கலைத்துவிடும் அரிய திறமை படைத்திருந்தார். மகாநாடுகள் நடக்கிறது என்றால், இவர் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதனால் பெற்றோர்கள் இட்ட நாமம் போய் "நேர்வாளக் கவிராய சிங்கம்" என்று உபநாமமும் இட்டார்கள். வள்ளுவர் வாய்மொழிப்படி, இந்த நேர்வாளம் புகழோடுதான் தோன்றிப் பரவிற்று. இவர் பாட்டில் நாலைக் கூட யாரும் கேட்காத போது அதை மனப்பாடம் செய்தவர் யார்! நானும் மேற்கோள் காட்டாததற்கு இதற்கு மேலாகப் போனால் நான்தான் இக்கவியோ என்று நினைப்பீர்கள்.

இவரிடம் நெருங்குபவர்கள், தீயிடைப்பட்ட புழு; அல்லது தற்காலக் கொட்டகையிலுள்ளோர் வாயிடைப்பட்ட நெருப்பு; உடனே வெளியேற வேண்டும். ஆனால் ஆசாமி வரவரத் தன்னை அடைபவர்களைக் கவிதை வேலைக்குள் பக்குவமாக அடைப்பார்;

அடைத்துக் கொண்டு, மோனை மழையில் திணற அடிப்பார்; எதுகைப் புயல் வீசும்; கருத்துச் சூறுவளி மோதும். இப்படி இவர் பாக்கள் இயற்றுவதிலே பெரிய சூரர். இவர் வசனமே தெரியாதவர்; அழுகை கூடப் பாட்டாக இருக்குமென்று பெண்கள் சொல்லக் கேள்வி. இவர் அழுது பார்த்தவர்களை விட இவரால் அழுகை வரப்பெற்றோரே அதிகம். இவர் பாட்டைக் கேட்டவரும் கண்ணீர் வடிக்காமல் ஓட முடியாது. அப்படிக் கண்ணீர் வராவிட்டால், கேட்போர் அரசியல் அறிவாளிகளாக இருக்க வேண்டும்; அல்லது இவரைப்போல ஐந்தறிவுள்ள மாக்களாக இருத்தல் வேண்டும்.

இப்படிப் பாக்களால் புற்றீசல் போலப் படையெடுத்து மனித குலத்தைத் தாம் வதைப்பதை இவர் உணர்வது உண்டோ? அதுதான் கிடையாது. தம் மேதையை எங்களூரார் கடுகளவும் உணரவில்லையே யென வருந்துவார். தமது வருத்தத்தைச் சொல்லுவதையும் வசனத்தில் சொன்னால் யாரேனும் கேட்கலாம். ஆனால் அவருக்குக் கைகட்டி நிற்பது கவிதா தேவி! வருத்தத்தை ஆயிரமாயிரம் பாடல்களாக அடுக்குவார். வந்துவிழும். விழுமென்றால் கல்லும் உரலும் கலந்து விழுகிற மாதிரி போய் விழும். விழுந்த செவி என்னாகும்? அவருக்கு அக்கவலை யேது? இவர் கவிதை முழக்கம் சகிக்காமல், பிற ஊர்களுக்குக் குடியேறியவர்கள் பலர்; நிலபுலமுடைய ஒரு சிலர் போகாமல் இருக்கத்தானே முடியும். செவிப் புலன் வைத்தியர்கள் வந்து குடியேறினார்கள். கவிராயரால், செவி வைத்தியர்களுக்கு யோகம் பிறந்தது! இவ்வளவு சுருங்கக் கூறியும் மேற்படியார் பாடல் ஒன்றையேனும் நான் மேற்கோள் காட்டாமல் இருப்பது தவறுதான். இவருடைய பாடலின் நயத்தை ஒரு ஆராய்ச்சியாளர் சொன்னார்: "மோனை கண்டார்; முற்றும் காணார்" என்று சுருக்கமாகச் சொன்னதன் நயம் பாருங்கள். அளவுக்கு அதிகமான மோனைகள் வரும். எதுகைபற்றி இன்னொரு ரசிகர், "எதுகை கண்டாரை யாவரே கண்டார்?" என்கிறார். இவர் பாட்டில் எதுகையை முற்றும் தெரிந்தவர்களை நாம் பூவுலகில் பார்க்கிறோமா என்கிறார்.

* * *

இவ்வாறு நாளொரு பெண்டிரும் பொழுதொரு ஆடவரு



மாகத் திரண்டு திரள் திரளாக ஊரைவிட்டு வெளியேறுவதைக் கண்டு வருந்தினர். மனிதப் பூண்டே வேரற்றுப் போய் விடுமோ என்று கூடப் பயம். அவருக்குத் திருமணம் நடைபெறுமல் காலம் போய்க்கொண்டிருந்தது. அதனல் பாடல்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார். இவர் பூர்வோத்திரம் அறியாமல் பெண் கொடுக்க வந்தவர்கள், இவர் திறமைகளைக் கேட்டு, தங்கள் மகளிரைப் பாழ்ங்கிணற்றில் தள்ளினர்களே தவிர, இவர் கையில் கொடுக்கவில்லை. இவர் பாடல்களை மறந்தும், இவர் புகழை யாரும் மறக்கவில்லை.

தமக்குக் கலியாணம் நடக்கும் வரை வாய் திறப்பதில்லை, திறந்தாலும் வசனத்திற்காகத் திறப்பதென முடிவு செய்தார். கவிதைக்கு இருந்த ஆபத்து நீங்கிற்று: ஆனல் வளரும் வசனத்திற்குச் சனி பிடித்தது!

கவிதைக்குப் பயப்படாத தைரியசாலிகள், அவரது வசனக் கொப்புளங்களை, வார்த்தை வருவல்களைக் கண்டு பயந்தார்கள்: புரியவில்லையென ஏமாந்திருந்த பாமரர்கள் வசனத்தைக் கண்டு வனம் நாடினர்கள். அவர் பிராசமுள்ள மொழிகள் சுவாசத்தை 'மூழ்' பிதுங்கச் செய்தன! இதற்கும் மக்கள் அஞ்சுவதைக் கண்ட அவர் இரண்டும் கெட்டானுக மாறிய நோத்திலே பேசியவை வசன காவியமாக மிளிர்வதை அறிந்தார்கள்.

பண்டிதர்கள் வெறுத்தார்கள்; பள்ளி செல்வோர் வெறுத்தார்கள்: பாமரர்கள் வெறுத்தார்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக ரசிகர்களும் இவரைத் தீண்டவில்லை. எவன் இவருக்கு மாமன் முறை கொண்டாடி மகளைக் கொடுப்பான்; மச்சான் முறை கொண்டாடிச் சகோதரியைக் கொடுப்பான்? இவர் பேச்சை எந்தப் பெண்மணி புரிந்து கொள்வது! அவர் புனைந்த கவிதையும் அவர் பசிய வசனமும், அவர் உளறிய வசன கவியமும் அவரது திருமணத்திற்கு எமனாக இருந்தன.

கவிராயர் திருமணமற்று இருக்குங்கால், ஒருநாள் எங்களூருக்குள் பெரிய கார் ஒன்று வந்தது.

அதைவிடப்பெரிய மனிதர் அதற்குள்ளிருந்து இறங்கினார். அவரை விடப் பிரம்மாண்டமான காரியத்தைச் செய்தார்; நேரடியாக, மனவாள கவிராய கேசரி இடத்திற்குப் போய், அவரைத் தழுவிக் கொண்டார்; அவர் இந்தத் தழுவலை வரவேற்று தம்மை



ஒரு மனிதராக மதிக்கும் நபரைப் பார்த்து ஆச்சரியங்கொண்டார். கவிராயர் இதுநாள்வரை நினைக்காத காட்சி. மகிழ்ச்சி தாங்காமல் பாட ஆரம்பித்தார். அதுதான் தவறு. தொட்டிற் பழக்கம் போய்விடுமா? பாட்டுக்கள் ஆலங்கட்டி மழை போலக் கனவான் மனதில் பட்டன. செவிமடுத்தார்; அவர் பாக்களில் அர்த்தமும், வேகமும் போட்டியிட்டன. பாடப் பாட, வந்த கனவான் ஓடவில்லை; ஒழியவில்லை; அப்படியே இருக்கிறார்!

கவிராய கேசரிக்குப் பாட்டில் தடை விழுந்தது. தம்மை நாடி, ஒரு சந்திரன் சுவர்க்கி வந்துவிட்டார்; தாம் ஒரு புகழேந்தி; தம்மை நாடி ஒரு சடையப்ப வள்ளல் வந்துவிட்டார்; தாம கம்பனைப் போன்றவர் என்று இறும்பூதெய்தினார்.

"ஐயா தாங்கள்தாம் மானிட குலத்தின் மாணிக்கம் யாரோ? எவ்வூரோ?" என்று வசனத்தில் கேட்டார். பெரிய மனிதர் பேசவில்லை. பிறகு வசன கவிதையைக் கவிராயர் கையாள நேர்ந்தது. அதற்கும் 'கல்லுளிமங்கன் போலக் கனவான் இருக்கிறார். வசனமும், வசன கவிதையும் செய்யாத காரியத்தைக் கவிதை செய்யுமென, விட்டார் செய்யுட்களை. ஜில்லா போர்டு ரஸ்தாக்களில் கற்களை அள்ளிக் கொட்டுகிற மாதிரி வார்த்தைகளைக் கொட்டினார். அதற்கும் அந்த மகான் அசையவில்லை, ரோட்டு உருளை கிடந்த இடத்திலே கிடப்பதன்ன இருந்தார். வெண்பாவில் பாடிப் பார்த்தார்; அப்பால் ஆசிரியப்பா; அதனையடுத்துக் கலிப்பா...ஒன்றையும் லட்சியம் செய்யவில்லை கனவான்!

"ஐயகோ தாங்கள் யாவீர்? எற்றக்கு இவண் எழுந்தீர்? சாற்றுமின்" என்று பணிவாகக் கேட்டார் நமது கேசரி. அப்போதும் அந்த மன்னன் அசைய வேண்டுமே. அடுத்த வினாடி கவிராயர் நெடுஞ்சாண் கடையாகக் கனவான் காலில் வீழ்ந்தார்.

"எழுமின்: விழிமின்: நடைமின்" என்று கவிராயரைத் தூக்கி நிறுத்தினர். கவிராயர் உள்ளம் கனிந்தது.

"ஐயகோ. யான் பகரப் பகர நீவிர் தேனில் விழுந்த ஈப்போலும், திராட்சை கண்ட நரிபோலும், மானிறைச்சி உண்ட சிங்கம்போலும் இருந்ததன் நுண்பொருள் என்னே? தாம் மனிதர் தாமோ? இல்லை இல்லை".

"நான் வந்த நோக்கம் வேறு. தங்கள் புகழ் கேட்டேன்; நேரில் கவிதை மழையில் நனைந்து ஜன்னியும் வந்துவிட்டது. தங்கள் பெருமையை அறிந்தவன் பயன்படுத்துவான் வேண்டி நுழைந்தனம்.'

அடடா! வெறும் வார்த்தைகள் கவிராயர் காதிலே எப்படிப் போய் விழுகின்றன! பாதாம் கீரில் குங்குமப்பூப்போல விழுகின்றன! அவர் உடல் குன்றியது; உள்ளங் குளிர்ந்த காரணத்தால். செவி நீண்டது; புகழ் கேட்ட ' காரணத்தால்! மருண்டார்; மயங்கினர்; தம்மையும் மறந்தார் கவிராயர். "அன்பரேறே! எது புகலினும் என்ன செய்யினும் யான் நன்றிக்கு மறப்பேன் அல்லேன்" என்று தழுதழுக்கப் பேசினர்.

"நூறு ரூபாய்" என்று சொன்னர். எவ்வளவு சுருக்கமான சொல். கடையெழு வள்ளலுக்கு அப்பால் தமிழகத்தில் ஒரு வள்ளல் இருக்கிருர். அதுவும் நூறு ரூபாயுடன் வந்துவிட்டார். அந்த நூறு ரூபாய் நூறு மடங்கு இன்பத்தோடு காதில் நுழைகிறது. கல கலவென ஓசையின்பம் தொடர்கிறது. கற்பனைக் குதிரையின் காலடியோசை அவரை எங்கோ தூக்கிச் சென்றது. ஆனலும் ஆசை யாரை விட்டது?

"என்ன யோசிக்கின்றீர்கள் கவிராயர்வாள்?"

"ஒரு வேண்டுகோள்."

"சொல்லுங்கள்."

"இன்னும் ஒரு ரூபாய்."


"நூற்றியொன்று!" என்று ஆச்சரியத்தோடு சொன்னர். ஒரு ரூபாயில் கவிராயருக்கு அவ்வளவு மோகம்.

"ஒப்புக் கொண்டேன். தங்கள் அரண்மனைப் புலவராக வருகிறேன்."

"வாக்குறுதிமாற மாட்டீர்களே?"

"என் கவிச் சொற்கள் பிறழ்ந்தாலும் நான் பிறழ மாட்டேன்."

"மிக்க மகிழ்ச்சி."



"தங்கள் கார் என்ன பாக்கியம் செய்ததோ?"

"ஏறிக்கொள்ளுங்கள்."

கவிராயர் பெருமானைக் கார் அதிலுள்ள பெட்ரோல் வாசனை, மெத்தை எல்லாம் புதிய உலகுக்குத் தூக்கிப் போயின. ஜில்லா போர்டு ரோடு அவரை இன்னும் மேலே மேலே தூக்கிவிட்டது. கார் ஓடிக்கொண்டிருந்தது.

சில மைல்களுக்கப்பால்...

பாட்டாளி மக்கள் பாடிக்கொண்டு பெரிய கல்லுருளையை இழுக்கிறார்கள்; அந்தப் பாதையில் வாகனப் போக்கு வரத்துத் தடை யென்பதைக் காட்டச் சிவப்புக் கொடி பறக்கிறது.

"இறங்குங்கள்."

கனவான் சொல்லை மறுக்காமல் கவிராயர் இறங்கினார்.

"தாங்கள் இந்த எல்லையில் இருங்கள். இந்தப் பாதை செப்பனிட்டு முடிந்ததும், வேறு பாதைகள் தங்கள் நட்பைக் கோர இருக்கின்றன. இதற்குத்தான் ரூ. 101 மாதச் சம்பளம்-இல்லை-வெகுமதி" என்றார் கனவான். அப்போதுதான் அவர் ஒரு பிரபல கண்டிராக்டர் என்ற எண்ணம் கவிராயருக்குப் பிறந்தது. மக்கள் போக்கு வரத்து, வண்டிகள் போக்கு வரத்து கலக்கப்படத் தாம் ஒரு கருவியாக மாறவேண்டும்! வாக்குறுதியை நம்பித் தொழிலை மேற்கொண்டார்.

"ரோடு ரிப்பேர்" நடக்கும் இடங்களில் பாடுவார்; பேசுவார்; இவை கேட்ட இலை மரங்கள் இலையை உதிர்த்தன, மானமுள்ள கவரிமான் போன்று. கற்கள் பாதையை விட்டுப் பெயர்ந்து நகர்ந்தன; கள்ளிச் செடிகள் குருத்திலேயே கருகின. தொழிலாளர் தகராறு ஏற்படும் சமயங்களிலே, கண்ணீர்ப் புகைக்குப் பதிலாக, கண்டிராக்டர் நமது கவிராயரைப் பயன்படுத்திக் கொண்டார். சில பொதுக் கூட்டங்களைக் கலைக்கக் கவிராயரை, இக்காலத்தில் ஒலிபெருக்கி வாடகைக்குப் போவதுபோல, அனுப்புவதும் உண்டு. கண்டிராக்டர் தொழிலுக்கு இவர் நன்கு பயன்பட்டார். இதற்குக் கைம்மாறாக கவிராயருக்குத் திருமணம் செய்விக்கக் கண்டிராக்டர் முயன்றும் நாளதுவரை நடக்கவில்லை. ஜன கணிதப்படி 1000-க்கு 1004 உள்ள தமிழ் நாட்டில் இந்தக் கவிராயர் மணமின்றி இருப்பது நியாயமா?

உங்களூரில் ஒரு பெண் இருந்தால், கண்டிராக்டருக்குத் தெரிவியுங்கள். அவர் பார்த்துக் கொள்வார். இவருடைய கவித்துவம் மங்கிப் போகாமல் இருக்கத் திருமணம் நடப்பதாக எண்ண வேண்டாம்; இவரைப் போல ஒரு பரம்பரை பின்னாளிலும் வேண்டுமே என்ற ஒரே நோக்கத்தோடுதான் கவிராயருக்குத் திருமணம் செய்விக்கக் கண்டிராக்டர் பாடுபடுகிறார்.

கவிராய கேசரி பரம்பரைக்கு யார் உதவி செய்யப்போகிறார்களோ? அவர்கள் நீடூழி வாழ வேண்டும்!

இருட்டறையில் உள்ளதடா உலகம்!...

ஜெகசிற்பியன்

காலைக் காப்பிக்குக்கூடக் கையில் காலணு இல்லாமல். ஒற்றைவாடை வீதிவழியே "நில்பாலன்ஸ்" நடை நடந்துகொண்டிருந்தேன்.

ஆறேமுக்காலணுவை ஜேபியில் போட்டுக் கலகலவென ஆட்டிக்கொண்டு செல்லும் 'அகாலமைனர்'களும், "மேவார் ·விலாச" யுவதிகளுமாகச் சேர்ந்து அந்த வீதியை நாகரிகக் குடையால் கவிழ்த்து மறைத்துச் சென்றுகொண்டிருந்தனர். அந்த உல்லாச மனிதப் புழுக்களிடையே, வீதியின் இரு பக்க நடைமேடைகளிலும், நாரும் நரம்புமாய் நலிந்து நடக்கக்கூடச் சக்தியில்லாமல் சுருண்டு படுத்துக் கிடந்த இச் சுதந்தரநாட்டு "வீரர்"களும், "வீராங்கனை"களும் நாகரிக உலகின் கண்களிலே விரலைவிட்டு ஆட்டிக்கொண்டிருந்தனர்!

இப்பேற்பட்ட அபூர்வ உயிர்க்கோலங்களின் "ஒப்பற்ற" பொம்மலாட்டங்களைப் பார்த்து ஓயாமல் "சிரித்து"க் கொண்டே வழிநடந்து கொண்டிருந்தேன்.

"ஐயா! தர்மதொரைங்களே!—பரதேசிப்பொணமுங்க!—ஒரு காலணுத் தர்மம் செய்துட்டுப் போங்க எசமான்!"

ஒற்றைக்கம்பி வீணையிலிருந்து எழும் அவல ஓசையைப்போல எழுந்து என் கவனத்தை வெட்டி இழுத்தது இந்தக் குரல்! சட்டெனத் திரும்பி நாற்புறமும் சுற்றிப் பார்த்தேன்.

புகைக்கரியால் "வர்ணம்தீட்டப்' பட்ட "சாயா"க் கடையொன்றின் ஓரமாக, எச்சிலைத் தொட்டியை அண்டையாக வைத்து, அதன் மறைவில் கிடத்திவைக்கப்பட்டிருந்தது ஒரு அநாதைப் பிணம்! அப்பிணத்தின் கால்மாட்டில் சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி, உயிருள்ள பிணமாக உட்கார்ந்து ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தாள்! அவளின் முந்தானையைப் பிடித்து இழுத்துக்கொண்டே, தீய்ந்துபோன வேர்க்கடலையைக் கொரித்துக்கொண்டிருந்தது, நான்கு வயதுள்ள "எலும்புச்சிலை" ஒன்று! அது வேர்க்கடலையைத்தான் தின்கிறதா? அல்லது மூக்கிலிருந்து ஒழுகி வழியும் சளியைச் சுவைக்கிறதா என்பதை என்னால் தீர்மானிக்க இயலவில்லை!

எதற்காக, எங்கு செல்கிறேன்; திரும்பிவந்து எப்போது என் அன்றாட வயிற்றுப்பிழைப்பைக் கவனிப்பது என்பனபோன்ற எண்ணங்களையெல்லாம் அறவே மறந்துவிட்டு, அப்பிணத்துக்குப் பத்தடி தொலைவிலிருந்த ஒரு தபால் பெட்டியினருகில் போய் நின்றுகொண்டேன். யாருடைய பாதுகாப்பிலுமில்லாமல் நாலுபேர் தின்றுபோடும் எச்சல் இலையைக்கொண்டு தன் வயிற்றை நிரப்பி வாழ்ந்துவரும் நாய், இரவில் யாராவது தனியாக வருவதைக் கண்டுவிட்டால் மாய்ந்து மாய்ந்து குலைக்கிறது. யாரின்—எந்த வீட்டின்—பாதுகாப்புக்காக அது குலைக்கிறது? யாருக்கு அது தன் கடமையைச் செய்யவேண்டும்? யாரையும் காப்பாற்றவேண்டிய பொறுப்பில் அது இல்லை; ஆயினும் அது குலைக்கிறது! நான் மேற்

கொண்டிருக்கும் தொழிலும் அந்த நாயின் அர்த்தமற்ற காவல்குலைப்புப் போன்றதேதான்!—அதனால் தான் என் அலுவல்களைக்கூட மறந்து அந்த அநாதைப் பிணத்தைப் பார்த்துக்கொண்டு அங்கேயே நின்று விட்டேன்.

சாயாக்கடை நாயரும் ஒரு நீலச் சொக்காய் ரயில்வேக் கூலியும் இவ்வாறு பேசிக் கொண்டார்கள்.

“எந்தடா, சுப்புக்குட்டி! நிங்ஙளோடே சேட்டன் செத்துப்போயல்லல்லோ?—”

“யாரு? நம்ம, சிலுவைமுத்துத் தானே!—நேத்திக்குக் கலுக்கத்தா மெயிலிலேருந்து இறங்கின ஒரு மொதலாளியோட மூணுமூட்டையை ஒண்ணாச் சேர்த்துத் தூக்கினானும்!—“மளுக்”கினு மூச்சிப் பிடிச்சிக்கிச்சி! அப்பவே வாயாலேயும், மூக்காலேயும் ரெத்தம் கக்கினானும்! அவ்வளோதான், எனக்குத் தெரியும். விடியறதுக்குள்ளே ஆளு குளோஸாயிப்பிட்டான் போலிருக்கு! பாவம், இனிமே அந்த அந்தோனாயம்மா கதி அதோகதி தான் அண்ணே!”—

அவர்கள் போய்விட்டார்கள்.

எனக்கு ஒருவாறு விஷயம் விளங்கிவிட்டது. முடிவில்லாப் பிரயாணத்தை ஆரம்பித்துவிட்ட அந்த அநாதைப் பிணம், ஒருரெயில்வேக் கூலி என்று!

“எங்கேயாவது ஒரு பொத்தல் காலணா சிக்கிக்கொண்டுகிடக்குமா? அதை அங்கப் பிணத்தின்மீது வீசியெறிந்துவிட்டுப் போய்விடலாமே” என்ற எண்ணத்துடன் என் ஐந்து விரல்களாலும் ஜேபியைச் சுரண்



டித் தழாவிப்பார்த்தேன். பிணத்தை வைத்து மூடாப் பிணக்குழிபோல வெறிச்சென்றிருந்தது என் ஜேபி! என்மீதே நான் இரக்கப்பட்டுக் கொண்டு மௌனமாக என் அனுதாபத்தை இன்னும் கொஞ்சநேரம் அப்பிணத்துக்காகச் செலவிட அங்கேயே நின்றுகொண்டிருந்தேன்.

திறந்த கண் மூடாமலும், பிளந்த வாய் பிளந்தபடியேயும் இருந்த அந்தப் பிணத்தின்மீது, நடைபயில ஆசைப்படும் ஈக்களையும், எறும்புகளையும் ஒருகையால் ஓட்டிவிட்டுக் கொண்டே, தனது பிச்சை ஒப்பாரியைத் "தொடர்காவிய"மாக்கிக் கொண்டிருந்தாள் அந்தோனியம்மாள்.

பட்டைபட்டையாகவிபூதியணிந்த ஒரு "சதைக்குன்று" அந்தப் பக்கம் "உருண்டு"கொண்டு வந்தது.

அந்த மேட்டுக்குடி "மனிதக் கடவுளை"ப் பார்த்ததும், தனது அவலக் குரலை "எழரைக் கட்டை"யில் வைத்துச் சுருதி கூட்டினாள் அந்தோனியம்மாள்.

அழுகுரலையே கேட்டு அறியாத அந்த உல்லாச புருஷன் அழுத்தலாக நின்று அநாயாசமாகத் தன் பார்வையை அப்பிணத்தின்மீது மேயவிட்டான். அப்பப்பா! எங்கிருந்துதான் அப்பேற்பட்டகருணை வெள்ளம் அவன் உள்ளத்தில் பாய்ந்ததோ தெரியவில்லை; தன் ஜேபியில் கையைப் போட்டு நிறையச் சில்லறையை வாரி, அதில் வெகு கஷ்டப்பட்டுத் தேடி ஒரு கட்டை அரையணாவை எடுத்து அப்பிணத்தின்மீது வீசப்போனதுதான் தாமதம்!—அடுத்த விநாடி ஏதோ ஒரு விஷ ஜந்துவால் தீண்டப்பட்டவன்போல நீட்டிய தன் கரத்தைச் சட்டென மடக்கிக்கொண்டு, எட்டிக்காயைச் சாப்பிட்டது போன்ற முகத்துடன் விர்ரெனப் பாய்ந்து மறைந்துவிட்டான் அந்த விபூதிக்காரன்!

அவனுடைய இந்தச் செய்கை எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அனைத்தையும் 'அறிந்துகொள்ள வேண்டுமென்று துடிதுடிக்கும் சின்னஞ்சிறு குழந்தையைப் போல நின்றுகொண்டிருந்தேன் நான்.

அந்தோனியம்மாள், தனது அழுகுரலை 'அரைமாத்திரை'யும் குறைக்காமல் 'லயசுத்தி'யோடு இழைத்துக்கொண்டிருந்தாள்.

கனமான செருப்பு, கையில் ஒரு குடை, வாயில் வெற்றிலைச் சோறு, நெற்றியில் நீளமும் பருமனுமான நாமம்—ஆகிய கோலத்துடன் "அவசர ஆபீஸ் நடை" நடந்துகொண்டு வந்தான் ஒரு 'அப்-டு-டேட்' வைணவன்! அவனுடைய தெம்மாங்குப் பார்வை அந்த அநாதைப் பிணத்தின்மீது எப்படியோ ஆரோகணித்து விட்டது! சிறிது தயங்கி நின்று தன ஜேபியைத் தடவிப் பார்த்துக் கொண்டான். பிறகு மடியிலிருந்து ஒரு 'முழுஅணா'வை எடுத்துக கொண்டு நேரே நாயர்கடைக்குப் போனான்.

இந்தத் 'தர்மப் பிரபு'வாவது அப்பஞ்சைப் பிணத்துக்கு ஒரு காலணாப்போடமாட்டானாவென ஏக்கத்துடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன், இரக்கப்படுவதை அல்லாது வேறொன்றையும் செய்ய 'வக்கு'இல்லாத நான்!

ரொம்பவும் சாவதானமாக ஒரு கத்தரிக்கோல் சிகரெட் வாங்கிக் கொண்டு கடைக்காரன் மீதம் கொடுத்த ஒரு தேய்ந்த காலணாவைப் பெருவிரலால் நெருடிக் கொண்டே, போக்கற்றுக் கிடந்த

அச்சவத்தண்டை வந்தான் அந்த நாமக்காரன்.

ஏதோ, காலணாவாவது தர்மம் செய்யப்போகிறானே என்ற திருப்தியில் அவனை என் மனதிற்குள்ளாகவே வாழ்த்திக்கொண்டு நின்றிருந்தேன்.

இளமை வாடை வீசிக்கொண்டிருந்த அந்தோனியம்மாளை ஒரு தினுசாகப் பார்த்துக்கொண்டே பிணத்தண்டைநெருங்கினான் அவன். அடுத்தவினாடி அவன்முகம் ஏனோ பிரேதக்களை பெற்றுவிட்டது! வெறுப்புடன் குனிந்து அப்பிணத்தின் கழுத்தைக் கூர்ந்து கவனித்தான். அதே சமயம் அவன் கையிலிருந்த அந்தத் தேய்ந்த காலணா அவன் அடிமடியில் ஓடிப்போய்க் காபந்தாக ஒளிந்துகொண்டது! பழுக்கக் காய்ச்சிய ஈட்டிகள் தன் இரு கண்களிலும் பாய்ந்தாற்போல முகத்தை வலித்துச் சுளித்துக் கொண்டு திரும்பியும் பாராமல் வாயு வேகமாக நடந்துவிட்டான் அவன்!

அந்தோனியம்மாள் அதே பல்லவியை இன்னும் நிறுத்தாமல் இழுத்துக்கொண்டுதான் இருந்தாள்.

நான் சிந்தித்தேன். மூளை குழம்பிப்போகும் அளவுக்குச் சிந்தித்தேன். வெறிகொண்டவன் போலச் சிந்தித்தேன். சிந்தித்துக் கொண்டே இருந்தேன்!

அந்தோனியம்மாள், ஏனோ தன் அடிவயிற்றைப் பிசைந்துகொண்டாள்! பிறகு அந்த அநாதைப் பிணத்தை அநாதையாக விட்டுவிட்டு, எதிரிலிருந்த கார்ப்பொரேஷன் 'ஒதுப்புற நிலயத்துக்கு' எழுந்துபோய்விட்டாள்.

இந்நேரம்வரை சாயாக்கடையின் கைப்பிடிச் சுவர்மீது உட்கார்ந்து 'ஓமகுண்டம்' வளர்த்துக்கொண்டிருந்த ஒரு சாயபு, அங்கிருந்து எழுந்து அவசர அவசரமாக அப்பிணத்தண்டை வந்தான்! சிந்திப்பதை எல்லாம் நிறுத்தி என் கவனத்தை அவன்மீது அழுத்தினேன்.

முண்டாசாகத் தன் தலையில் கட்டியிருந்த ஒரு கபிலித்துண்டை அவிழ்த்தான். அந்த முஸல்மான் பிறகு அத்துண்டை விரித்து அப்பிணத்தைப் போர்த்தினான்! செத்துப்போனவனின் பொத்தானற்ற நீலச் சட்டையைச் சரியாக இழுத்து மூடினான். சவத்தின் கழுத்தில் நெளிந்துகொண்டிருந்த ஒரு சிறு கறுப்புக்கயிறை ஏனோ அழுத்தி இழுத்துப் பின்புறம் ஒதுக்கி மறைத்துவிட்டான்!...

இவ்வாறெல்லாம் அவன் அப்பிணத்தை "அலங்கரிப்பது" எனக்கு விந்தையாக இருந்தது. ஒவ்வொரு விநாடியும் "கீழ்ப்பாக்க வாசி"யாகிக் கொண்டிருந்தேன்!

"மாராஜ்!—மாராஜ்!! நம்பன்கிபாய் செததுக்டக்கிறான்!— நம்பள் சமாதி செய்யறான் கையிலே தம படி கை!—எக்பைசா தே மாராஜ்!—எக்கணா தே கைணா!...—" காதில் ஒரு கையை வைத்து அடைத்துக்கொண்டு, போவார் வருவோரைப் பார்த்து மிகப் பரிதாபமாகக் கெஞ்சினான் சாயபு!

ரிக்ஷாவில் சென்றுகொண்டிருந்த ஒரு பணக்காரப் பட்டாணியன இந்தக் குரலைக் கேட்டதும் 'எய்' என்று கூவி ரிக்ஷாவை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கினான்! பிறகு அசையா உடலாய்க் கிடக்கும் அப்பிணத்தை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு, தனது குல்லாயைக் கழற்றி அதிலிருந்து ஒற்றைரூபாய் நோட்டொன்றை எடுத்துப் பிணத்தின் கால்மாட்டில் வைத்துவிட்டு, கண்களைமூடி ஏதோ முணகிக்கொண்டேபோய் ரிக்ஷா

வில் எறிக்கொண்டான் பட்டாணியன்! ரிக்ஷா நகர்ந்தது; பின்னர் 'பறந்தது'!

இந்தச் சமயத்தில் 'ஒதுப்புற நிலையத்துக்கு'ப் போன அந்தோனியம்மாள் கண்களைக் கசக்கிக் கொண்டே வெளியே வந்தாள் இந்நேரம்வரை ஓலமிட்டுக் கொண்டிருந்த சாயபு, அவள் வருவதைப் பார்த்ததும் சட்டெனக் குனிந்து அந்த ஒற்றை ரூபாய் நோட்டையும், பிணத்தைப் போர்த்தியிருந்த தன் கயிலியையும் வாரிச் சுருட்டி எடுத்துக்கொண்டு, வந்த அடி தெரியாமல் மெதுவாக அங்கிருந்து நழுவிவிட்டான்!—

நான் ஒவ்வொரு விநாடியும் ஆச்சரியத்தேரில் அமர்ந்து. ஆகாயத்தின் மேலே மேலே சென்றுகொண்டிருந்தேன்!

அந்தோனியம்மாள் வந்தாள். இறந்துபோன தன் கணவன் போட்டுக்கொண்டிருந்த சொக்காய் திருத்தமாக இருப்பதை அறிந்து திகைத்தாள். பின்னர்ப் பிணத்தின் கழுத்தில் நெளிந்துகொண்டிருந்த அந்தக் கறுப்புக் கயிறை வெளியே இழுத்து விட்டுவிட்டு மீண்டும் தன 'சந்திரமதிப் படலத்தை' ஆரம்பித்தாள்!

இதற்குமேல் என்னால் அங்கு நின்றுகொண்டிருக்க முடியவில்லை. உருட்டிவிட்ட சவத்தைப் போல நடந்து, உருளாமல் கிடந்த அந்த உண்மைப் பிணத்தண்டை நெருங்கினேன்.

மாஜி போர்ட்டரான சிலுவை முத்துவின் கறுத்த உடல்மீது என் கண்கள் மேய்ந்தன. அடுத்த விநாடி என் பிடரியில் யாரோ ஓங்கி ஒரு அறை விட்டாற்போன்ற அதிர்ச்சியால் கதிகலங்கிப் போய்விட்டேன் நான்! அத்தகைய அதிர்ச்சி எனக்கு ஏற்பட்டதற்குக் காரணம் வேறொன்றுமில்லை; செத்துக்கிடந்த சிலுவைமுத்துவின் கழுத்தில், சேவேறிப்போன கயிறொன்றில், பித்தளைத் தகட்டினாலான சின்னஞ்சிறு சிலுவையொன்று தொங்கிக் கொண்டிருந்ததுதான்!

இவ்வளவுநேரம் புதிர்ப் புயலில் அகப்பட்டுப் புத்தி மழுங்கிக்கொண்டிருந்த எனக்கு இப்போதுதான் விஷயம் ஒருவாறு விளங்கியது விபூதிக்காரன் விரைந்து சென்றதும். நாமக்காரன் நடுங்கி ஓடியதும், பட்டாணியன் தர்மம் செய்ததும் என் என்று!

இனிமேல் அங்கு நிற்க என்னால் இயலவில்லை.

நடந்துகொண்டே சிந்தித்தேன்!—

மதம், மனித மனத்திலே ஞானத் தாமரையை மலரச் செய்கிறதா? அஞ்ஞான அலரியைப் பூக்கச் செய்கிறதா?—

சிந்தித்தேன்!—

மதம், மனித மனத்தைக் கூட்டுவிக்கும் மாசற்ற கயிறாய் இருக்கிறதா? அல்லது அதைப் பிளந்தெறியும் கோடாரியாய் யிருக்கிறதா?—

சிந்தித்தேன்—

என் இன்பத்தமிழகத்தின் புரட்சிக் கவிஞருடைய "பாண்டியன் பரிசி"லிருந்து ஓர் பாடல் என் மூளையை மோதிக்கொண்டு வந்து நின்றது:

"இருட்டறையில் உள்ளதடா
உலகம்!—சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின் றானே!
மருட்டுகின்ற மதத்த
வாழ்கின் ற
வாயடியும் கையடியும்
மறைவ தெந்நாள்!"

Edited Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD. at PONNI ACHAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Mad- -21